வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள்

எழுதிய

ஜீவ ரகசியம்

என்ற அரிய ஆராய்ச்சி நூல் வெளிவந்துவிட்டது

உயிரை வளர்ப்பதற்கும், உய்விப்பதற்கும் உரிய வழிகளைப்பற்றி இந்நூலில் பெரிதும் ஆராயப்பட்டிருப்பதால் இதற்கு 'ஜீவரகசியம்' என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர்களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷயங்களில் தமது அறிவிற்கும் அநுபவத்திற்கும் உண்மையெனப்பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை—தேக சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட்டிருக்கிறது. நீராடும் நெறி, மூச்சு விடும் வகை, சூரியனால் அடையும் பயன், காற்றின் உபயோகம் சரீர நிலை அறிதல், வழிபாடுகளின் உண்மைத் தத்துவங்கள் முதலான பல இன்றியமையாத பொருள்களைப் பற்றியும் இதில் ஆராயப்பட்டுள்ளது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களின் உற்பத்தியைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந்நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1.

தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாதமுதலி வீதி, சென்னை.

அன்பே ஆண்டவன்

தமிழரசு

ஒரு செந்தமிழ் மாத வெளியீடு

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்...'

ஆசிரியர்: டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

OFFICE OF THE REGIS... 17 SEP 1937 MADRAS

மலர்	ஈஸ்வரஸு புரட்டாசிமீ	இதழ்
8	1937ஸு செப்டம்பர்மீ 15உ	9

பொருள் அடக்கம்

ஆசிரியர் குறிப்புகள்	...	506
என் சைக்கிள் கதை	...	511
கொச்சி சுற்றுப் பிரயாணம்	...	514
'தேவாதி தேவ, சதாசிவா'	...	516
கமலகாந்தா	...	521
'திவான் ஸர் நாதேரிஷா'	...	525
'பேய் கொண்டோடிய பெண்'	...	533
சிவகாமி அல்லது தன் கற்பை காத்த காரிகை	...	537
'கடிதத்தில் அடங்கிய கதை'	...	543
இராஜேந்திரன் அல்லது அதிசய முகமூடி	...	547
நீதி வாக்கியங்கள்	...	551
'விஜயராம் அல்லது போலிச் சாமியார்'	...	553
கிரபாதி	...	558
சாஸ்திரப்படி நடப்பினும்! சண்டாளனே யாவனோ!	...	566

குறிப்பு:—'தமிழரசி'ல் வெளிவரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாவர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவை யாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.

சென்னை சர்க்கார் வரவு செலவு

சென்னை முதல் மந்திரியும் பொக்கிஷ மந்திரியுமான திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் கடந்த மாதக் கடைசியில் சென்னை அசெம்பிளியில் (ஜனப்பிரதிநிதி சபையில்) சென்னை சர்க்காரின் வரவு செலவுத் திட்டத்தை ஆஜர் செய்துள்ளார். மாகாண சுயஆட்சியில் முதலாவதாக ஆஜர் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டம் அதுவே. அதில் அங்குமிங்குமாக ஒரு சில சொற்ப மாறுதல்கள் காணுவதைத் தவிர மற்றைப்படி அதற்கு முன் ஆஜர் செய்யப்பட்ட வரவு செலவு திட்டங்கட்கும் அதற்கும் வேறு அதிக வித்தியாசம் எதையும் காணோம். அதற்கு முக்கியமாய் இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று புதிய மந்திரி சபை வரவு செலவுத் திட்டத்தை சாவகாசமாய்த் தயாரிக்கப்போதிய அவகாசமில்லாதது. இரண்டாவது புதிய மந்திரி சபை ஆறு மாதங்கட்குத்தான் வரவு செலவுத் திட்டம் வகுக்க வேண்டும். ஏற்கனவே திட்டங்கள் போட்டு அதன்படி முன் ஆறு மாதங்கட்கு காரியங்கள் நடைபெற்றுவிட்டன. எனவே அதில் புதிய மந்திரி சபை மாறுதல் எதுவும் செய்ய இயலாது. ஒரு பெரிய மாகாணத்தின் நிர்வாக சம்பந்தமான வரவுசெலவு திட்டத்தை ஒரு வாரத்திலே அல்லது ஒரு மாதத்திலே வகுத்துவிட முடியாது. அதற்குப் போதிய அவகாசம் வேண்டும். சர்க்காரின் ஒவ்வொரு இலாகாவும் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் அனுப்பிக் கொண்டிருக்கும். பொக்கிஷ மந்திரி நிர்த்தாரமாக செலவிடவேண்டியது போக வரப்போகும் வருட வருவாயில் எவ்வளவு மீறும் என்று மதிப்பிட வேண்டும். பின்னர் அத்தொகையை புதிய திட்டங்கட்கு செலவிட ஒரு முறையை வகுக்கவேண்டும். புதிய திட்டங்கட்குச் செலவிட யோசிக்கும்போது எந்தெந்த திட்டங்கள் மிகவும் முக்கியமானவை, ஜனங்கட்கு நன்மைதரக் கூடியவை, லாபந்தரக் கூடியவை, அவசியமானவை என்பவைகளை எல்லாம் யோசிக்க வேண்டும். காங்கிரஸ்கட்சி ஜுலை மாதம் பிற்பகுதியிலேதான் மந்திரி பதவிகளை ஏற்றுக்கொண்டமையால் அது ஒரு மாதத்திற்குள் அவைகளை எல்லாம் துருவித்துருவி ஆராயக் காலமில்லை. எனவே காங்கிரஸ் மந்திரிசபை இவ்வருடம் வழக்கம்போல் நிர்வாகத்தை நடத்தும் முறையிலே வரவு செலவுத் திட்டத்தை வகுத்துவிட்டது. இப்படியாகவே இந்த வரவு செலவுத் திட்டத்தின் பேரில் காங்கிரஸ் மந்திரி

சபையின் செய்கைகளைப்பற்றி ஒருவித அபிப்பிராயம் கொள்ள முடியாது. காங்கிரஸ் மந்திரிசபை அடுத்த வரவு செலவுத் திட்டம் ஆஜர்செய்யும்வரை காத்திருந்து அதன்பிறகே அதன் செய்கைகளின் தாரதம்மியபத்தைப்பற்றி முடிவு கொள்ளவேண்டும். ஏனென்றால் அடுத்த வரவு செலவுத் திட்டத்தை அது ஆஜர்செய்யும்போது அது 'எங்கட்குப்போதிய அவகாசமில்லாததால் நாங்கள் அதைச் செய்ய முடியவில்லை, இதைச் செய்யச் சாத்தியப்படவில்லை' என்று கூற முடியாது.

காங்கிரஸ் மந்திரி சபையின் அந்த வரவு செலவுத் திட்டத்தில் புதுமாறுதல் எதுவும் காணப்படவில்லையாயினும், அதில் வியாபித்து நிற்கும் உணர்ச்சியை நாம் கவனிக்க வேண்டும். குடிகட்கு நன்மை செய்யும் உணர்ச்சியே அந்த வரவு செலவுத் திட்டம் முழுவதும் வியாபித்திருக்கிறது. உதாரணமாக காங்கிரஸ் மந்திரி சபை கட்டிடங்கட்கும் சாலைகட்கும் ஆதரவு காட்டுவதை தற்காலம் நிறுத்திவிட்டு, ஜனங்கட்கு குடி தண்ணீர் சப்ளை செய்வதற்கு ஆதரவு காட்டியுள்ளது. மற்றும் கையினால் நூல் நூற்று நெய்யும் தொழிலுக்கு இரண்டு லட்சம் ரூபாய் உதவியாக அளித்துள்ளது.

நாட்டுப் புறங்களில் புதிய வைத்தியசாலைகள் ஸ்தாபிக்கவும் பிள்ளைப்பேறு வைத்தியம் பார்க்க நர்ஸ்கள் நியமிக்கவும் பணம் உதவியளிக்கத் தீர்மானித்துள்ளது. இப்படியாக காங்கிரஸ் மந்திரி சபை முதற்கண் ஜனங்கட்கு இன்றியமையாது வேண்டப்படுவதில் அதிகக் கவனம் செலுத்தியுள்ளது குறிப்பிடத் தக்கது.

காங்கிரஸ் மந்திரி சபை சர்க்கார் சிப்பந்திகளின் சம்பளத்தை நூற்றுக்கு 2½ விதத்திலிருந்து 30 வரை குறைக்கத் தீர்மானித்துள்ளது. இதற்கு இந்தியா மந்திரியின் அநுமதி வேண்டுமாகையினால், இது சம்பந்தமாய் இந்தியா மந்திரியை அணுகத் தீர்மானித்துள்ளது. மற்றும் இப்பொழுது இருக்கும் சிப்பந்திகளின் சம்பளத்தை குறைக்க அது தீர்மானிக்கவில்லை. ஆனால் அச்சிப்பந்திகளை மேல் வேலைக்கு மாற்றும்போது இப்புதிய திட்டப்படிதான் அவர்கட்கு சம்பளம் கொடுக்கத் தீர்மானித்துள்ளது. மற்றும் 1937 ஏப்ரல் மாதம் முதற்தேதியிலிருந்து வேலைக்குப் புதிதாய் நியமிக்கப் படுபவர்கட்கு எல்லாம் இப்புதிய திட்டப்படிதான் சம்பளம் கொடுக்கப்படும். இந்த முறை சர்க்கார் சிப்பந்திகட்கு திருப்தியை யளிக்குமா என்பது இனித்தான் தெரியவேண்டும். இவ்விதம் குறைக்கப்படும் சிப்பந்திகளின் சம்பளம், வரிப்பளுவைக் குறைக்க பயன்படுத்தப்படும் என்று நம்புகிறோம்.

ஆனால் அந்த வரவு செலவுத் திட்டம் ஒருவகையில் பெரும் ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி அதில் பிரஸ்தாபிக்கப்படவேயில்லை. அடுத்த வரவு செலவுத்

திட்டத்திலாவது இதற்குப் பரிகார முறைகள் காணப்படும் என்று நம்புகிறோம். இந்த வரவு செலவுத் திட்டத்தில் காணப்படும் ஒரு நூதனம், கைபினல் நூற்று நெய்யப்படாத துணிகளை விற்பவர்கட்கு லைசென்ஸ் விதிக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதே. ஜவுளி வியாபாரிகள் இதைப்பற்றி எவ்வித அபிப்பிராயங் கொள்ளுவார்களோ நாம் அறியோம். நடப்பு வருடத்தில் சர்க்காருக்கு ரூ 1606,74 லட்சங்கள் வருமென்றும், செலவு போக ரூ. ஆறுயிரம் மீதப்படும் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்கல்

காங்கிரஸ் மந்திரிசபை ஹிந்தி மொழியை பாடசாலைகளில் கட்டாயப் பாடமாக்க உத்தேசிக்கிறது. ஒரு தேசத்தில் பல பாகங்களிலும் வசிக்கும் மக்கள் பேசிப் பழக ஒரு பொதுமொழி வேண்டுவது அவசியந்தான். அந்த அவசியத்தை பூர்த்திசெய்யவே ஹிந்தியைக் கற்கவேண்டும் என்று கூறப்படுகிறது. இப்பொழுது ஹிந்தியை கற்கக்கூடாது என்று கூறுபவர்கள் தமிழ்நாட்டில் மிகச் சிலரே. ஆனால் அதை கட்டாயப் பாடமாக்கும் நிலை இப்பொழுது ஏற்பட்டு விட்டதா என்பது சந்தேகந்தான். பிறமொழியை கற்கச்செய்யும் முன், அதைக் கட்டாயப் பாடமாக்கும் முன், தாய்மொழிக்கு தகுந்த பாதுகாப்பை யளிக்கவேண்டும் நம் தாய் மொழியாகிய தமிழோ பாடசாலைகளில் அதற்குரிய ஸ்தானத்தை அடையவில்லை. எனவே முதற்கண் தாய்மொழிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாது ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்கப் பார்ப்பது 'பெற்ற தாயை பசியால் வாடி வருந்தித் துடிதுடிக்க விட்டுவிட்டு ஊராருக்கு தானம் வழங்குவதையே' யொக்கும். காங்கிரஸ் மந்திரிசபை இது சம்பந்தமாய் அவசரப்பட்டு ஏதேனுஞ் செய்யாது, ஆர அமர யோசித்தே காரியஞ் செய்யவேண்டும். இது சம்பந்தமாய் சென்னை கார்ப்பொரேஷன் செய்திருக்கும் காரியம் நமக்குப் பெரும் வியப்பைத் தருகிறது. சென்ற ஆண்டில் கார்ப்பொரேஷன் தேர்தல் நெருங்கி வரும்வரை எதிர்கட்சியிலிருந்து தேர்தலின்போது திடீரென காங்கிரஸினிடம் அபிமானம் சாந்து அதில் சேர்ந்துகொண்ட மகான் திரு. எம். தாமோதரம் நாயுடு அவர்கள் 'கார்ப்பொரேஷன் ஆரம்பப் பாடசாலைகளில் ஹிந்தியைக் கற்றுக்கொடுக்கச் சாத்தியப்படும்படி 1920 ம் வருடத்திய ஆரம்பக்கல்விச் சட்டத்தின் மூன்றும் செக்ஷன் ஐந்தாம் விதிப்படி நிரூபணம் செய்யப்பட்டிருக்கும் விதிகளை மாற்றும்படி கார்ப்பொரேஷன் சர்க்காரை வேண்டிக் கொள்ளுகிறது' என்று ஒரு அவசரத் தீர்மானத்தை கொண்டு வந்தார். கார்ப்பொரேஷன் கவுன்சிலும் அதை நிறைவேற்றி விட்டது. கார்ப்பொரேஷனின் இச்செய்கையை நன்மை தீமை பகுத்தறியாது கண்மூடித்தனமாக செய்யப்படும் காரியம் என்றே

சொல்லுவோம். கொச்சையாகச் சொல்லவேண்டுமானல் 'கண் மூடித் தர்பார்' என்றே சொல்லவேண்டும். சர்க்கார்கூட ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதுபற்றி இன்னும் திட்டமான ஒரு முடிவுக்கு வரவில்லை. அது சம்பந்தமாய் அவர்கள் கல்வி டைரக்டரின் அபிப்பிராயத்தையும் இன்னும் கல்வியில் சம்பந்த முடைய குழுக்களின் அபிப்பிராயத்தையும் தெரிவிக்கும்படியே கேட்டிருக்கின்றனர். மற்றும் ஹிந்தியை கட்டாயப் பாடமாக்குவதாய் இருந்தாலும் 'கீழ்வகுப்புப் பையன்கட்கு அதைப் போதிக்க முடியாது, அதை முதல் பாரம், இரண்டாம் பாரம், மூன்றும் பாரங்கட்கே (ஐந்து, ஆறு, ஏழு வகுப்பு மாணவர்கட்கே) கட்டாயப் பாடமாக வைக்கவேண்டும்' என்றும் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். சர்க்காரின் நிலைமையே இவ்விதமிருக்க ஹிந்தியை ஆரம்ப பாடசாலை மாணவர்கட்கு கற்றுக்கொடுக்க வேண்டுமென்று யுக்திதோன்று, அதற்கு சர்க்காரின் அநுமதி கோரித் தீர்மானம் கொண்டுவந்த மேதாவியின் மூளையே மூளை. இது அதிகக் கஷ்டமில்லாது எளிதாக ஜனங்களின் நன்மதிப்பைப் பெற செய்யப்பட்ட செய்கையேயன்றி வேறல்ல. இம்மாதிரிக் காரியங்களில் முதலில் சர்க்கார் என்ன செய்யப்போகிறூர்கள், என்ன செய்கிறூர்கள் என்பதை பார்த்தபின்பே, கார்பொரேஷன் இம்மாதிரிக் காரியங்களில் தலையிடுவது நல்லது. அதுவரை அது தனக்கு ஏற்பட்டுள்ள வேலைகளில் கவனத்தை செலுத்துவதே சாலச்சிறந்தது.

சீன—ஜப்பான் யுத்தம்

சுமார் ஆறு வாரங்கட்கு மேலாக சீனவுக்கும் ஜப்பானுக்கும் கடும்போர் நடந்துவருகிறது. சர்வதேச சங்கம் ஏற்பட்டு, உலக சமாதானம், யுத்த தளவாடங்கள் குறைப்பு ராஜிப்பேச்சுக்கள் ஆரம்பித்தபின் மூன்று யுத்தங்கள் நடந்துவிட்டன. முதல் யுத்தம் அபிஸீனியாமீது இத்தலி படையெடுத்தது. இரண்டாவது யுத்தம் ஸ்பெயினில் நடக்கும் உள்நாட்டுக் கலகம். அந்தக் கலகம் ஆரம்பித்து சுமார் ஒருவருடத்துக்கு மேலாகியும் அது இன்னும் நின்றபாடில்லை. மூன்றுவதாக இப்பொழுது சீனவுக்கும் ஜப்பானுக்கும் யுத்தம் ஆரம்பித்து விட்டது. அபிஸீனியா, ஸ்பெயின் யுத்தங்களை விட இந்த சீன—ஜப்பான் யுத்தம் உலக யுத்தமாகமாற அதிக ஏதுக்களையுடையது. ஏனென்றூல் பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா முதலிய பல நாடுகட்கு சீனவில் பெருவாரியாக (வியாபாரச்) சொத்துக்கள் இருக்கின்றன. சீனவுக்கும் ஜப்பானுக்கும் இப்பொழுது நடந்துவரும் யுத்தத்தில் பிரிட்டிஷ் தூதரான சர். கியூக் நாச்புல்கியூகெஸன் சென்ற ஆகஸ்டு 26ந் தேதி ஜப்பான் ஆகாயப்

படைகளால் சுடப்பட்டார். அவர் தெய்வாதீனமாய்ப் படுகாய மடைந்ததுடன் உயிர்தப்பி விட்டார். இப்பொழுது அவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று குணமடைந்து வருகிறார். பிரிட்டன் இதைக் கண்டித்து ஜப்பானுக்கு கடிதம் அனுப்பியுள்ளது. அதில் ஜப்பான் பிரிட்டிஷ் சர்க்காரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும், சுட்டவர்களை தண்டிக்கவேண்டும், இனிமேல் இவ்விதமான காரியம் நிகழாதபடி தடுக்க அவசியமான ஏற்பாடுகளை எல்லாம் ஜப்பான் சர்க்கார் செய்வர் என்று உறுதிமொழி தரவேண்டும், என்று கேட்டிருக்கிறது. ஜப்பான் அதற்குப் பதிலளித்துள்ளது. ஆனால் அதன் அடக்கம் இன்னதெனத் தெரியவில்லை. சீன-ஜப்பான் யுத்தத்தில் ஆயிரக்கணக்காக ஜனங்கள் மடிகின்றனர். கட்டிடங்கள், ஊர்கள் தீக்கிரையாகின்றன.

வாத்தியாருக்குப் புத்தி புகட்டிய மாணவர்கள்

சிர்மூர் என்ற ஊரிலுள்ள பள்ளி உபாத்தியாயர், வகுப்பில் பையன்கள் இருமக்கூடாது என்று கண்டிப்பான உத்தரவிட்டார். இருமிய பையன்களை கடுமையாய்த் தண்டித்தார். பையன்களுக்கு இது மிகவும் சங்கடமாக இருந்தது. எனவே அவர்கள் இது முடியாத காரியம் என்று உபாத்தியாயருக்குப் புத்திபுகட்ட நினைத்தனர். அவர்கள் அவருடைய மேசைமீது பொடியைப்போட்டு வைத்தார்கள் பொடியின்காரம் ஏறவே உபாத்தியார் இருமினார். பையன்கள் அவரை உடனே வகுப்பு அறையிலிருந்து வெளியே தள்ளிவிட்டனர். அந்த உபாத்தியாயர் இதைப்பற்றி மாஜிஸ்டிரேட்டிடம் பிராது கொடுத்தார். ஆனால் மாணவர்கள் தாங்களாக ஒன்றுஞ் செய்யவில்லை என்றும், உபாத்தியாயர் வைத்த சட்டத்தை யொட்டியே அவரை வெளியே தள்ளினோம் என்றும் கூறினர். மாஜிஸ்டிரேட் உபாத்தியாயர் மாணவர்கள் கீழ்படிந்து நடக்கவேண்டுமென்பதை பிழைபட உணர்ந்து காரியம் செய்ததானால் மாணவர்கள் செய்தது சரி என்று சொல்லி பிராதைத் தள்ளிவிட்டார்.

கன்னியின் மாட்சியோ அல்லது தெய்வச் செயலோ!

ஐக்கியமாகாணத்தில் சாந்தி என்னும் கிராமத்தில் ஒருபெண் தனது காளைமாடுகளை வயலிலிருந்து விட்டிற்கு ஓட்டிச்சென்றாள். அப்பொழுது இரண்டு போக்கிரிகள் கெட்ட நோக்கத்துடன் அவளை காட்டுப்பாதையில் வழிமறித்து வம்புசெய்ய வாரம்பித்தனர். தனது உதவியற்ற நிலைமையைப் பார்த்த அப்பெண் கடுமையாக அழலானாள். அவள் அவ்விதம் அழுதுகொண்டிருக்கும்போது இடிமின்னலுடன் கருமேகம் தோன்றிற்று. இடியினாலும் மின்னலினாலும் ஒருவன் இறந்தான். மற்றவன் மூர்ச்சைபற்று கீழே விழுந்தான்.

என் சைக்கிள் கதை

['குமாரன்']

எந்த நகரத்திலும் இடறிவிழுந்தால் சைக்கிளின்மீது தான் இடறிவிழவேண்டும் என்றிருக்கிற போது, நானும் ஒரு சைக்கிள மீது ஏறிவிழுந்ததில் வியப்பில்லையல்லவா? வண்டி என்னவோ பழசு தான்; விலையட்டும் ஒன்றுக்கு மூன்றாய்விட்டது. எல்லாம் மத்தியிலிருந்த பொதுமனுஷாளின் தீர்ப்பினால்தான் இப்படி அதிகவிலை கொடுத்து அதை வாங்கும்படியாயிற்று என்ற விஷயம் பின்னால் தெரியவந்தது. 'என்ன செய்வது? யாரை நோவது? எல்லாம் விதிப்பயன்' என்ற பாட்டியம்மாளின் அனுபவப்பேச்சை யொட்டித்தான் நான் இப்போது எதிலும் துணிந்து விடுகிறேன்.

அப்பெண் வீட்டிற்கு ஓடிச்சென்று வழியில் நிகழ்ந்தவற்றை கிராமத்தாரிடம் கூறினாள். அவர்கள் அவ்விடம் வந்து செத்துபோனவனின் கருகிய உடலையும் இன்னும் மூர்ச்சை தெரியாது கிடந்தவனையும் ஊருக்கு எடுத்துக்கொண்டு வந்தனர்.

இதை கன்னியின் மாட்சி என்பதா அல்லது தெய்வச்செயல் என்பதா!

மற்றொரு காங்கிரஸ் சர்க்கார்

இதுவரை ஆறு மாகாணங்களிற்றான் காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டிருந்தது. இப்பொழுது எல்லைப்புற மாகாணத்திலும் காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டுவிட்டது. இதற்கு முன்னிருந்த மந்திரிகள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றவே அவர்கள் ராஜிநாமாச் செய்துவிட்டனர். எனவே இப்பொழுது அங்கு எல்லைப்புற காந்தியின் சகோதரர் டாக்டர் கான்சாகிபை முதல் மந்திரியாகக் கொண்டு காங்கிரஸ் மந்திரிசபை ஏற்பட்டுவிட்டது. எல்லைப்புற மாகாண அசம்பிளியின் மொத்த மெம்பர்கள் 50 பேர்கள். அதில் 19 பேர்களே காங்கிரஸ் வாதிகள். மற்றும் எட்டுப் பேர்கள் காங்கிரஸை எப்போதும் ஆதரிப்பதாய் கையொப்ப மிட்டுள்ளார்கள்.

சைக்கிளுக்கு மணிக்கோ, ஹாரனுக்கோ குறைவில்லை. முன்னால் ஹாண்டில்பாரின் மத்தியில்கூட ஒரு அழகான தேசியக்கொடி பறக்கிறது எத்தனை அலங்காரங்கள் இருந்தென்ன? பிரேக்மட்டும் கொஞ்சம் பழுதுதான்; சட்டென்று சக்கரங்களைப் பிடிப்பதில்லை. ஓடும்பொழுது 'கொட கொடா' வென்ற சப்தம்வேறு. இவை போதாவா என் வண்டியின் பெருமைகளை எடுத்துக்காட்ட!

நான் சைக்கிள்விடக் கற்றுக்கொண்டதெல்லாம் ஒரு பெருங் கதை. அதை இப்போது சொல்லித் தீர்ப்பதென்றால் என்னால் முடியவே முடியாது; உங்களால் அவ்வளவு பொறுமையுடனிருந்து கேட்கவும் முடியாது. மூஞ்சியிலும் முகத்திலும் (மூஞ்சி வேறு முகம் வேறாயிருந்தால்) காயங்கள், முழங்காலிலும் கணுக்காலிலும் பலமான அடி, கழுத்திலும் கைகளிலும் சுளுக்கு, இவ்வித வெகுமதிகளுடன் ஒருவாறு கற்றுக்கொண்டேன் என்று சுருக்கமாகச் சொன்னால் உங்களுக்குக் கொஞ்சமாவது புரிந்திருக்காதா?

இந்த ஒருவாறு என்னவென்று நீங்கள் ஒருவேளை சந்தேகப் படலாம். ஆதலால் சொல்லிவிடுகிறேன். அத்தனை சிரமப்பட்டு கற்றுக்கொண்டும் இன்னும் பெடலில் கால்வைத்து ஏற எனக்கு வரவில்லை. பின்னாலிருந்துகொண்டு தத்தி தத்திக் கொக்குமாதிரி தாவி ஏறத்தான் வேண்டியிருக்கிறது. இந்த கொக்கு உதாரணம் சரியோ தப்போ எனக்குத் தெரியாது. ஆனால் நான் சைக்கிள் ஏறும்போதெல்லாம் அதுமாதிரி ஏறுவதாக 'அவள்' சொல்லுவாள்.

இந்த நிலையில் அந்தப் பழய ஆனால் எனக்குப் புதிய அந்த சைக்கிளும் வந்துசேர்ந்தது. வந்த அன்றே ஒரு சம்பவம் நடந்தது.

அடுத்தாத்து ராமுதான் அதை விலைபேசி வாங்கிக்கொண்டு வந்தவன். வந்ததே 'இந்தாப்பா! நன்னா ஏறிப்பாத்துக்கோ, அப்புறம் அப்படி இப்படீன்னு சொல்லாதே' என்று சொல்லி அதை ஒருமுறைவிட்டுப் பார்க்கச் சொன்னான். நானும் பின்புறமிருந்து தாவி சீட்டில் உட்கார்ந்துகொண்டு பெடலை மிதித்தேன். ஒரு பர்லாங்தூரம் போயிருப்பேன். எதிரே ஒரு மாது தலையில் அரிசிக் கூடையுடன் தோன்றினாள். அவள் என் வண்டியில் மோதிக்கொள்வாளோ என்று பைக்கை கொஞ்சம் வலப்பக்கமாகத் திருப்பினேன். அவளும் அந்தப் பக்கமாகவே திரும்பினாள். அதுகண்ட நான் பதறிப் போய் இடதுபக்கமாக என் வண்டியைச் சாய்த்தேன். அவளும் உடனே அந்தப் பக்கமாகத் திரும்பினாள். அப்புறங் கேட்பானேன்! தடாலென்று அவள் கூடையுடன் நிலத்திற் சாய்ந்தாள். நானும் என் சைக்கிளைப் போட்டுக்கொண்டு அவள்மீது விழுந்தேன். அவளுடைய முழங்காலிலும், பாதத்திலும் காயமேற்பட்டு உதிரம் பெருகிற்று. 'நீ நாசமாய்ப்போக! ஊருக்கு வருகிற காளியாயி உனக்கு முதலில் வா!......' என்றெல்லாம் உரத்தகுரலில் ஆசிர்வாதஞ்செய்யத்

தொடங்கிவிட்டாள். உடனே அங்கே ஒரு பெரிய கும்பல் கூடி விட்டது. அப்போது அந்தக் கும்பலிலிருந்த ஒருவன் என் சிகையைப் பிடித்துக் குலுக்கிவிட்டு கன்னத்திலும் பளீரென்று ஒரு அறை கொடுத்தான். அந்தமட்டில் தப்பியதே போதுமென்றெண்ணி வண்டியுடன் வீடுதிரும்பினேன்.

அடுத்தபடியாக நடந்த சம்பவமொன்று அதையுஞ் சொல்லி விடுகிறேன். இரண்டு தினங்கள் கழித்த பிறகு சாயங்காலமாகக் கடைவீதியை நோக்கி என் பைக்கில் போய்க்கொண்டிருந்தேன். ஒரு பாலத்தருகில் எதிரே ஒரு மோட்டார் வந்தது. உடனே என் உள்ளமும் உடலும் வெலவெலத்துப் போய்விட்டன. அந்த பயத்திலும், நடுக்கத்திலும் என் சைக்கிள் அந்த மோட்டாருடன் யுத்தம் செய்யும்போலிருந்தது. எங்கே அந்த மாதின் வாக்கு பலித்து விடுமோ என்று அஞ்சினேன். நல்லவேளையாக அந்த மாதின் சாபத்தால் நான் நாசமாய்ப் போய்விடவில்லை. எப்படியோ என் வண்டி கொஞ்சம் விலகிப்போய்விட்டது. ஆனால் சைத்தான் என்னை முழுதும் விட்டுவிடவில்லை.

என்னுடைய தடுமாற்ற நிலைமையைப் பாலத்தருகில் நின்றிருந்த 218 நெ. பார்த்து விட்டான். உடனே என்னைத் தன்னருகில் வரும் படி சைகை செய்தான். நான் நெஞ்சில் திகிலுடன் வண்டியைவிட்டுக் கொண்டே அவனருகிற் சென்றேன். அருகிற்போனதே பிரேக் பிடிக்காததால், சைக்கிளிலிருந்து நான் கீழே குதிக்க நேரிட்டது. குதித்த வேகத்தில் வண்டி கான்ஸ்டேபிள் கால்விரல்கள்மீது ஏறிக் கீழேவிழுந்தது. அப்போது அவன் 'உஸ்' என்று துள்ளிக் குதித்து விட்டு என்னைத் தன் சிவந்த கண்களால் வெறிக்கப் பார்த்தான். பிறகு 'எந்த ஊரடா நீ! உன் பெயரென்னடா?' என்று தன் டைரிப் புத்தகத்தை எடுத்து விரித்தான்.

அதற்குள்ளாக நான் கீழே விழுந்துகிடந்த சைக்கிளை மெல்லத் தூக்கி நிறுத்திவிட்டு என் மணிபாக்ஸைத்திறந்து இரண்டு ரூபாய்கள் எடுத்து அவன் கையில் வைத்தேன். தன்னைச்சுற்றி ஒரு முறை பார்த்துவிட்டு ரூபாய்களை சோப்பில் போட்டுக்கொண்டான். அவனுடைய கோபமெல்லாம் பறந்துவிட்டதைக் கண்ட நான் அதுதான் சமயமென்று வண்டியைத் தள்ளிக்கொண்டே அவ்விடத்தினின்றும் அகன்றேன். ஆனால் அதற்குப் பிறகு நான் அந்த வண்டியில் ஏறவேயில்லை.

வண்டி இப்போது அக்குவேறு ஆணிவேறாகப் பரண்மீது தூங்கிக்கொண்டிருக்கிறது. யாருக்கேனும் விலைக்குத் தேவையாயிருந்தால் உடனே ஆர்டர் அனுப்ப மறந்து போகாதீர்கள்!

கொச்சி சுற்றுப் பிரயாணம்

[டாக்டர் மே. மா.]

மலையாள தேசத்தைச் சேர்ந்த கொச்சி ராச்சியத்தை சுற்றிப் பார்த்தபோது கண்டவைகளை எழுதலானேன். அவற்றுள் முக்கியமாக இவ்விதழில் காலடி என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் ஒரு வகுப்பாரின் எதேச்சாதிகாரத்தை இங்கு விளக்குகிறேன்.

நானும் பல நண்பர்களும் எர்ணாகுளத்திலிருந்து இரண்டு ஸ்பெஷல் கார் வைத்துக்கொண்டு காலை 7 மணிக்குப் புறப்பட்டு ஆற்றைக் கடந்து கஷ்டப்பட்டு மாலை சுமார் 3 மணிக்கு காலடி வந்து சேர்ந்தோம். கோயில் கதவு பூட்டப்பட்டிருந்தது. நகரத்து செட்டிமார்கள் பார்ப்பனர்களுக்கு சாப்பாடு இலவசமாய் அளித்து வேதம் கற்பித்து (படிப்பதற்குச் சம்பளமும் கொடுத்து) வரும் பாடசாலைக்குப்போய் கோயில் மானேஜரைப்பற்றி விசாரித்தோம். பிறகு மானேஜர் இருப்பிடம் அறிந்து அவரை யணுகி 'நாங்கள் ரொம்ப தூரத்திலிருந்து வந்திருக்கிறோம் மீண்டும் எர்ணாகுளம்போக இரவு 10 மணியாகும். ஆதலால் கோயிலைத் திறந்து காட்டவேண்டும் எனக் கேட்டோம். அதற்கு அப்பார்ப்பனர் 'இது பயாஸ்கோப் கொட்டகையல்ல. வேண்டும்போது திறக்கமுடியாது. 5 மணிக்குமேல்தான் திறந்து காட்டமுடியும்' என்றார். (சாமியை கோயிலில் பூட்டிவைத்து காட்டி பணம்வாங்கும் தொழில் நீங்கள் செய்யவில்லையா? அர்ச்சனைக்குப் பணம் ஆரத்திக்குப் பணம் கேட்பதில்லையா) 'தாங்கள் சிருங்கேரி மடத்திலிருந்து வரும் 50 ரூபாயை மாதச் சம்பளமாக பெற்றுக்கொண்டு பெண்டுபிள்ளைகளோடே கோயில் சாப்பாடு சாப்பிட்டு வருவதால் பொதுமக்களின் தயவு உங்களுக்கு வேண்டிய அவசியம் இல்லை' போலும் என்று சொல்லிவிட்டு உபநிஷத் வாசிக்கும் பார்ப்பனக் கூட்டத்தில் இருந்த ஒரு சன்னியாசியைப் பார்த்து 'தாங்கள் எப்போதாவது கோயிலூர் மடம் போனதுண்டா எனக் கேட்டேன். உடனே அவர் செட்டிப்பசங்கள் மடமல்லவா? நான் பார்ப்பான் அங்கு போகமாட்டேன். சிருங்கேரி மடத்திலிருந்து வந்திருக்கிறேன்' என்றார்.

அவர் கூறிய ஏகவசனத்தைக் கேட்டதும் ஆத்திரம்கொண்ட நான் அவரை நோக்கி 'ஏனையா காஷாயம் தரித்தீர்? ஜாதி அபிமானம் உள்ளவரையில் பஞ்சமனல்லவா? இதைக்காட்டிலும பெண்ஜாதி பிள்ளையோடு வீட்டிலிருப்பது நல்லது. உமது மதத்திற்கு விரோதமாகப் பேசுகிறீர் நீர். சன்னியாசிக்கு ஜாதியேது?' என்றேன்.

'சன்னியாசம் கொண்டாலும் தேகம் இருக்குமல்லவா? தேகமிருக்கும் வரையில் ஜாதி அபிமானமும் இருக்கவேண்டும்' என்றார்.

ஆனால் 'அகம்பிரம்மாஸ்மி' என்ற மந்திரம் உங்களுக்குப் பொருத்த மில்லையாதலால் அந்த மந்திரத்தை விட்டுவிட்டு நான் பார்ப்பான், நான் காவி தரித்தவன், தண்டம் வைத்திருப்பவன், இம்மலபாண்டம் நானாய் இருக் கிறேன், நான் உயர்ந்த குலம் சுகஜீவனம் செய்யும் வகுப்பில் சேர்ந்தவன் எனவாகி தியானம் செய்துகொண்டிருக்கும் உம்மைப் பார்க்கிலும் இங்கு வந்துள்ள நாங்கள் உயர்ந்தவர்கள். நீர் சங்கராச்சாரியின் பேரைச் சொல்லி சம்பளமும் வாங்கிக்கொண்டு சுகபோஜனம் உண்டு வாழும் வகுப்பாரைச் சேர்ந்தவர். உங்களை உயர்வகுப்பினர் என எண்ணி பணத்தை வாரி உங்க ளுக்குக் கொடுத்து உங்கள் உத்தரவின் பேரில் சாமியைக் காணவேண்டும் என எண்ணும் சோணகிரிகள் இந்நாட்டில் இருக்கும் வரையில் உங்கள் ஆணவம் அடங்காது' எனச் சொல்லிவிட்டு வெளியிலிருந்து தரிசனம் செய்ததாக (சங்கராச்சாரியாரை வியாபக ரூபமாய்) நினைத்துத் திரும்பி விட்டோம்.

அதுசமயம் என்னோடுகூட வந்திருந்த தனவைசியர்கள் மனம் புண்ணாகி நம்முடைய பணத்தைச் சாப்பிட்டுக்கொண்டுவரும் இச்சண்டாளர்கள் நம்மை இழிவாய் பேசுவதும், (செட்டி பிள்ளைகள் ரேசில்போய் பணம் தொலைப்ப தாகவும் தங்களுக்கு இன்னும் அதிகமாய்க் கொடுக்கவில்லை என்றும் ஏசும் காலடி கோயில் மானேஜரின் அகங்கார வார்த்தையையும்பற்றி கவலையுடன் பேசிக்கொண்டே எர்ணாகுளம் வந்து சேர்ந்தனர். காலடி தர்ம பாடசாலைக்கு பணம்தரும் செட்டிப்பிள்ளைகள் இதனை விசாரித்தறிந்து தக்க பாடம் கற்பிப் பார்களா? சிருங்கேரி மடாதிபதியும் இதை கவனிப்பாரா? கூடவந்திருந்த வரில் ஒருவர் சவுத் இந்தியன் கார்ப்பரேஷன் லிமிடெட் கொச்சியின் ஏஜெண்டாகும்.

(தொடரும்)

தகப்பனார்:—உன்னை வாத்தியார்கிட்ட சொல்லி வெளுக்கச் சொல்றேன்.

மகன்:—என்ன அப்பா இப்படி சொல்றே! வாத்தியார் வண்ணான வெளுக்குறதுக்கு.

* * *

புருஷன்:—அடியென் கண்ணாட்டி நான் சொல்கிறதை கேட் கிறயா?

மனைவி:—நீங்க எப்ப பார்த்தாலும் இப்படித்தான் கண்ணாட்டி கண்ணாட்டி என்று சொல்றிங்களே நான் என் கண்ணை ஆட்டிக் கொண்டு இருக்கிறேனா.

—திருப்பதய்யா பிள்ளை.

ஓர் வாடிக்கைக்காரர் கடைக்காரியைப் பார்த்து, 'என் மனைவி இந்த கடையிலிருந்து எங்கேயோ போய்விட்டாள். ஆகையால் உன்னுடன் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருக்கிறேன்.'

கடைக்காரி:-அவளை தேடுவதைவிட்டு என்னுடன் பேசுவானேன்?

வாடிக்கைகாரர்:—நான் உன்னைப்போன்ற ஒரு பெண்ணுடன் பேசுவதைக் கண்டால் அவள் உடனே வந்துவிடுவாள்

—S. மஹபூப்கான்.

'தேவாதி தேவ, சதாசிவா'

['நந்தகோபன், மணல்மேடு']



எம். தியாகராஜன் எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் வாசித்து வருபவன். மிகவும் கெட்டிக்காரப் பையன். அவனைப் பள்ளியில் எல்லா மாணவர்களும் எம். டி. ராஜன் என்று கூப்பிடுவது வழக்கம். ஆனால் அந்தப் போக்கிரி ஹெட்மாஸ்டர் சதாசிவ ஐயர்மட்டும் மொட்டையாக எம். டி. என்று கூப்பிடுவார்.

தன்னை எம். டி. என்று கூப்பிடும் ஹெட்மாஸ்டரைக் காணும் ஒவ்வொரு கணமும் அவரை அப்படியே விழுங்கிவிடலாமா என்று நினைப்பான் எம். டி. ராஜன். ஆனால் பாழும் தெய்வத்துக்குக் கண்கள் இல்லை. ஏன் என்று கேட்கின்றீர்களோ? அவரை விழுங்கப் போதுமான வாயும் வயிறும் எம். டி. ராஜனுக்குக் கொடுக்காமல் போய்விட்டதல்லவா? அந்த தெய்வம்.

நீங்களே சொல்லுங்கள். நல்ல கெட்டிக்காரப்பையன் ஒருவனை எம். டி. என்று கூப்பிட்டால் யாருக்குத்தான் கோபம்வராது? நமக்கே இவ்வளவு கோபம் வருகின்றதே, எம். டி. என்று கூப்பிடப்படும் எம். தியாகராஜனுக்கு எவ்வளவு கோபம்வரும்?

நாட்களும் ஓடிக்கொண்டே இருந்தன. ஹெட்மாஸ்டரும் எம். தியாகராஜனை முறை தவறாமல் எம். டி. என்றே கூப்பிட்டு வந்தார். எம். டி. ராஜனுக்கோ வரவர வைராக்கியம் முதிர்ந்தது. கோபம் மனதில் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது. எப்படியாவது அந்த ஹெட்மாஸ்டரைப் பள்ளியினின்றும் தொலைத்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டான்.

நாமும் நம்மை ஹெட்மாஸ்டர் அடிக்கும்போதோ அல்லது வசைபாணங்கள் கொடுக்கும்போதோ அவரை அடியோடு தொலைத்துவிட வேண்டுமென்று எண்ணுவது சகஜந்தான். நாம் எண்ணி என்ன புண்ணியம்? நமக்குக் காரியசித்திதான் ஆவதே இல்லை. ஆனால் எம். தியாகராஜனின் எண்ணம் என்ன ஆகின்றதென்று பார்ப்போம்.

ஒருநாள் வழக்கம்போல் எம். தியாகராஜனும் அவனது நண்பர்களும் வகுப்பில் இருந்தனர். முதல் மணி அடிக்கப்பட்டது. ஹெட்

மாஸ்டர் சதாசிவ ஐயர் வகுப்பினுள் நுழைந்தார். நுழையும்போதே எம். டி. என்று அழைத்தவண்ணம் சிரித்துக்கொண்டே நுழைந்தார்.

எம். தியாகராஜனுக்கு அடங்காத கோபம்வந்தது. அவன் சட்டென்று தனது இடத்தை விட்டெழுந்து கம்பீரத்துடனும், ஆத்திரத்துடனும் 'எதற்காக சார் என்னை எம். டி. என்று கூப்பிடு கின்றீர்கள்?' என்ருன்.

ஹெட்மாஸ்டர், 'உன் பெயர் என்ன?' என்ருர். எம். டி. ராஜன், 'என் பெயரா? என் பெயர், எம். தியாகராஜன்.'

ஹெட்மாஸ்டர், 'ஓஹோ....எனக்கு எம். தியாகராஜன் என்று முழு நீளப்பெயரை வைத்துக் கூப்பிட இஷ்டமில்லே. அதனுல்தான் எம். டி. என்று கூப்பிடுகிறேன்.'

எம். டி. ராஜன்:— 'சார், எம். டி. என்பதற்கு என்ன சார் அர்த்தம்?'

ஹெட்மாஸ்டர், 'அட....பைத்தியமே, எம். டி.....எம். டி. என் பதற்கா அர்த்தம் கேட்கின்ருய்? எம். டி. என்பதற்கு பூஜ்ஜியம் என்பது அர்த்தம்' என்று விழுந்து விழுந்து சிரித்தார். (போக்கிரித் தனத்தைப் பாருங்கள்.)

இதைக்கேட்ட எம். தியாகராஜனுக்கு ஆத்திரம் கரைபுரண்டது. கண்கள் சிவந்தன உடம்பு துடித்தது. 'சார், உங்களுக்குக் கண்க ளில்லேயோ? என்னைப் பார்த்தால் உங்களுக்கு பூஜ்ஜியமாகவா தோன்றுகிறது?' என்று மரியாதையையும் கடந்தவனுய் அதட்டிக் கேட்டான்.

இதைக்கேட்ட ஹெட்மாஸ்டருக்கு மூக்கின்மேல் கோபம் வந்து விட்டது. 'அடே, எம். டி. பூஜ்ஜியமே, என்னடா அதட்டிப்பேசுகின் ருய்? அதட்டிப் பேசினுல் பள்ளிக்கூடத்தில் உன் சீட்டைக் கிழித்து விடுவேன், தெரியுமா? ஜாக்கிரதை' என்ருர் பல்லேக்கடித்துக்கொண்டு.

எம். டி. ராஜன், 'சார், என் சீட்டைக் கிழித்துவிடுவதற்கு நீங்கள் எமன்கோர்ட் கிளார்க் சித்திரகுப்தனல்ல. ஞாபகமிருக் கட்டும்' என்ருன்.

இதைக்கேட்ட எல்லா மாணவர்களும் கைதட்டி கொல் என்று சிரித்தனர். சதாசிவ ஐயருக்கு அடங்காக் கோபம் பிறந்து விட்டது. அவர் தான் உட்கார்ந்திருந்த நாற்காலியை படேர் என்று பின்னுல் தள்ளிவிட்டு, 'ஸ்டாண்டு அப் ஆன் த பெஞ்சு, யு இடியட்' என்று உரக்கக் கத்திக்கொண்டே எம். டி. ராஜனிடம் வந்தார்.

ஆனுல் எம். தியாகராஜனே நின்ற இடத்தைவிட்டு அசை யாமல், 'எதற்காக? காரணம்?' என்று இரண்டு ஆழமான கேள்வி களைப் போட்டான்.

அதேக்ஷணம், மின்னல்போல் பளீர் பளீர் என்று இரண்டு அறைகள் எம். டி. ராஜனின் தாடையில் விழுந்தன. ஆ, அறைகள் பட்டமாத்திரத்தில் எம். டி. ராஜன் சுருண்டு துவண்டு அலங்கோலமாக பெஞ்சியின்மேல் சாய்ந்தான். உடனே வகுப்பு முழுவதும் பெரிய குழப்பம். ராஜன் சுருண்டு விழுந்ததைக்கண்ட மாணவர்களெல்லாம், 'ஹெட்மாஸ்டர் எம். டி. ராஜனை அடித்துக் கொன்றுவிட்டார்' என்று கத்திக்கொண்டே அங்கும் இங்கும் ஓடினர். ஹெட்மாஸ்டரோ ஆடுதிருடிய கள்ளன்போல் விழித்துக்கொண்டு நின்ற இடத்திலேயே நின்றுவிட்டார். இதற்குள் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடிவிட்டனர். மாணவர்களெல்லாம் ஹெட்மாஸ்டரைத் தங்களது வாயார வசைச்சொற்களால் வாழ்த்தினர். அப்போது நான்கு போலீஸ்காரர்கள் தபதபவென்று கூட்டத்தினுள் புகுந்து கடுபிடி செய்துவிட்டு ஹெட்மாஸ்டரைப் பிடித்துக்கொண்டனர். ஹெட்மாஸ்டர் சதாசிவ ஐயருக்குப் பாதிப்பிராணன் போய்விட்டது. கைகால்கள் நடுங்கின. அவரது நெஞ்சு படக், படக் என்று காண்டினுல் ஓடும் மெஷினைப்போல் அடித்துக் கொண்டது. ஒரு மாணவன் குறிப்பிட்ட டாக்டரை அழைத்துவர ஓடினுன். டாக்டர் வருவதற்குள் நூற்றுக்கணக்கான விசிறிமட்டைகளும், சோடா புட்டிகளும் வந்து குவிந்தன. புட்டிகள் டப்டுப் என்று உடைபட்டன.

குறிப்பிட்ட டாக்டரும் வந்தார். அப்பொழுது ராஜன் தேம்பித் தேம்பி மூச்சுவிட்டுக் கொண்டிருந்தான். வாயில் நுரைதள்ளிக் கொண்டிருந்தது. மிரள மிரளப் பார்த்தான். கைகால்கள் துவண்டு கிடந்தன. வந்த டாக்டர் ராஜனின் கைகளைப் பிடித்துப் பார்த்துப் பரபரப்புடன் ஏதேதோ சோதித்துவிட்டு ஒருமுறை ஹெட்மாஸ்டரை விறைக்கப் பார்த்தவண்ணம், 'பலத்த அடி பொட்டில் பட்டதினுல் மூளை குழம்பிவிட்டது. ஜாக்கிரதையாகப் பார்க்காவிட்டால் உயிருக்கே மோசம் வந்துவிடும்' என்று சொல்லி ராஜனைத் தனது காரிலேயே தூக்கிப் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டார்.

இதைக்கண்ட போலீசார் ராஜனுக்கு உடம்பு குணம் ஆகும் வரையில் சதாசிவ ஐயரைத் தங்களது விருந்தாளிகளில் ஒருவராக இருக்கவேண்டுமென்று அவரைத் தங்களுடன் அழைத்துச் சென்றனர். குணம் ஆகாவிட்டால்....? குணம் ஆகாவிட்டால் என்ன? ஹெட்மாஸ்டர் சதாசிவ ஐயர்பாடு ஆபத்துத்தான். ஆஸ்பத்திரிக்குக் கார்மேல் கார்கள். பத்திரிகாலயங்களுக்குத் தந்திமேல் தந்திகள்.

இந்தகோர சமாச்சாரத்தைக்கேட்ட ராஜனின் தாய் தந்தையர் பிரலாபித்தவண்ணம் ஆஸ்பத்திரியை நோக்கி ஓடினர். ஆனுல் டாக்டர் அவர்களை அனுமதிக்கவில்லை. 'நீங்கள் இப்பொழுது அவ்வாலிபருடன்

ஏதாவது பேசினால் மூளை குழப்பி உயிருக்கே ஹானி நேரிடும். ஒன்றுக்கும் வருந்தவேண்டாம். உயிருக்கு சேதமில்லை. இன்னும் பத்து நாட்களில் குணப்படுத்தி விடுகிறேன்' என்றார். ஆனால் பெற்ற மனம் பித்தல்லவா! அவர்கள் 'என்ன நிகழுமோ?' என்று அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக இருந்தனர். எம். டி. ராஜனின் தகப்பனுக்கு ஹெட்மாஸ்டர்மேல் பொல்லாத ஆத்திரம் உண்டாயிற்று. அவர் போலீசாருக்கு 'சதாசிவ ஐயரை லேசில் விடக்கூடாது' என்று ஒரு கடுமையான அறிக்கை விடுத்தார்.

மறுநாள் வந்தது. அன்று வெளியான பத்திரிகைகள் எல்லாவற்றிலும்:—

'சதாசிவ ஐயரின் இரண்டு அறைகள்'

'எம். டி. ராஜனின் மூளைக் குழப்பம்'

'உயிருக்கு ஆபத்து'

'ஹெட்மாஸ்டர் கைது செய்யப்பட்டார்'

'நேற்று காலை கவர்ன்மெண்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் சதாசிவ ஐயர் எம். தியாகராஜனை எம். டி. என்று அழைத்ததற்கு அவன் ஏதோ எதிர்த்துப்பேச அதற்கு ஹெட்மாஸ்டர் எம். டி. ராஜனின் கன்னங்களில் இரண்டு பலத்த அறைகள் அறையவே, பலத்த அடி பொட்டில் பட்டதினால் மூளை குழம்பி 'சங்கரன்' பிரைவேட் ஆஸ்பத்திரியில் இறக்கும் தறுவாயில் இருக்கிறான். இதன்பொருட்டு சதாசிவ ஐயர் கைது செய்யப்பட்டு கடுங்காவலில் இருந்து வருகிறார்' என்று பதிக்கப்பட்டிருந்தது.

எம். தியாகராஜனோ பத்துநாட்கள் வரையில் பல்லைக்கடித்துக் கொண்டு ஆஸ்பத்திரியில் இருந்தான். உண்மையான சீக்காளிகளுக்கே ஆஸ்பத்திரியிலிருக்கக் கொஞ்சங்கூடப் பிடிக்காது. அப்படி இருக்க ஒரு வியாதியுமில்லாத எம். தியாகராஜனைப்பற்றிக் கேட்க வேண்டுமோ?

எம். டி ராஜனுக்கு விஷயங்கள் அடிக்கடி தந்திபோல் வந்து கொண்டிருந்தன. 'ஹெட்மாஸ்டர் கைது செய்யப்பட்டார்' என்னும் செய்தியைக்கேட்ட எம். டி. ராஜன் தன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிவைத்த கடவுளைப் பலவாறு வாழ்த்தினான்.

பத்துநாட்கள் வரையில் பள்ளிக்கூடம் சரியாய் நடக்கவில்லை. உபாத்தியாயர்கள் மாணவர்கள் அற்றவகுப்புகளில் முறையே பெஞ்சுகளுக்கும், மேஜைகளுக்கும் கல்வி கற்பித்தனர்.

பதினோரும் நாள் வந்தது. எம். தியாகராஜனும் டாக்டரின் அனுமதியின்பேரில் மெல்ல ஆஸ்பத்திரியினின்றும் வெளியே வந்தான். அவனது நண்பர்களெல்லாம் அவனை சூழ்ந்து அவனது தந்திரத்திற்கு மெச்சி சந்தோஷத்தால் ஆரவாரித்தனர்.

ஹெட்மாஸ்டர் சதாசிவ ஐயரும் காராக்கிரகத்தினின்றும் விடுவிக்கப்பட்டு போன உயிரைப்பெற்று மெல்ல ஊரினுள் தலை நீட்டினர். சர்க்காரில் அவரையே மறுபடியும் ஹெட்மாஸ்டராக நியமித்தனர்.

ஆனல் மறுநாள் பத்திரிகையில்:—

'பள்ளிக்கூடம் சீர்குலையும்'

பழிக்கஞ்சாப் பாதகனுகிய சதாசிவ ஐயரையே மறுபடியும் பள்ளிக்கு ஹெட்மாஸ்டராக நியமிக்கும் பக்ஷத்தில் 75 வருடங்களாக பெயர்பெற்று விளங்கும் பள்ளிக்கூடம் கூடியசிக்கிரம் சீர்குலையும். மாணவர்களின் சங்கியையும் சடுதியில் குறைந்துவிடும்.

நகரவாசிகள், என்று கொட்டை எழுத்துக்களில் அச்சிடப்பட்டிருந்தது.

இதைக்கண்ட கவர்மெண்டாரும் சதாசிவ ஐயரை நீக்கிவிட்டு வேரொரு எம். ஏ. எல். டியை ஹெட்மாஸ்டராக நியமித்தனர். அன்றுமுதல் பள்ளிக்கூடம் சரிவர நடைபெற்றது. எம். டி. ராஜன் முதலிய தந்திர சிகாமணிகளான சாதுக்குழந்தைகளும் தவருமல் பள்ளிக்கு வரலாயினர்.

ஒருநாள் மாலை. பள்ளிக்கூடம் விடப்பட்டது. எம். டி. ராஜனும் அவனது நண்பர்களும் பள்ளியைவிட்டு வெளியே வந்தனர். அப்பொழுது பள்ளிக்கூடத்திற்கு சற்றுதூரத்திலிருந்த வெற்றிலை பாக்குக் கடையில் பழைய ஹெட்மாஸ்டர் சதாசிவ ஐயர் ஏதோ வாங்கிக்கொண்டு போவதைக் கண்டனர் அவரைக் கண்ட எம். டி. ராஜன் மற்றவர்களை எச்சரித்துவிட்டு 'தேவாதி தேவ' என்று ராகத்தோடு உரக்கக் கூவினன். மற்றவர்கள் பழைய ஹெட்மாஸ்டரின் காது புளித்துப் போகும்படி 'சதாசிவா' என்று ராகம் தவருமல் ஆரவாரித்தனர். இப்பொழுது அந்தப் பழைய ஹெட்மாஸ்டர் சதாசிவ ஐயர் தலையைக் குனிந்து முக்காடிட்டுக்கொண்டு போவதைத் தவிர்த்து வேறு என்ன செய்யமுடியும்? நீங்களே சொல்லுங்கள்.

கமலகாந்தா

[தேவகோட்டை V. இராமநாதன்]

அத்தியாயம் 32.

கதம்பஹாரம்

துப்பறியும் மிஸ். சரோஜினி மறைந்த கைதி கதிரேசனைப் பிடித்துக் கொடுத்ததற்காக பத்திரிகை விளம்பரப்படி சன்மானம் பெற்றாள். கமலகாந்தாவின் பெற்றோர்கள் தங்கள் புதல்வியை உயிருடன் கண்ட மகிழ்ச்சியின் பெருக்கால் மிஸ். சரோஜினிக்கு ஒரு தேனீர் விருந்து நடத்தினர். அவ்விருந்தில் பல நிபுணர்களும் விஜயம்செய்து சரோஜினியின் வீரதீர பராக்கிரமச் செயல்களைக் குறித்து புகழ்மாலை சூட்டினர். அதன்பின் மலர்மாலைகள் சூட்டப்பட்டன. தங்கப் பதக்கமொன்றை நம் முதலியார் தம்பதிகள் சன்மானமாக வழங்கினர்.

இவை யனைத்தாலும் மனங்குளிர்ந்த நம் சரோஜினி புன்னகை பூத்த முகத்தினளாய் அங்கு குழுமியிருந்த மக்களை கம்பீரமாக நோக்கி, 'அன்புடைப் பெரியோர்களே! இப்பொழுது நீங்கள் சூட்டிய புகழ்மாலை யனைத்திற்கும் காரணகர்த்தாக்களாக உள்ளவர்கள் கமலகாந்தாவும் கமலகாந்தனுமே யாவார்கள். ஆதலின் அவ்விருவர்களையும் சந்தோஷப்படுத்த வேண்டியது நமது கடமை. அவ்வாறு செய்ய ஒரே வழிதானுண்டு. அதாவது அவர்களை இணைபிரியாதிருக்கச் செய்தலேயாகும். முன்பு நமது சோமநாத முதலியாரவர்கள் காலச்சக்கரத்தின் காரணமாக இவ்விஷயத்தை அசட்டை செய்தமையினாலேயே இவ்வளவு இடுக்கிடும் சம்பவங்கள் நிகழ்ந்தன. ஆகவே முதலியாரவர்கள் இவ்விஷயத்தை நம் விருப்பம்போல் நடாத்தி கண் குளிரக்கண்டு அகமகிழவேண்டுவதே, அவர்களின் கடமையாகும்' என்று கூறி முடிக்க,

சோமநாத முதலியார் சபையை நோக்கி, 'சகோதர சகோதரிகளே! சரோஜினி கூறியபடி கமலகாந்தாவையும் கமலகாந்தனையும் இணைபிரியாக் காதலர்களாக்கி இன்புறுவதில் எனக்கெவ்வித ஆக்ஷேபணையுமில்லை' என்று கூற அங்கு குழுமியிருந்தோர் பெருமகிழ்வெய்தினர்.

கதிரேசன் தூக்குமேடையில் தொங்கவேண்டியநாள். கடவுள் தன்னைக் காப்பாற்றுவாரோவென எண்ணினன். எண்ணம் ஈடேரு தெனத் தோன்றியது. சோர்வுற்றுன். 'என்ன உலகம்! கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே! என்பது எவ்வளவு மெய்யான வாக்கியம்! இம்மாய வாழ்வில் தாழ்வும் நிலையில்லை! வாழ்வும் நிலையில்லை! எனக்கென்ன குறைவேற்பட்டது? ஜமீந்தார் குடும்பத்தில் பிறந்தேன்! ஆனல் விதி என்னை இந்நிலைக்குட்படுத்தியது' என்று கூறியழுதான். பின்னெருவாறு உணர்ச்சி பெற்று 'நான் எதை நினைந்தழுவது? கொடிய குடியில் மூழ்கி அடாச்செயல் புரிந்ததை நினைந்தழுவதா? காமவெறி பிடித்து அருங்குண நங்கைகளை கற்பழித்ததை நினைந்தழுவதா? அன்றி பஞ்சமா பாதகத்திலொன்ருகிய கொலை செய்ததை நினைந்தழுவதா? இனி வருந்துவதால் யாது பயன்? அந்தோ! அடாத பல கொடிய காரியங்களைச் செய்தேன்! அதன் பலனை அனுபவிக்கின்றேன். நான் ஏன் பின்னும் வருந்த வேண்டும்?' என்று நினைந்து மண்ணில் வீழ்ந்து மூர்ச்சித்தான்.

தூக்குமேடை ஸ்தலம். கதிரேசன் கொண்டுவரப்பட்டான். விசேஷ அனுமதியின் பேரில் கதிரேசனின் மனைவி லீலாவதியும், அவனின் பெற்ருேர்களான கண்ணப்ப முதலியாரும் சாந்தாதேவியம்மையாரும் அந்த ஸ்தலத்திற்கு வந்திருந்தனர்.

கதிரேசன் மேடைமீதேற்றப்பட்டான். 'நீ விரும்புவதென்ன?' என்று கேட்டார் தூக்குமேடை யதிகாரி. 'சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்' என்று பதிலளிக்க, அவ்வாறே அனுமதிக்கப் பட்டான்.

மாசுபடிந்த மேனியுடனும், துக்கங்கொண்ட வதனத்துடனும் தன் பெற்ருேர்களையும் மனைவியையும் நோக்கினன். பேசுவதற்கு நாவெழாமல் விம்மிவிம்மி யழுதான். சற்றுதேறினன். ஏதோ கூற முயன்ற தருணத்தில் கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற தன் பெற்ருேர்களையும் மனைவியையும் கண்ணுற்றுக் கலங்கினன். பின்னும் ஒருவாறு தேறி, 'தாயே! தந்தையே! நான் செய்த குற்றங்களை மன்னித்து விடுங்கள். என்னைப் பெற்றதால் நீங்கள் அபகீர்த்தியை யடைந்தீர்கள்! ஐயோ! உங்களைக் காணும் மக்கள் கொலைகாரப் பாதகனைப்பெற்ற பாவிகள்' என்று தூற்றும்வண்ணம், நான்-இந்த சண்டாளன்-நடந்துகொண்டேன்! விதி! விதி!! ஏ! லீலாவதி!! நீ உத்தமி! கற்பரசி! கள்ளங்கபடற்ற வனிதை! உன்னை உன் தந்தையின் பிதா எனது கெட்ட நடத்தையை உணர்ந்திருந்தும், பணப்பேய் வசப்பட்டு பாழும் நாகத்திற்கு ஒப்பான என்னிடம் தள்ளினர்! அந்தோ!! ஏ கொடிய பணமே! என்னே உன் திருவிளையாடல்! ஏ கண்மணி! லீலா! நீ ஒரு பாவி! என்னை மணந்திராமல்

ஒரு பிச்சைக்காரனை மணந்திருந்தாலும் சற்று சந்தோஷத்துடன் வாழ்ந்திருப்பாய்! அந்தோ! விதியின் பயன்!

உத்தம குணசாலியான கமலகாந்தாவை கற்பழிக்க முயன்றேன். அவள் கற்பையும் காதலையுமே உயிரென மதித்த உத்தமி. அவள் கற்பே வெற்றி பெற்றது. நானடைந்த பயன் இப்பொழுது நிற்கும் தூக்குமேடையே! அவள் கற்பின் வெற்றியே என்னை இக் கதிக்குள்ளாக்கியது' என்று கூறி கண்ணீரைக் கரைபுரளவிட்டான்.

தூக்கிலிடும் நேரம் அணுகியது. அனைவருள்ளமும் பதைத்தது. அத்தருணத்தில் ஒரு சேவகன் மேல்மூச்சுக் கீழ்மூச்சுவாங்க ஓடோடி வந்து ஒரு தந்தியைத் தூக்குமேடை யதிகாரியிடம் கொடுத்துச் சென்றான். அத்தந்தி மேலதிகாரியிடமிருந்து வந்திருந்தது. அதில், 'கதிரேசனைத் தூக்கிலிட வேண்டாம். ஜமீந்தார் கண்ணப்ப முதலியார் தகுந்த மனுஷாள்களை இங்கனுப்பித்து ஐந்து லக்ஷம் ரூபாயையும் ஜாமீனாகச் சாட்டியுள்ளார். கதிரேசன் இனி ஒரு நற்குணசிகாமணியாய் திகழ சந்தர்ப்பமிருப்பதாக அன்று அவன் நியாய ஸ்தலத்தில் தன் குற்றங்களை ஒப்புக்கொண்டு கூறிய மொழிகள் சாதனமளிக்கின்றன. ஆதலின் அன்னவனுக்கு விடுதலை யளியுங்கள். நீதி இலாக்காவின் அனுமதியும் பெற்றோம்' என்றிருந்தது.

இதனை தூக்குமேடை அதிகாரி தெரிவிக்கவே, சோர்வுற்று நின்றிருந்த கதிரேசனும் அன்னவனின் பெற்றோர்களும் மனைவியும் எல்லையற்ற சந்தோஷங் கொண்டனர். கதிரேசன் விடுதலையடைந்தான்.

* * *

ஒருநாள் மாலை வேளை. சோமநாத முதலியார் வீட்டின் பின்புறமுள்ள பூங்காவில் கமலகாந்தா ஒரு தினசரிப் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தாள். கமலகாந்தன் அவள் அறியாவண்ணம் அங்குற்று அவள் கண்களைப் பொத்தினான். உடனே கமலகாந்தா தன் கண்களை பொத்திக்கொண்டிருப்பது இன்னாரெனத் தெரியாது, ஒருவேளை சரோஜினியோ வென்றெண்ணி 'இதென்னடியம்மா விளையாட்டு!' என்றாள். 'அம்மா அல்ல ஐயா' என்றான். ஒருவாறு அறிந்துகொண்ட கமலகாந்தா, 'ஓகோ! நீங்களா! இந்த விளையாட்டை எப்பொழுது கற்றுக்கொண்டீர்கள்? சிறையிலடைபட்டுத் தத்தளித்தபொழுதோ!' என்று இளநகையுடன் மொழிந்தாள். கமலகாந்தன் தன் கைகளை எடுத்துக்கொண்டு 'காதலி! இந்தப் பரிகாச மொழிகளை எங்கு கற்றுக்கொண்டாய்? ஒருவேளை உன் மாமன் மகன் காமச் சிறையிலோ?' என்று வினயமாகக் கூறினான்.

இருவரும் ஒருவரை யொருவர் மார்புறத் தழுவிக்கொண்டனர். முத்த மழை பொழிந்தது. 'ஆம்! நமக்கு பல போறிய விவாகம்

நடக்கும் நன்னாள் என்னாள்!' என்று வினவ ஆவணித் திங்கள் பதினைந்தாம் நாள் காலை 9 மணிக்கென்று என் தந்தையும் தாயும் பேசிக்கொண்டனர்' என்றாள்.

* * *

மங்களபுரியில் சோமநாத முதலியாரின் மாளிகையின் முன்னிலையில் அதிஅற்புத அலங்காரப் பந்தலொன்றிடப்பட்டிருந்தது. தோரணங்கள் தொங்கின. மாளிகையின் உள்ளும்புறமும் ஒரே ஜனத்திரள். வாத்தியங்கள் ஜாம்ஜாமென்று முழங்கின. வீட்டின் உள் முற்றத்தில் ஹோம குண்டத்திற்கெதிரில் சௌபாக்கியவதி கமலகாந்தாவும் சிரஞ்சீவி கமலகாந்தனும் இரதியும் மதனும்போலமர்ந்திருந்தனர். சுற்றிலும் பிரபல சாஸ்திரிகளும் கனபாடிகளும் வீற்றிருந்து மந்திரகோஷம் செய்துகொண்டிருந்தனர்.

அன்று அவ்வைவபவத்திற்கு விஜயம் செய்திருந்த மகா ஜனங்களை சோமநாத முதலியாரும் அவர் பத்தினி குணபூஷணி யம்மாளும் மலர்ந்த வதனத்தினராய் வரவேற்றுபசரித்தனர். அத் திருமங்கல்யதாரணத்திற்கு வந்த கதாபாத்திரங்களான துப்பறியும் நக்ஷத்திரம் மிஸ் சரோஜினியும், ஆர்மோனியச் சக்கரவர்த்தினி ஸ்ரீமதி ஞானம்பாளும், கிருஷ்ணபுரி ஜமீந்தார் தம்பதிகளும், காவாலிக்கதிரேசத் தம்பதிகளும், மணமகனின் ஆருயிர்த் தாயாகிய புனிதவதி அபயாம்பிகையும் குறிப்பிடத்தக்கோராவர். ஆகம விதிப்படி அக்கினி சாக்ஷியாக பல பெரியோர்கள் முன்னிலையில் கமலகாந்தனுக்கும் கமலகாந்தாவுக்கும் மணம் சிறப்பாக நடாத்தப்பட்டது.

இவ்விவாகத்தை முன்னிட்டு அன்று மாலையில் மேளக்கச்சேரிகளும், பாட்டுக் கச்சேரிகளும் நடைபெற்றன. அவ்வைவபவத்திற்கு நானும் சென்றிருந்தேன். சென்றிருந்த காலத்தில் மணமக்கள் அவர்களின் இச்சரிதத்தை வெளியிடுமாறு வேண்ட அவ்வாறே செய்தேன்.

காதல் மணத் தம்பதிகள் நீடூழி வாழ்க!

☞ அடுத்த இதழில்

தேவகோட்டை V. இராமநாதன் அவர்கள் எழுதிய

'பத்தினி பக்தி'

என்ற தொடர்கதையை எதிர்பாருங்கள்

'திவான் ஸர் நாதேரிஷா'

['செங்கரி சேன்']

நல்லதம்பி சக்கரவர்த்திக்கு 'சக்கரவர்த்தி' யென்ற பட்டத்தைக் கொடுத்தது யாரென்று நமக்குத் தெரியாது. திப்பிலி ராஜா மந்திரியாயிருந்ததைப்போல் இந்த நல்லதம்பி சக்கரவர்த்தி மந்திரி வேலை பார்க்கவில்லை. சென்னை ராஜதானியில் ஒரு ராஜா மந்திரி வேலை பார்த்தார். ஒரு சக்கரவர்த்தியும் மந்திரியாக நினைத்தார். ஆனால் அவர்களைப் போல் நல்லதம்பி சக்கரவர்த்தி 'மந்திரி'யாகவும் முடியாது, மந்திரியாக நினைக்கவும் முடியாது. ஏனெனில் சோழபுர சமஸ்தானத்தில் நல்லதம்பி சக்கரவர்த்தி ஓர் சாதாரண அந்தப்புர காவலன்தான். உத்தியோகம் கிடைத்ததும் அவன் செய்த முதல் வேலை 'சக்கரவர்த்தி' யென்ற பட்டத்தை எடுத்துவிட்டதுதான்.

அந்த அரண்மனையிலாகட்டும் சரி, அந்த ராஜ்ஜியத்திலாகட்டும் சரி, நல்லதம்பியைப்போல் தங்கமான மனிதனைக் காணவே முடியாது. நற்குணத்திலும், நல்ல நடத்தையிலும், இராஜபக்தியிலும் அந்த ராஜ்ஜியத்தில் அவன்தான் சக்கரவர்த்தி! நல்லதம்பியின் வார்த்தைகளுக்கு அரசனிடத்தில் ஓர் தனிப்பெருமை உண்டு என்பதற்கு சந்தேகமே கிடையாது. சந்தர்ப்பங்களில் அவனது உயரிய யோசனைகளுக்கும் அரிய சேவைகளுக்கும் தக்க வெகுமதியளித்திருக்கிறானல்லவா அரசன்! அதிகம் சொல்லுவானேன். நல்லதம்பியின் நற்குணத்தை உத்தேசித்துத்தான் அவன் மனைவி உத்தமதேவிக்கு ராணியின் தலைத்தோழி யுத்தியோகம் கிடைத்தது.

உலகத்திலே மகாமேதாவி யென்று கூறப்படும் மகாத்மா காந்தியைக்கூட சிலர் 'அவருக்கென்ன தெரியும்' என்று கூறவில்லையா? அஃதேபோல் அந்த சோழபுர ராஜ்ஜியத்திலே யாவர்க்கும் கற்கண்டாகத் தோன்றிய நல்லதம்பி, ஒருவருக்குமட்டிலும் வேம்பாகத் தோன்றினான். அவர் யார்? அவர் சாதாரண மனிதரல்ல. ஓர் கவர்னரின் மந்திரியல்ல. ஆனால் ஓர் பெரிய தேசத்து மந்திரியான ஸர். நாதேரிஷாதான் அவர். திவான் ஸர் நாதேரிஷாவும் நல்ல மனிதர்தான். ஆனால் அவர் பகைமைக்கு முன் நிற்கும் ஓர் காவலன் எம்மாத்திரம்? ஸர் நாதேரிஷாவிற்கு நல்லதம்பி ஒரு கொசுப் போலத்தான். ஆனால் சுலபத்தில் நசுக்க முடியுமா? 'நல்லதம்பி இருக்கும்வரையில் நான் பொம்மை மந்திரியாகத்தா னிருக்கவேண்டும். அவன் என்று தொலைகிறானோ அன்றுதான் அரசனிடத்தில் நமது வார்த்தைகள் மதிப்பைப்பெறும். நமது அதிர்ஷ்டத்திற்குக் குறுக்கே நிற்பவன் அவன்

ஒருவன்தானே! இந்த அரசனுக்குத்தான் புத்தியெங்கே போனது? மந்திரி நானிருக்க இராஜ்ஜிய விஷயங்களில் அந்தக் காவல்காரப் பயலின் யோசனையை அல்லவோ அரசன் ஏற்றுக்கொள்ளுகிறான். சே! என்ன அரசனிவன். பேதமை! அடே நல்லதம்பி! உன்னை நான் கெட்ட தம்பியாக்காவிட்டால் நான் திவான் ஸர் நாதேரிஷாவல்ல! ஒரு நாளாவது நானுன்னை சிறையில் தள்ளாவிட்டால் நான் மந்திரியல்ல' என்று தனக்குள்தானே கூறி உலாவிக் கொண்டிருக்கையில் பணியாளன் பகதூர் அங்குவந்து சலாம்போட்டு வணக்கத்துடன் நின்றான்.

'பகதூர்! போன காரியம் பழமா? காயா?' என்றார் திவான்.

'பிரபோ! இந்த பகதூரினால்கூட முடியாத காரியம் ஒன்று உண்டா? தங்கள் தயவு என் பாக்கியம்' என்று கூறினான் பகதூர். அவனது கைகள் மடியைத் தொட்டன.

'எங்கே அவை?' என்றார் அமைச்சர். 'இதோ! என்று கூறிக் கொண்டே மடியிலிருந்து எடுத்த முத்து மாலையை மந்திரியின் முன் வைத்தான் வெகு மரியாதையுடன். அம்முத்துமாலை வைர மாலையையும் தோற்கடிக்க கூடியதாய் கோடி சூரியப் பிரகாசத்துடன் தோன்றியது. திவானின் முகத்தில் உவகை உதித்தது. 'பிரபு! நமது அம்மையாரின் கழுத்தில் இது ஏறினால் இன்னும் அதிகப் பிரகாசத்துடன் தோன்றும்.' என்றான் பகதூர் சற்று தைரியமாக.

ஒரு அசட்டு சிரிப்பு சிரித்தார் திவான். 'அட அசடே! என் மனைவிக்காகவா இதை கொண்டுவர ஏவினேன். பயித்தியமே! நீ சாமர்த்தியசாலியாக இருந்தும் புத்திசாலித்தனமென்பது உன்னிடத்தில் மருந்துக்குக்கூட கிடையாது. பகதூர்! நல்ல தம்பியை அவனது உத்தியோகத்திலிருந்து நீக்கக்கூடியது இந்த முத்துமாலைதான். இதுதான் உன்னை நல்லதம்பியின் ஸ்தானத்திற்குக் கொண்டுபோகும் வஸ்து, தெரிந்ததா?' என்றார் மறுபடியும்.

அப்பொழுதே நல்லதம்பியின் வேலை தனக்குக் கிடைத்து விட்டதாக நினைத்து அகமகிழ்ந்தான் பகதூர். அல்நாக்ஷர் ஆகாயக்கோட்டைக்குச் சமமானது.

'பகதூர்! இன்னும் உன்னால் ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கிறது. அதை முடித்தாயானால்தான் உனக்கு சுக்கிரதிசை. அதை முடிப்பாயானால் உத்தமதேவியின் வேலை உனது மனைவிக்குக் கிடைக்கும்படி செய்வேன்' என்றார் திவான். அவரது வார்த்தைகளில் நம்பிக்கைகொண்ட பகதூர் தனது 'பற்களை' காட்டிக்கொண்டு நின்றான்.

மறுபடியும் திவான் 'பகதூர்! உனக்கு நற்காலம் பிறந்துவிட்டது என்பதில் ஐயமில்லை. நல்லதம்பியை அரண்மனையை விட்டுத் துரத்தும்படியான வழியை நாம் கண்டுபிடித்துவிட்டோம். அவனது மனைவியாகிய அந்தக் கர்வம் பிடித்த நாயையும் துரத்தினால்தான் நல்லது. ஆகவே உத்தமதேவியின் ஆடையொன்று நமக்குத் தேவை. எப்பாடுபட்டாவது ஒரு ரவிக்கையை அடித்துக்கொண்டு வந்துவிடு' என்றார்.

'பிரபு! நாளை சூரிய உதயத்திற்குள் அவனது ரவிக்கையொன்று தங்கள் முன் இந்த பகதூரால் வைக்கப்படுமென்பதை நிச்சயமாய் அறிந்து கொள்

ளுங்கள். அரண்மனையிலிருந்து முத்துமாலையை களவாடி வந்த இந்த பகதூர் பயலுக்கு உத்தமதேவியின் ரவிக்கையொன்று கொண்டுவருவது பிரமாதமான காரியமல்ல' என்று அலச்சியமாகக் கூறினன் பகதூர்.

அவன் அப்படியே செய்வானென்று திவானுக்குத் தெரியும். 'உனது அதிர்ஷ்டத்திற்கு நீதான் பாடுபட வேண்டும். விஷயம் வெளியானல் உனது தலை கழுமரத்தில் தொங்க தயங்காது என்பது ஞாபகத்திலிருக்கட்டும். நீ சொன்னுல் சொன்னபடி செய்வாயென்று எனக்குத் தெரியும். போய் வா!' என்ருர் திவான்.

• • •

ஜாமக்கோடங்கியின் குடுகுடுப்பையின் சப்தம் நித்திரையின்றி கவலையால் படுக்கையில் தனித்து புரண்டுகொண்டிருக்கும் உத்தமதேவிக்குக் கேட்டது. அவள் மனதில் என்ன பட்டதோ தெரியாது. எழுந்து வந்தவள் படாரென்று கதவைத் திறந்தாள். 'வியாகூலம் வேண்டாமம்மா! போன பொருள் வந்துவிடும். தலைபோகும் காரியம். வருமோ வராதோ என்ற கவலை தானே! இந்த ஐயாவிற்கு கொஞ்சம் கெட்ட காலம்!' என்ருன் தன் குடுகுடுப் பையை அடித்துக்கொண்டே கோடங்கி.

'ஆகா! என்ன ஆச்சரியம்! அரண்மனையில் களவுபோனது இன்னும் யாருக்கும் தெரியாதே! இந்த கோடங்கிக்கு அது எப்படித் தெரிந்தது!' என்று மனதிற்குள் நினைத்தவளாய் உத்தமதேவி 'ஏ குடுகுடுப்பை இங்கேவா' என்ருள். 'அம்மாவிற்கு நல்ல வாக்கு சொல்லடி! ஹே ஜெக்கம்மா! அம்மாளுக்கு நல்ல வாக்கு சொல்லடி! தருமதுரைக்கு கெட்ட எண்ணம் நினைத்தவன் ஐயோன்னு போகிருன். நல்லவாக்கு சொல்லடி! ஹே ஜெக்கம்மா!' என்று கூறிக்கொண்டே அவளருகே வந்தான் கோடங்கி. 'கோடங்கி! உன் வாக்குப் பலிக்குமா?' என்ருள் உத்தமதேவி.

'அம்மா! இது என் வாக்கல்ல. ஜெக்கம்மா தேவியின் வாக்கு. அவள் வாக்கு திருவாக்குத்தான். அவள் சொன்னுல் சொன்னபடியே யிருக்கும். அவள் சேதி தெரிபு மெல்லாப் பேருக்கும். சொல்லடி ஜெக்கம்மா உன் வாக்கே' என்று கூறிக்கொண்டே தன் குடுகுடுப்பையை ஆட்டினன்.

'அரண்மனையிலே திருட்டுப் போச்சு ஒரு ஆபரணம். தங்கள் தலைமேலே விழப்போறது அந்தப்பழி. எடுத்தவன் ஐயோன்னு போயிடுவான்! கொடுத்து விடலாமா வேண்டாமா என்று யோசனை செய்கிருன் அந்த பாவிப்பயல்' என்ருன் அவன் மறுபடியும்.

'குடுகுடுப்பைக்காரா! அந்த திருட்டுப்போன முத்துமாலையை யார் எடுத்தவனென்று உன்னல் கூறமுடியுமா? இப்பொழுது அது எங்கே யிருக்கிறது?' என்ருள்.

'ஜெக்கம்மாளுக்கு ஒரு டஜன் முட்டை வேண்டும். இரண்டு கோழி வேண்டும். அரைக்குடம் சாராயம் வேண்டும். தங்களின் ஒரு புதுரவிக்கை வேண்டும். பூசை போட்டாக்தான் நல்ல வாக்கு சொல்லுவாள். நான் கேட்டதைக் கொடுத்துப் பாருங்கள். களவுபோன சொத்தை சொந்தக்காரரிடத்திலேயே இன்னும் மூன்றே மூன்று நாட்களுக்குள் சேர்த்து விடுகிறேன்' என்ருன் கோடங்கி.

'நிஜமாகவா!' என்றாள் உத்தமதேவி' சந்தேகம் வேண்டாமம்மா! இந்த ஜெக்கம்மாள் சொன்னால் சொன்னபடியே யிருக்கும். அவள் வாக்குப் பலிக்கும் எல்லாப் பேருக்கும். இதை நீ நம்பு. சத்தியமாய் நம்பு!' என்றான் கோடங்கி.

அவனது வார்த்தைகளில் நம்பிக்கைவைத்த உத்தமதேவி உள்ளே சென்று ஒரு புதிய ரவிக்கையும் ஐந்து ரூபாயும் கொண்டுவந்து அவன் கையில் கொடுத்து 'மறுபடியும் எப்பொழுது வருவாய்?' என்றான். ஜாமப்பூசை முடிந்ததும் நாளை இந்த நேரத்திற்கே வருவேன்' என்று கூறியதும் சென்று விட்டான்.

உத்தமதேவிக்கு அது ஆறுதலாகவிருந்தது. கோழி கூவிற்று. கிழக்கே மானம் வெளுத்தது. பறவைகள் உற்சாகத்துடன் பாடிக்கொண்டு கூடுகளை விட்டு வெளிக்கிளம்பின. கருவானம் நீலவானமாகத் தோன்றி பரந்த பரவையை தழுவி நின்று காண்போரை களிக்கச்செய்தது. ஒன்றன்பின் ஒன்றாக எழுந்து விழுந்து மோதும் அலைகளின் ஆனந்தக்காட்சியே காட்சி! வானுரவளர்ந்தோங்கி நிற்கும் விருக்ஷங்களின் தலையாட்டுதல் அம்மந்தமாருதத்தில் மனோகரமாயிருந்தன. மற்றும் வருவோருக்கும் போவோருக்கும் தலையையாட்டி 'விசிறி'யின் வேலையைத்தான் செய்தனவோ அவ்விருக்ஷங்கள் என்று நினைக்கும்படி தோன்றுகின்றன. அதோ போகிறான் கோடங்கி. திவானின் பங்களாவிற்குள் புகுந்தானவன். அவன் யார்? பகதூர்தான்.

* * *

அந்தக் கள்ளன் யார்? என்ன தைரியமவனுக்கு? அந்தப்புரத்தில் அரசி நீராடிக்கொண்டிருக்கையில் களவாடிக்கொண்டு போய்விட்டானே அரசியின் முத்துமாலையை. அரண்மனையில் களவாடுதல் என்றால் இலேசான காரியமா? என்ன அநியாயம்! காவலர்கள் எல்லோரும் உறங்கிக்கொண்டிருந்தனரா? அல்லது அவனுக்கு உளவாக இருந்தனரா? மந்திரி! எங்கே அந்தக் கள்ளன்! இன்னுமா நீ பிடிக்கவில்லை. பிடித்துக்கொண்டு வாருங்கள் அவனை இப்படி. வாளால் வெட்டித் தள்ளுங்கள்! மிதித்துக் கொல்லுங்கள்!' என்று கடுங் கோபத்துடன் கூறினான் அரியாசனத்தில் அமர்ந்திருந்த அரசன்.

கோபத்தின் அவதாரமாகத் தோன்றிய அரசன்முன் செல்ல யாருக்குத் தான் தைரியமுண்டு. நிலத்தில் என்ன எழுதியிருந்ததோ, அங்குள்ள அனைவரும் நிலத்தையே நோக்கியவண்ணமிருந்தனர்.

நெருப்பை அணுகுவதைப்போல் அரசனை அணுகிய அமைச்சர் 'பிரபு! கள்வனை கண்டுபிடிப்பது எளிதான காரியமே. இந்த அரண்மனையிலும் ஒருவன் திருடிவிட்டு தப்பித்துக்கொண்டு போகமுடியுமா? கள்வன் அயலானல்ல. நமது அரண்மனையில் அரண் செய்பவனே. தங்கள் உப்பை சாப்பிடுபவனே. நான் சொன்னால் நம்பமாட்டீர்கள். நம்பினால் மனது மகா வேதனையை அடையும். அத்தகைய வேதனையை தங்களுக்கு உண்டாக்க நான் விரும்பவில்லை. இதோ ராணியின் முத்துமாலை' என்று வெகு மரியாதையுடன்கூறி அரசனிடமீந்தார் ஓர் முத்துமாலையை.

அதைக்கண்ட அரசன் ஆச்சரியங்கொண்டு 'என்ன மந்திரியாரே! இது தானா ராணியின் முத்துமாலை? ஆம், சந்தேகமில்லை. இது உம் வசம் எப்படிக் கிடைத்தது? சீக்கிரம் சொல்லும்!' என்றான்.

'களவுபோன ஆபரணம் கிடைத்துவிட்டது. ஈம்மக்களுக்கு அரண் மனையில் களவாடினுல் தப்பிக்க முடியாதென்பதையும் நிரூபித்து விட்டோம். ஆனுல் கள்ளன் யாரென்றுமட்டிலும் நான் சொல்ல அசக்தனுயிருக்கிறேன். மன்னிக்கவும்' என்ருர் மந்திரி.

'மந்திரி! கள்ளன் யாராயிருந்தால்தானென்ன? சட்டம் எல்லாருக்கும் ஒன்றுதானே. கூசாமல் சொல்லும். இல்லையேல் உம்மேல் பிறர் சந்தேகிக்க இடமேற்படும் என்பதை அறியவும்' என்ருன் அரசன்.

'அரசே! தங்கள் ஆணையை மீற மனிதனுல் முடியாது. தங்கள் ஆணைக் குட்பட்டு உண்மைக் கள்வனை சொல்லுவேனுகில் ஓர் பெண்மணிக்கு நான் செய்துகொடுத்த சத்தியம் என்னை பாதிக்கும். பெண்பழியும் சூழும்! நரகம் கிட்டும்! ஆயினும் தங்கள் கட்டளையையும் மீறமுடியவில்லை. அழகில் அரசி யாய் விளங்கும் பெண்மணி யொருவள் என்மேல் வெகுநாட்களாய் காதல் கொண்டு என்னை வற்புறுத்தி வந்தாள். நான் அவளது இச்சைக்கு இணங்க மறுக்கவே நேற்று இரவு 10 மணிக்கு என் சயன அறையை அடைந்து நான் அவளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் என் முன்பாகவே பிராணத்தியாகம் செய்துகொள்வதாககூறவே அவள்மேல் இரக்கம்கொண்ட நான், அவளது அழகில் ஈடுபட்ட நான், காலை 4 மணிவரை அவளுக்குத் துணைவனுகவே யிருந்தேன். அக்காலையில் பிரகாசித்த இம்மாலையைக் கண்ட நான் அவளை அறியாமல் அவளிடமிருந்து அபகரித்துக் கொண்டேன். அவள் என்னுடன் கூடியிருந்ததற்கு அடையாளமாக அவளது பட்டுரவிக்கையொன்றை வாங்கி வைத்திருக்கிறேன். இதோ பாருங்கள் அவள் பட்டு ரவிக்கை!' என்று பகதூர் உத்தமதேவியிடமிருந்து வாங்கிக்கொண்டுவந்த ரவிக்கையைக் கொடுத்தார் திவான் அரசனிடம்.

'ஆகா! இது வாஸ்தவம்தானு! உம்மிடம்வந்த அந்த விபசாரி யார்? அவளுக்கு இது எப்படிக் கிடைத்தது? கொண்டவனுக்குத் துரோகம் செய்யும் சண்டாளிகளும் நமது தேசத்தில் இருக்கிருர்களா?' என்ருன் வெகுளி மிகக்கொண்டு அரசன். அவன் கண்கள் கோபத்தால் கோவைப் பழத்தைப்போல் சிவந்து சுடர்விட்டெரிய ஆரம்பித்தன.

'அரசே! இந்த தர்மராஜ்ஜியத்தில் நடக்கும் அநீதிகளை அவ்வப்போது ஒழிப்பது அடியேன் அமைச்சனின் கடமையென்பதை யான் மறந்து விட வில்லை. வேருருவன் இந்தக் காரியத்தை செய்திருப்பானுகில் அவனது கரங்களை இதற்குள் துண்டித்திருப்பேன். ஆனுல் அவன் தங்களின் அன்பிற்கும் ஆதரவிற்கும் பாத்திரமானவன். அவனது திருட்டுத்தனத்தையும் அவன் மனைவியினது விபசாரித்தனத்தையும் நான் வெளிப்படுத்த விரும்ப வில்லை. மன்னிக்கவும்' என்ருர் தலைவணங்கி அமைச்சர்.

கோபங்கொண்ட அரசன் 'மந்திரி! நான் உம்மை மன்னிக்கமுடியாது. திருடனுக்கும் வேசிக்கும் நீர் உடந்தை போலும். காவலர்காள்! இம்மந்திரியை சிறையிலடையுங்கள்! உம் தாமதமேன்!' என்ருன்.

'பிரபோ! கோபம் வேண்டாம். தங்கள் கட்டளையைமீற என்னுல் முடியுமா? திருடனின் பெயரைச்சொல்லி தங்களுக்கு வருத்தத்தை உண்டாக் கக்கூடாது என்று எண்ணினேன். ஆனுல் தங்கள் கட்டளை அதைக் கூறும்

படியாக பிறந்துவிட்டது. அந்தப் பெண்மணி வேறு யாருமில்லை. தங்கள் அன்பிற்கும் ஆதரவிற்கும் பாத்திரமான நல்ல தம்பியின் மனைவி உத்தமதேவி தான்.

அந்த ரவிக்கை அவளுடைய தென்பதற்கு அதன்மேல் போடப்பட்டிருக்கும் வண்ணான்குறியே சாக்ஷி. நல்லதம்பி களவாடி தன் மனைவியிடம் கொடுத்திருக்கவேண்டும்' என்றார் திவான்.

நொடிப்பொழுதில் அங்கு அழைத்துவரப்பட்ட வண்ணான் 'அது உத்தமதேவியம்மாளின் ரவிக்கைதான்' என்றான்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட அரசன் ஒன்றும் தோன்றாதவனாய் திகைத்தான். 'நல்லதம்பியா கள்வன்! இல்லை! இல்லை!! பரமயோக்கியனல்லவோ அவன். ஒருக்கால் பணம் பத்தும் செய்யும் என்பார்களே! இவ்விலையுயர்ந்த முத்துமாலை ஏன் அவன் மனதை கெடுத்திருக்காது? என்ன ஆச்சரியம்! நல்ல தம்பி இவ்விதமாக நடந்து கொள்ளுவானென்று நான் கனவிலும் கருதவில்லையே. ஒருசமயம் நல்லதம்பியின்மேல் பொறாமைகொண்டு அமைச்சன் செய்த சூழ்ச்சியாயிருக்குமா?' என மனதில் நினைத்தவனாய் சிறிதுநேரம் அங்குமிங்கும் உலாவிவிட்டு 'அமைச்சரே! உண்மையைச் சொல்லும்! உம்மிடம் வந்த பெண் நிச்சயமாய் நல்லதம்பியின் மனைவி உத்தமதேவிதானா? அந்த முத்துமாலையை அவளாகவே ஏன் எடுத்திருக்கப்படாது!' என்று அவனை உற்றுநோக்கினான் அரசன்.

'பிரபு! ஆண்டவன்மேல் ஆணையாக அரசனின்மேல் ஆணையாக என்னிடம் வந்தவள் உத்தமதேவிதானென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. தந்திரமாக அவளைக் கேட்டதில் அந்த முத்துமாலை தன் கணவனால் கொடுக்கப்பட்டதென்றே சொன்னாள். பொதுவாக பெண்மக்களுக்கு 'திருட்டு' என்றால் ஆண்களைவிட பயம் அதிகம்' என்றார் அமைச்சர்.

'சரி, மந்திரி! நல்லதம்பி நமக்கு செய்திருக்கும் அரிய சேவைகளை நினைக்கும்பொழுது இந்த குற்றம் ஓர் சாதாரணமானது. ஆயினும் பண ஆசை பிடித்தவனை அரண்மனையில் வைத்திருப்பது உசிதமல்ல. அவன் மனைவியை ஓர் உத்தமியென்று கருதி நான் அந்தப்புரத்திதில் தோழிகளின் தலைவியாக நியமித்தது என்மேல் குற்றம்தான். ஆகவே இன்றுடன் நல்ல தம்பியையும் அவன் மனைவி உத்தமதேவியையும் அவர்களது வேலைகளிலிருந்து நீக்கிவிட்டேனென்பதை அவர்களுக்குத் தெரிவித்துவிடும். நல்ல தம்பியை நான் மன்னிக்கமுடியாது. அவன் என் முகத்திலும் விழிக்கப்படாது. இருபத்து நான்குமணி நேரத்திற்குள் நமது ராஜ்ஜியத்தின் எல்லையைத்தாண்டி விடவேண்டும் அவன்' என்று கூறிவிட்டு அரியாசனத்தைவிட்டு எழுந்தான்.

அச்சமயத்தில் முக்காடிட்ட இருபெண்மணிகள் தர்பாரை நோக்கி வேகமாய்வந்து அரசனுக்கு நமஸ்காரம் செய்தனர். அவர்களில் ஒருவள் அரசனை நோக்கி 'தருமப் பிரபு! பிறருக்கு நியாயம் வழங்கும் தங்கள் மந்திரி என் விஷயத்தில் என் அநியாயமாக நடந்து கொண்டாரென்று தயவுசெய்து கேளுங்கள்! நான் மந்திரி அவர்களுடைய வைப்பாட்டி. நேற்றுமுதல் அவர் என்னை நிராகரித்துவிட்டார். என் ஜீவனத்திற்கு ஓர் உபாயம் சொல்லட்டும்.

அவர் என்னை வேண்டாமென்ற காலத்தில் எனக்கு ஐம்பதினுயிரம் ரூபாய் தருவதாக எங்களுக்குள் ஏற்பட்ட வாக்குறுதி. என் காதலரே! ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்?' என்ருள்.

திடுக்கிட்ட மந்திரி 'சே! துஷ்டி! நானுவது உன் காதலனுவது. பைத்தியம் பிடித்துவிட்டதா என்ன உனக்கு. அரசே! இந்த துஷ்டை யாரோ! இவளை நான் முன்பின்கூட கண்டது கிடையாது. அவள் கூறுவது அவ்வளவும் பொய்' என்ருர்.

'செங்கோல் கைக்கொண்ட வேந்தனே! நீதிவழங்க வேண்டும். மந்திரியாரே! இப்பொழுதாவது என்னை யாரென்று தெரியவில்லையா! நான் உமது காதலியல்லவா? வீணில் அரச சபையில் பொய் சொல்லவேண்டாம். பெண் பழிவிடாது ஞாபகமிருக்கட்டும். அரசே! நான் பொய் சொல்லவில்லை!' என்ருள் அவள் மறுபடியும்.

'தூரவிலகி நில்லடி வேசி! பொய்பேசும் உனது நாவை துண்டித்து விடுவேன். அரசே! கடவுள்மேல் ஆணையாக அரசரின்மேல் ஆணையாக என் மாதா பிதாவின்மேல் ஆணையாக இப்பெண்மணியை நான் இதுவரையிலும் கண்டதே கிடையாது. அவள் சொல்லுவது அவ்வளவும் சுத்தப்பொய். எனக்கும் அவளுக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. இது சத்தியம் சத்தியம் சத்தியம்' என்ருர் மனக்குழப்பமடைந்த மந்திரி.

ஒன்றுந்தோன்ருத அரசன் அப்பெண்ணை நோக்கி 'பெண்மணி! மந்திரி சத்தியம் செய்கிருர். உன் வார்த்தையை நம்புவதெங்ஙனம். நீ என்ன சொல்லுகிருய்' என்ருன்.

'முருகப்பிரான்மேல் ஆணையாக மாட்சிமைதங்கிய அரசர் பெருமான் மேல் ஆணையாக என் பர்த்தாவின்மேல் ஆணையாக மந்திரி ஸர். நாதேரிஷா சொன்னது அவ்வளவும் உண்மைதான். இதுசத்தியம்' என்றுகூறி நின்ருள் அவள்.

'இந்த பைத்தியக்காரி யாரென்று தெரியவில்லையே! முதலில் சம்பந்தமுண்டென்று சொன்னுள். பின் சம்பந்தமே யில்லையென்று சத்தியம் செய்கிருள். இவளை வெளியில் கொண்டுபோய் விடுங்கள்!' என்ருன் அரசன் கோபத்துடன்.

'அரசே! கோபம்வேண்டாம். தங்களால் பைத்தியக்காரியென்று கருதப் பட்டவளும் தனக்கும் இவளுக்கும் எப்பொழுதும் சம்பந்தமில்லையென்று மந்திரியாரால் கூறப்பட்டவளுமாகிய இந்தப் பெண்மணி, தங்களிடத்தில் நன்றியுடனும் உண்மையுடனும் உழைத்துவந்த நாய் நல்லதம்பியின் மனைவி தானிவள். நான்தான் அத்ருஷ்டசாலியான நல்லதம்பி. உத்தமதேவி! மன்னர் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்!' என்று கூறிக்கொண்டே தனது முக்காட்டையும் அகற்றினுன் பெண்வேடத்திலிருந்த நல்லதம்பி.

'ஹா! நல்லதம்பியா!' என்ருன் அரசன். அவனை யோர் பணியாளென்று கருதாமல் அவனைத் தன் குழந்தையைப்போல் இறுகக் கட்டிக்கொண்டான்.

'நல்லதம்பி! இப்பொழுதுதான் அறிந்தேன் உண்மையை. முன்பின் பார்த்தறியா உத்தமதேவியின்மேல் அபாண்டமான பழியைச் சுமத்தின அப்

பாதகனை நான் சும்மாவிடப் போகிறதில்லை. உத்தமதேவி! என் மகனே! கடவுள் உங்களின்மேல் ஏற்பட்ட அபாண்டத்தை பலர்முன் இச்சபையில் நீக்கியதற்கு நாம் முருகப்பிரானை மனதார துதிப்போமாக! அச்சதிகாரன் சூழ்ச்சியை அறியாத என்னைப்போன்ற அறிவிலி அரசனுக்கு உங்களைப் போன்ற புத்திசாலிகள் தோன்றி உதவிபுரிவது எம்பெருமானின் கடாட்சமே. நாதேரிஷாவை கைது செய்யுங்கள்!' என்றுகூறி அவனைப் பார்க்கவும் வெட்கினான் மன்னன்.

'பிடியுங்கள்! பிடியுங்கள்!!' என்று கூவிக்கொண்டே ஓடினான் மந்திரியை நோக்கி நல்லதம்பி. ஆயினும் மந்திரி தன் காரியத்தில் கடைசியாக வெற்றி பெற்றார். இடையில் சொருகப்பட்டிருந்த கைவாளை உருவியதும் தன் மார்பின்மேலேயே குத்திக்கொண்டிறந்தார் அமைச்சர். 'அரசே! ஈசன் திருவுள்ளம் அப்படியிருக்க என் முயற்சி எப்படிப் பலிக்கும். இச்சிறிய மன்னிக்கத்தக்க குற்றத்திற்காக தற்கொலை செய்துகொண்டிறந்தார் மந்திரி. தன்வினை தன்னைச்சுடும் என்று லோகத்திலே கூறுவது உண்மையானது. பாவம்! ஒரு பெரிய மனிதருக்கு ஏற்பட்ட சாவைப் பார்த்தீர்களா?' என்றான் நல்லதம்பி. அவனது கண்களிலிருந்து இரண்டுதுளி வெள்ளம் கொட்டியது.

வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

தாசிகளும் தாசிகாந்தர்களும்

(ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப்புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இந் நூலைச் சிலபக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப் புத்தகத்தின் விலை எட்டணா தான்.

தபால் செலவு அணா 2. 10 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

'பேய் கொண்டோடிய பெண்'

[கா. தி. ஸ்ரீ. அய்யனேரி]

ஆம்! பேய்க் கதைதான்! உங்களுக்கும் படிக்க சற்று அச்சந்தானே! வேண்டுமானால் வாசித்து விட்டுப் பின் விபூதி போட்டுக்கொள்ளுங்கள்! பனைசூழ்ந்த மங்கலம் பாண்டிய நாட்டில் ஓர் சிற்றூர். பனந்தோப்புகளினிடையே சில குடிசைகளும் சில காரை மச்சு வீடுகளும் காணப்படுகின்றன. எங்கு பார்த்தாலும் கருப்பசாமி, சுடலை மாடன் முதலிய துர்தேவதைகளின் பீடங்களும் கற்சிலைகளும் தென்படுகின்றன. காற்றடிக் காலத்தில் இரவில் பனைகள் ஹோவென்றிரையும் போது இப்பிம்பங்களைக் கண்டுவிட்டால் எவ்வித திடமுள்ளவனுக்கும் மனதில் அரிச்சல் ஏற்பட்டே விடும்!

அமாவாசை காரிருள். சுமார் ஒன்பதுமணி. பண்ணை கோவிந்தசாமி மாளிகையின்முன் ஒரே கூச்சல். பரிதாபமான அழுகைக் குரல். 'ஐயோ தெய்வமே; வெளியே சென்ற என் தங்கை கமலாவைக் காணவில்லையே? அவளைப் பிடித்த பிசாசு தூக்கிக்கொண்டு எங்கேயோ போய்விட்டதே, எவ்வளவு பாடுபட்டோம், எத்தனை ரக்ஷைகள் எத்தனை மந்திரவாதிகள். ஒன்றும் பயன்பெறாமற் போயினவே. ஏராளமான நகைகள் வேறு கழுத்தில் கிடக்கின்றனவே. அது எங்குகொண்டு கொன்றுபோடுமோ ஏ! கடவுளே, ஏ கருப்பனா காப்பாற்றமாட்டாயா! குழந்தையைக்கொண்டு வந்துவிட்டுவிடு. உனக்குப் பொங்கலிட்டுத் தருகிறேன்!' என அவளது தமக்கை சுந்தரி அழுது புலம்புகிறாள்.

பேயின் கொடுமையைக் கண்டு, வந்தவர்கள் எல்லோரும் பிரமித்து பயத்தினால் மெய்சிலிர்த்து யாதொன்றும் சொல்லவும் செய்யவும் சக்தியற்று நின்றனர். பண்ணையார் நெருப்பின் வாய்ப்பட்ட புழுப்போல் துடிக்கிறார். என்ன செய்வது, யாரை நோவது? லைட் எடுத்துச்சென்று ஊர்பூராவும் தேடினார். கமலா, கமலா என்று கூவினார். கமலா காணவேயில்லை. கண்ணீரும் கம்பலையுமாய் வீடு திரும்பினார். கோடாங்கி இருளப்பக் கவுண்டரை அழைத்து குறி

கேட்டார். குறியும் தலங்களில்லை 'ஐயோ, இதற்கா உன்னை வளர்த்தேன். என் மனைவி, தங்கை போனது போதாதா? உன்னாலன்றோ மனம் ஆறுதலடைந்தேன். என் மனக்கோட்டையில் மண் விழுந்ததே' என கோவிந்தசாமி புலம்பியவாறே கீழே சாய்ந்தார்.

பண்ணையாருக்கு சுமார் ஐம்பது வயதிருக்கும். கிருஷ்ணன், நாராயணன் என இருமக்கள். மாங்கல்யமிழந்த அவரது தங்கை, சுந்தரி கமலா என இருசிறுமிகளை தனியேவிட்டுக் காலஞ்சென்றதால் அவர்களையும் தன் வீட்டிலே வளர்த்து சொத்துக்களை மேற்பார்த்து வந்தார். வயதில் சிறியவனுயிருந்த போதிலும் உறவையும் சொத்தையும் கருதி தன் மூத்தமகனான கிருஷ்ணசாமிக்கு சுந்தரியை மணமுடித்துக்கொண்டார். அவ்விதமே இளையவனுக்கும் கமலாவை முடித்துவிட்டால் வேறு கவலையில்லை என்று எண்ணியிருந்தார்.

கமலா படிப்பிலும் அழகிலும் புத்திசாலித்தனத்திலும் ஒப்பாருமிக்காருமின்றி விளங்கினாள். தக்க பருவமடைந்ததும் தன் குடும்பத்தின் நிலைமையையும் பிற்கால வாழ்க்கையையும்பற்றி தமக்கை, மாமன் கூறக் கேட்டு மனதில் ஒருவிதக் கலக்கங் கொண்டாள். அது முதல்தான் அவளை மனப்பேய் துன்புறுத்த ஆரம்பித்தது. மாமனிடமிருந்து அடிமை வாழ்க்கையை நடத்திவரும் தனது தமக்கையை அறவே வெறுத்தாள். அனுபவம் பெறாத, குணமற்ற, கல்வி வாசனையறியாத சிறுவனுக்கு மாலையிட அவள் மனமிசையவில்லை. அவளது இளையமாமன் மகனான ரெங்கசாமி என்பவனை அவள் நேசித்தாள். தக்கபிராயமும், அழகும், படிப்பும், நற்குணமும் ஒருங்கே யமைந்திருந்ததால் நாராயணனைவிட அவன் பன்மடங்கு மேலானவன் என நினைத்தாள். ஆனால் தன் மனோரதம் நிறைவேறுவதில் தடைகளிருப்பது கண்டு பெருமூச்செறிவாள். சிற்சில சமயங்களில் அறிவிழந்து கீழே சாய்வாள்.

இவ்வித வெளித்தோற்றத்தைக் கண்டுதான் பண்ணையார் காற்றின் சங்கையென அறிந்து ரக்ஷைகள் கட்டி, ஜபம்செய்து, விபூதிபோட்டு துர்தேவதைகளுக்கெல்லாம் பொங்கலிட்டு அவளை ஓட்டிய பிசாசை ஓட்ட வழிதேடி வந்தார்.

கமலாவைக் காணாததால் கோவிந்தசாமியும் சுந்தரியும் செய்வது இன்னதென்று அறியாமல் ஊணுறக்கமற்று பித்துப்பிடித்தவர்கள் போல் புலம்பிப் புலம்பித் தவித்தார்கள். ஊரெங்கும் ஒரே பேச்சு, ஒரே கவலை. நாட்கள் பத்து பறந்து சென்றன. 'பேய்கொண்டோடிய பெண்' என தினசரிப் பத்திரிகைகளில் செய்திகள் பறந்தன.

நடுநிசி. ஒருவர் முகம் ஒருவருக்கு தெரியாத அடர்ந்த இருள். சில்வண்டுகளின் இரைச்சல் தவிர வேறு யாதொரு

சப்தமுமில்லை. நெருங்கிய புதர்காடு. ஓர் உடை மரத்தடியில் இரு உருவங்கள் பேசும் தொனி காற்றில் கலக்கின்றது 'என் அன்பே, உன்னை அடைய எத்தனை வருடங்களாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன். உன் மாமன் என்னை வரவொட்டாமல் செய்ததினாலல்லவா நமது எண்ணம் கைகூடாமற் போயிற்று. ஈசன் இன்றுதான் கிருபை செய்தான். எனது உயிர் உள்ளளவும் உன்னை மறவேன். நாம் ஒருவருக்கும் தெரியாது வேற்றிடம் சென்று உனது நகையை மூலதனமாகக்கொண்டு வியாபாரம் செய்து பிழைப்போம்' என்றது ஓர் உருவம்.

'காதல, நானும் அத்தகைய சமயத்தையே எதிர்பார்த்திருந்தேன். பால்மணம் மாறாப் பாலனை மணந்து பணம் பறிக்கும் பாவையர்போல் பாதிவிரத்யம் (?) இழந்து அடிமை வாழ்க்கையை நடத்த என் மனம் துணியாதன்றோ! ஆகவே எனது உடல் பொருள் ஆவி மூன்றையும் தங்களுக்கே அர்ப்பணம் செய்கின்றேன்' எனக் கூறி அருகில் நெருங்கியது மற்ற உருவம். இக்காதலர்கள் யாரென்று யூகிக்கிறீர்கள்? கமலாவும் ரெங்கசாமியுமே.

தூத்துக்குடி கடைத்தெருவில் ஒருவன் ஒரு நகையை விலை பேசிக்கொண்டிருந்தான். அவனது மேனி மாசடைந்தும் ஆடை அழுக்கடைந்தும் காணப்பட்டன. சற்று தூரத்தில் மெய்சோர்ந்த சுமார் பதினெட்டு வயதுள்ள ஓர் நங்கை நின்றுகொண்டிருந்தாள். எதிர்பாராதவிதமாய் இருவரும் போலீசாரால் கைது செய்யப்படுகின்றனர். பத்திரிகையில் கண்டபடி காணாமற்போன பெண் என நினைத்து, பனைசூழ்ந்த மங்கலத்துக்கு தந்தி கொடுத்தனர்.

பண்ணையாரைக் கண்டதும் இருவர் முகமும் வெளுத்தது. தலை குனிந்தபடியே நின்றார்கள். கோவிந்தசாமி கமலாவைக் கூப்பிடவே, அருகிலுள்ளவரையே தான் நேசிப்பதாயும் அவ்விதமே தன்னை விவாகம் செய்து கொடுப்பதானால் வரத்தடையில்லையென்றும் கூறினாள். பண்ணையாருக்கோ கோபமும் ஆத்திரமும் பொங்கி எழுந்தது. எனினும் அவைகளை அடக்கிக்கொண்டு தான் அவ்விதமே செய்வதாய்க் கூறி அழைத்து வந்தார்.

காலதாமதமன்னியில் விவாக முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது. குறிப்பிட்ட தினத்தில் கமலாவை நாராயணனுக்கே மணமுடிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அவள் என்ன சொல்லியும் மாமன் காதில் புகவில்லை. அடியும் உதையும் வசையும் கிடைத்ததைத் தவிர வேறில்லை. இரண்டே நாட்கள் உள்ளன வீட்டில் கலியாணத்திற்காக ஏகதடபுடல்! கமலா தன் அறையில் முகம்மூடிப் படுத்தபடியே தூங்குகிறாள்! கலியாண தினத்தன்று அதிகாலையில் சுந்தரி பெண்ணை அலங்கரிக்க எழுப்புகிறாள். என்னே விபரீதம்! கமலா

அசைவற்ற மீளா தூக்கத்திலிருந்தாள்! தமக்கை திக்பிரமை கொண்டாள். அவளைப் பிடித்த பிசாசு அவள் உயிரைக் கொள்ளைகொண்டே சென்றது எனக்கருதி ஓலமிட்டாள்.

மணக்கோலம் பிணக்கோலமாகியது. அந்தோ பரிதாபம்! அவளருகில் கிடந்த லட்டர் மூலமாய் அவளது வருங்கால வாழ்க்கையே பிசாசாகவும், கருதிய கணவனை கைக்கு எட்டாதாக்கிய விதிவசமே விஷமாகவுமிருந்து உயிர் உடலைப் பிரித்தது என பண்ணையார் அறிந்தார். தனது மதிகெட்ட செய்கையையும் பிடிவாத குணத்தையும்பற்றி தாமே தன்னை நொந்துகொண்டார்.

ஊர் சேர்ந்த ராமசாமி, பிறரால் காரணமற்ற நிந்தனைக்குள்ளாகி புத்தி சுவாதீனமற்றவனானான். கமலா விண்ணுலகெய்திய விஷயம் மனதிற் செல்லவே, உயிர்வாழச் சகியாதவனாய் கத்தியை மார்பிற் செலுத்தி கமலாவைப் பின் தொடர்ந்தான். உடல்களிரண்டும் ஒன்று சேர்ந்து ஒழிந்தன; உயிர்களிரண்டும் ஒன்றுபட்டு மிளிர்ந்தன! காதலர் உயிர்கள் சாந்தியடைக! என்னே பணத்தின் ஆசை; இனிமேலாவதும் சுதந்திரமற்ற பிசாசு ஓடிவிடாதா!

தலைவலிச் சூரணம்

இந்தச் சூரணத்தில் ஒரு சிட்டிகை எடுத்து வாயில்போட்டுக் கொண்டு ஜலம் சாப்பிட்டால் 5 நிமிஷத்தில் தலைவலி நீங்கும்; தவிர உடம்புவலி, கைகால்வலி, இவைகள் போம். எத்தகைய சுரமானாலும் ஒரு சிட்டிகை மருந்து சாப்பிட்டவுடன் வியர்வைவிட்டு சுரம் நீங்கும். மருந்து உபயோகிக்கும் முறை மருந்துடன் அனுப்பப்படும். இம்மருந்து வீட்டிலிருப்பின் எந்தப் பாமும் எவ்வித அஞ்சனமும் வேண்டியதில்லை. புட்டி 1-க்கு விலை அணா 8.

கிடைக்குமிடம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

சிவகாமி அல்லது
தன் கற்பை காத்த காரிகை

[V. ஜெயராமன்]

(சென்ற மாதத் தொடர்ச்சி)

இதற்குள் விடு நெருங்கி விட்டது. சிவகாமியை அவள் வீட்டின் பின்பக்கம் போகும்படி உத்தரவிட்டு, தன்னில்லம் சென்றார் நடேசன். சிவகாமி கண்ணயர்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவள் தாய் அவளை அலங்காரம் முதலியவைசெய்ய எழுப்பிவிட்டாள். நடேசனுக்கும் 'திருமண அழைப்பு' அனுப்பியிருந்ததால் விடியற்காலை 5மணிக்கெல்லாம் அவர் சிவகாமியின் வீட்டிற்கு வந்தார். சிவகாமியோ, காளித்தாய் கட்டாயம் தன்னைக் காப்பாற்றுவாள் என்ற எண்ணத்துடன் இருந்தாள். ஜனங்கள் எல்லோரும் ஆற்றிற்குசென்று காலைக் கடன்களை முடித்துக்கொள்ளப் போவதும் வருவதுமாக இருந்தனர். நடேசரும், காலைக்கடன்களை முடித்துக்கொள்ள வெளியே வந்தார். எதிர்வீட்டு திண்ணையில், சிவகாமியுடன் பேசிவந்த ஆடவர் உட்கார்ந்திருக்கக்கண்டு, அவரிடம் சென்று நமஸ்கரித்து 'தேவரீர் யார்'? இங்கு தனிமையாக உட்கார்ந்திருக்கக் காரணமென்ன?' என்று வினவினார்.

தாஸன்:—இதென்ன கூட்டம்?

நடேசன்:—இவ்விடத்தில் விவாகம்.

தாஸன்:—யாருக்கு?

நடேச:—வீராசாமி ஐயர் மகளுக்கு.

தாஸன்:—ஜன்னலில் நம்மை கவனித்துக் கொண்டிருக்கும் பெண்தானே, அவர் மகள்?

நடேச:—ஆம்.

தாஸன்:—உமக்கென்ன வேண்டும்?

நடேச:—என் பிராண ஸகி.

தாஸன்:—நீரா மாப்பிள்ளை?

நடேச:—இல்லை, வேறு ஒருவர்.

தாஸன்:—மணமகனை காண்பியும், பார்க்கலாம்.

நடேச:—'அதோ நிற்கிறவர்' என்று அவ்விடத்தில் நின்று கொண்டிருந்தவரை சுட்டிக் காண்பித்தார்.

தாஸன்:—இவ்வளவு வயதானவருக்கா, இச்சிறுபெண்ணை நிச்சயித்தார்கள்? இது முடிவதாய் எனக்கு தோன்றவில்லை.

நடேச:—தேவரீர் அப்படிக்கூற காரணமென்னவோ?

தாஸன்:—முக்கியமானவர்கள் மனம்மாருக இருக்கிறது.

நடேச:—எல்லாம் சித்தமாய்விட்டதே. யார் யார் மனம் மாருக இருக்கிறது?

தாஸன்:—உன் மனமும், உன் ஸகியின் மனமுந்தான்.

நடேச:—இதெப்படி உங்களுக்குத் தெரியும்?

தாஸன்:—எல்லாம் காளிகோயிலில் நடந்ததுதானே.

நடேசன் மிகுந்த பக்தியுடன், தன் இருகாங்கைளயும் கூப்பி, 'தேவரீர்! நான் தெரியாமல் கொண்ட விபரீத எண்ணத்திற்காக என்னை மன்னிக்கவும். எங்களை தடுத்தாட்கொள்ளுவது தேவரீர் கடமை. எங்கள் இக்கட்டுகளை தீர்த்து, எங்களை சேர்த்து வைக்கவும்' என்று பிரார்த்தித்தார்.

நடேச:—என் மனதில் ஓர் சந்தேகமிருக்கிறது. அதை தீர்க்கும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

தாஸன்:— அது என்ன சந்தேகம்?

நடேசன்:—பாம்புருக்கொண்டு, என்னை மடக்கி கல்லின்மேல் உட்காரவைத்ததும், என் ஸகி சிவகாமியுடன் பேசிவந்ததும் தாங்கள் தானே?

தாஸன்:—ஆம், நான் தான் அவ்விதம் செய்தேன்.

நடேசன்:—நான் உங்களை பாம்புருவுடன் கண்டதும் பயந்து கோயிலுக்குசெல்ல ஓடினேனே. அப்பொழுது என்னை ஏன் மடக்கி கொண்டுவந்து கல்லின்மேல் உட்காரவைத்தீர்கள்?

தாஸன்:—நீ அப்படி கோயிலுக்கு செல்வாயானல், அவள் பிரார்த்தனைக்கு பங்கம் உண்டாகும். அவள் உன்னை கண்டதும், தன் பிரார்த்தனையை மறந்துவிடுவாள். இரண்டாவதாக, காளித் தாயாகிய நான் அவளை பரீக்ஷிக்கும்பொழுது, நீ வருவாயானல், உபபலத்தால், அவள் தைரியமாக என்னுடன் வாதாடி, என்னை இழிவாக பேசுவாள் என்று அவ்விதம் செய்தேன்.

நடேச:—ஏழையாகிய நான் இதை அறிந்துகொள்ள சக்தி யற்றவனுய் இருந்தேன். தாங்கள் திருவாக்கால் என் சந்தேகம் தீர்ந்தது. தங்களுடைய சயரூபத்தை காண நாங்கள் கொடுத்து வைக்காததைப்பற்றி வருந்துகிறேன்.

தாஸன்:—'நடேசா! வருந்தாதே. என் சுபரூபத்தை நீங்கள் இருவரும் கண்டு களிப்பீர்கள். நீ விவேகியானதால், இப்பொழுது நாமிருவரும் பேசிய சங்கதிகளை உன் சகியை தவிர வேறு ஒருவருக்கும் தெரிவிக்காதே. போய்வா, கூடிய சீக்கிரம் நீ உன் சகியை அடைந்து சுகமாய் வாழ்வாய்' என்று வாழ்த்தினார்.

நடேச:—'எல்லாம் தங்கள் பாக்கியம்' என்று கூறிச்சென்றார்.

சிவகாமி, ஜன்னல் வழியாக தன் காதலரும் காளிதாஸரும் பேசிக்கொண்டிருப்பதை கண்டு மகிழ்ந்தாள். நடேசன் சென்றவுடன், தாஸர் எழுந்து வீராசாமி ஐயர் வீட்டிற்குள் நுழைந்து, அங்கிருந்த தண்ணீரை சிறிது எடுத்து, மணப்பந்தலின்மேல் வீசி விட்டு மறைந்து போனார்.

உடனே விவாகப் பந்தல் பற்றிக்கொண்டது. எல்லோரும் ஓடி வந்து தீயை அணைக்க முயற்சித்தனர். இதற்குள் பந்தல் முழுமையும் எரிந்து சாம்பலாய் போய்விட்டது. சிலர் ஓடி வாசலில் போட்டிருந்த பந்தலை பிரித்து விட்டனர். ஜனங்கள் எல்லோரும் இதென்ன விபரீதம், விளக்கு ஒன்றும் அருகிலில்லாமலே பற்றிக்கொண்டதே என்று பயந்துவிட்டனர். பந்துக்கள் யாவரும் விவாகத்திற்கு அவசகுனமாய் விட்டபடியால், நிறுத்தி விடுவதென தீர்மானித்தார்கள். ஆனால் வீராசாமி ஐயரிடம் ஒருவரும் சொல்ல முன்வரவில்லை. கடையில், நடேசனின் தந்தை குமாரசாமி ஐயர் வீராசாமி ஐயரிடம் சென்று, 'தெய்வத்துக்கே சம்மதமில்லையானால், நாம் என்ன செய்யலாம். இதுவா ஆண்பிள்ளைத்தனம், வந்திருப்பவர்களெல்லாம் பசியால் வருந்துகிறார்கள். நீங்கள் இப்படி குப்புறப் படுத்துக்கொண்டிருப்பது நன்றாகவில்லை. மற்றொரு முகூர்த்தம் பார்த்து விவாகத்தை முடித்துவிட்டால் போகிறது' என்றார்.

அதற்கு வீராசாமி ஐயர் 'என்னால் ஒன்றும் செய்யமுடியாது. உங்கள் மனதிற்கு தோன்றியபடி செய்யுங்கள்' என்று கூறிவிட்டார். உடனே குமாரசாமி ஐயர் உள்ளேசென்று சமையல் செய்யும்படி உத்தரவு செய்துவிட்டு, மாப்பிள்ளையும் மற்றும் பந்துக்களும் இருக்குமிடத்திற்கு சென்றார்.

குமாரசாமி-ஐயர்:—மாப்பிள்ளை எங்கே?

மாப்பிள்ளை:—(முன்வந்து) 'இதோ இருக்கிறேன்' என்றார்.

குமார:—உங்கள் யோசனை என்ன?

மாப்பி:—என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?

குமார:—தெய்வச்செயல் இப்படி நேர்ந்தால் நம்மால் என்ன செய்யமுடியும்?

மாப்பி:—வீராசாமி ஐயர் எங்கே?

குமார:—அவர் துக்கத்துடன் வெளிவர அவமானப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

மாப்பி:—அவர் என் அதிர்ஷ்டவசமாய் கிடைத்தும், இப்படி பாய்விட்டது.

குமார:—அவர் மிகவும் அதைரியல்தர். அவர் எழுந்து உலாவ மூன்றுநாள் செல்லும். முடிவில் உங்கள் கருத்தென்ன?

மாப்பி:—இவ்விடத்தில்தான் இப்படியாச்சு. பெண்ணை கூட்டி வந்தால், நாங்களே எல்லா செலவுஞ்செய்து, எங்கள் ஊரில் முடித்துக் கொள்ளுகிறோம்.

குமார:—அப்படியானால் நீரோ பெண்ணைக்கேட்டு அழைத்துக் கொண்டுபோம்.

மாப்பி:—அவசரத்தால் ஏதோ சொல்லிவிட்டேன். கோபிச்சுக் கொள்ளாதேயுங்கள். இனிமேல் இவ்விடத்தில் தாகசாந்தி செய்ய மாட்டோம். கிடைப்பதற்கு அரிதான அருமையான பொருள் கிடைத்தும், தவறிவிட்டதால் இனியென்ன சுகம்?

என்றுகூறி, தன் சகோதரி ராஜம்மாளிடம்சென்று விடை பெற்றுக்கொண்டு, எல்லோருடனும் போய்விட்டார். 'மாப்பிள்ளையே போய்விட்டாரே. இனிமேல் நமக்கு என்னவேலை' என்று பந்துக் களும் போய்விட்டார்கள். குமாரசாமி ஐயரும், நடேசனும் தங்கள் இல்லம் சென்றனர். சிவகாமியோ மிகவும் சந்தோஷங்கொண்டு, தனக்கு அருள்புரிந்த காளிகாதேவியை போற்றினாள். நடேசனும் சந்தோஷத்துடன் இருந்தார்.

வீராசாமி ஐயரும் ராஜம்மாளும், மிகுந்த வேதனையாலும் அவமானத்தாலும் உடல் மெலிந்தார்கள். இதைக்காணச் சகியாத சிவகாமி, மறுநாள் தன் பெற்றோர்களிடம்வந்து, 'அம்மா! நேற்று நான் ஒரு கனவு கண்டேன். அது வெகு விசித்திரமாக இருக்கிறது. அதுவுமல்லாமல் அதனால்தான் நம்முடைய விவாகமும் நின்று விட்டது என்று எண்ணுகிறேன்' என்றாள்.

ராஜம்மாள்:—அதென்ன அப்படிப்பட்ட அதிசயமான கனவு கண்டாய்? சொல் பார்க்கலாம்.

சிவகாமி:—நேற்று இரவு, ஓர் சிறுபிராமண வாலிபன், என் கனவில் தோன்றி 'வழக்கமாக முதலில் காளித்தாய்க்கு போட வேண்டிய பூசை போடாததாலும் இவ்விவாகத்தில் அம்மனுக்கு இஷ்டமில்லாததாலும், இம்மாதிரி மணப்பந்தல் பற்றிக்கொண்டது' என்று சொன்னார். விழித்துப்பார்க்க பிராமண வாலிபனைக் காணோம். 'எனக்கு அதிலிருந்து தூக்கமேயில்லை' என்று தனக்கு காளிதாசன் கூறியதை கனவு கண்டதைப்போல் கூறினாள்.

இதைக் கேட்டதும் வீராசாமி ஐயர், ராஜத்தைப் பார்த்து, "நோக்கும் வயசாச்சு, நேக்கும் வயசாச்சு, என்ன பிரயோசனம். இஷ்டதேவதையாகிய காளிக்கு பூசைபோடாததால் அல்லவோ இவ்வளவு காரியங்களையும் நடத்தி அவமானப்பட்டோம். அதனால் நாளையதினம் வெள்ளிக்கிழமை ஆனபடியால் கலியாண சாமான்களை யெல்லாம் பாழாக்காமல், கோயிலுக்குச்சென்று, காளிக்குப் பூசை போட்டுவிடலாம்' என்றார்.

ராஜம்மாளும் ஒத்துக்கொண்டாள். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை, சகல சாமான்களையும் எடுத்துக்கொண்டு, தன் சினேகிதர்களை யும் நெருங்கிய பந்துக்களையும் சிவகாமியையும் அழைத்துக்கொண்டு கோயிலுக்குச்சென்று, காளிக்கு அபிஷேகம் முதலியவைகளை முடித்து, கலியாணத்திற்கு வாங்கிக்கொண்டு வந்திருந்த ஓர் பட்டுப் புடவையை அம்மனுக்கு சாத்தி அலங்காரம்செய்து, நைவேத்தியம் முதலியவைகளை முடித்து, திரிகாண சுத்தியாய் காளியை தாங்கள் செய்த பிசகை மன்னிக்கும்படி பிரார்த்தித்தார்கள்.

அப்பொழுது 'ஓய் பிராமணரே! உமக்குப் புத்தியில்லையா? உம் பெண்ணின் இஷ்டப்படி, நடேசனுக்கு விவாகம்செய்து கொடுக்கவும்' என்ற ஓர் அசரீரி கேட்டது. எல்லோரும் பிரமித்து விட்டார்கள். பிறகு வீராசாமி ஐயர் அப்படியே செய்வதாகச் சொல்லி, காளியை நமஸ்காரம் செய்துகொண்டு வீடுதிரும்பினர்.

தன் இல்லம் சென்றவுடன் வீராசாமி ஐயர், ஓர் ஆளை குமாரசாமி ஐயர் வீட்டிற்கு அனுப்பி அவரை கூட்டிவரும்படி சொன்னார். குமாரசாமி ஐயரும் வந்தார். அவரிடம் நடந்த சமாச்சாரங்களை தெரிவித்து, தன் குமாரத்தியை நடேசனுக்கு கொடுக்கப்போவதாக கூறினர். குமாரசாமி ஐயரும் ஒத்துக்கொண்டார்.

சித்திரை மாதத்திலேயே மற்றொரு நாள் முகூர்த்தத்திற்கு நிச்சயிக்கப்பட்டது. சிவகாமி அளவிலா சந்தோஷம்கொண்டு காளித்தாயை அல்லும் பகலும் தியானித்தாள். நடேசனும் வெகு சந்தோஷத்துடன் விவாகத்திற்காக ஒரு மாதம் ரஜா எடுத்துக் கொண்டார். விவாக நாள் நெருங்கிவிட்டது. நல்ல சுபவேளையில் பந்தற்கால் நாட்டப்பட்டது. கலியாணத்திற்கு வரவேண்டியவர்க ளெல்லாம் வந்திறங்கி விட்டார்கள். வீதியில் பந்தல்கள் போடப் பட்டன. மேல்மாடியில் சச்சேரிப் பந்தலலங்கரிக்கப்பட்டது. எங்கே பார்த்தாலும் குருத்தோலை, சித்திர தோரணங்கள், முக்கனி குலைகள், பனங்குத்தல்கள், பலவிதமான பதுமைகள் முதலியவைகளால் ஒருவிதக் குறைவுமின்றி அலங்காரம் செய்யப்பட்டது.

முகூர்த்தத்திற்கு முந்தியதினம் நடேசனை அவன் பெற்றோர் கள் வெகு ஆடம்பரத்துடன் அலங்கரித்து ஊர்கோலத்துடன்

சிவகாமி வீட்டை அடைந்தார்கள். உடனே இரண்டு சுமங்கிலியர்கள் பாட்டுகள் பாடி ஆலத்தி யெடுத்தார்கள். மறுநாள் சூரியோதயத்துக்கு முகூர்த்தமாரம்பித்து, பாணிக் கிரகணமும் மாங்கல்ய தாரணமும் நிறைவேறின. அன்றையதினம் ஏழைகளுக்கு பலகாரங்கள் வெகு தாராளமாக கொடுக்கப்பட்டன. சாயந்திர வேளையில் பாட்டுக் கச்சேரி நடைபெற்றது. இவ்விதமான ஆடம்பரத்துடன் விவாக மகோற்சவம் முடிவடைந்தது. வந்திருந்த பந்துக்களும் சிநேகிதர்களும் தங்கள் தங்கள் இல்லம் சென்றனர். நடேசனும் சிவகாமியும் அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. தங்களுக்கு உதவிசெய்த காளித்தாயைப் போற்றினார்கள். துப்பறியும் கோவிந்தனும் விவாகத்திற்கு வந்திருந்தார். அவரும் தம்பதிகளை ஆசிர்வதித்து, அநேகவிதமான வெகுமானங்கள் செய்தார். ரங்கசாமி ஐயருடைய வைர கம்பெனிக்கு நடேசனை முதலாளியாக ஏற்படுத்தி தான் மேல் காரியங்களை கவனித்து வந்தார்.

நடேசன் தன்னுடைய வேலையை ராஜிநாமா செய்துவிட்டார் சிவகாமியின் பெற்றோர்களும் நடேசனின் பெற்றோர்களும், தம்பதிகளும் புறப்பட்டு சென்னையை அடைந்தனர். நடேசன், துப்பறியும் கோவிந்தனின் உத்தரவுப் பிரகாரம் ரங்கசாமி ஐயர் கம்பெனிக்கு சொந்தக்காரரானார்.

ஒருநாள் நடேசனும் சிவகாமியும் தங்கள் பங்களாவில் ஓர் அறையில் தனிமையாக பேசிக்கொண்டிருக்கும்பொழுது, காளித்தாயை நினைத்தார்கள். உடனே அவர்களுக்கு முன், முன்பு தோன்றிய பிராமண வாலிபர் தோன்றினார். இருவரும் வணங்கினர். பிறகு வாலிபர் நடேசனை பார்த்து 'நீ என்னுடைய சுயரூபத்தை பார்க்க ஆவல்கொண்டாய் அல்லவா. அதனால் இதோ உங்களுக்கு என்னுடைய சுயரூபத்தை காண்பிக்கிறேன். கண்டு களியுங்கள்' என்று கூறி தன்னுடைய சுயரூபத்துடன் காளியாக தோன்றினார். நடேசனும் சிவகாமியும் அளவில்லா சந்தோஷம்கொண்டு காளிக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம்செய்து தங்களை என்றும் காப்பாற்றும்படி வேண்டினர். காளித்தாய் அப்படியே இருவரையும் நீடுழி வாழும்படி ஆசிர்வாதம்செய்து, தான் என்றும் அவர்களுக்கு உதவி புரிவதாக கூறி மறைந்துவிட்டாள். சிவகாமியும் நடேசனும் அன்றைய முதற்கொண்டு காளித்தாயை இடைவிடாது தோத்திரம்செய்து வந்தனர். நடேசன் தன் கம்பெனியை முன்னுக்கு கொண்டுவர பாடுபட்டு கோவிந்தனுடன் ஒத்துழைத்தார்.

சிவகாமியும் நடேசனும் மதனும் ரதியும்போல் வாழ்ந்து வந்தனர்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

'கடிதத்தில் அடங்கிய கதை'

—:o:—

[C. S. ராமன்]

கண்மணி! நான் உன்னிடத்து எப்பொழுதும்போல் குதூகலமாக பேசியாடி மகிழாது, மாறுபட்ட செய்கைகளுடன் நடப்பதின் காரணத்தை எடுத்துக் கூறி சந்திரமண்டலமெனத் தகுந்த உன் முகத்தை மூடியிருக்கும் சோகமேகத்தை போக்க விரும்புகின்றேன். விஷயங்களை அறிந்த பின் என்னைப்பற்றி எவ்விதமேனும் நினைத்துக்கொள். தற்கொலை புரிந்துகொள்ளாது இப்பாழ் உலகில் இக்கட்டை திரிந்துகொண்டு இருப்பது உனக்காகவல்ல! என்னால் தன் இன்னுயிரை மாய்த்துக்கொண்ட ஓர் ஆத்மாவின் கடைசி வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காகத்தான்! இவ்விதம் நான் கூறுவதற்கு மன்னிப்பாய்.

உன்னை மணஞ்செய்துகொண்ட சில மாதங்கட்கு பிறகு நான் வேட்டையாடப் புறப்பட்டது உனக்கு ஞாபகமிருக்கலாம். வேட்டையாடியதும் இல்லம் நோக்கி வரும்பொழுது யாழினுமினிய குரலால் 'என்னை மீட்பாய்' என்ற பாடல்கேட்டு, அக்குரல்வந்த திக்கு நோக்கி இருட்டுவதையும் எண்ணாதவனாய்ச் சென்றேன். ஆங்கு ஓர் கல்லின்மேல் சாந்தமே உருவாக, மாநிறமான தேகத்தையும் யாவற்றையும் தன்னிடத்து இழுக்கும் காந்தமென்ன கண்களையுடைய, தன்னையும் மறந்து பாட்டிலேயே கவனம் செலுத்தி உட்கார்ந்திருந்த, தாழ்ந்த ஜாதியினள்போல் தோன்றிய ஓர் மங்கையைக் கண்டேன். அப்பெண் சிறிதுநேரம் கழித்து என் பக்கம் திரும்பி அன்னிய புருடர் இருப்பதை கண்டு சரேலென எழுந்து தன் வீட்டை நோக்கிச் செல்லலானாள். நான் ஒரே பாய்ச்சலாக அவள் முன்னின்று வழிமறித்து 'பெண்ணே, நீ யார்? உன்னிருப்பிடம் யாது? உனக்கு விவாகமாகி விட்டதா? உனது பெற்றோர்களின் நாமதேயம் யாது? என்னை உனக்கு அடிமைப் படுத்திவிட்டு இப்படி கைவிடுத்துச் செல்லுதல் தகுமா? என்னை மணஞ்செய்து கொள்ளுகிறேன் என மொழிந்தாலன்றி உன்னை வீட்டிற்குச் செல்ல விடமாட்டேன்' என்றேன்.

அப்பெண் அச்சமும் கோபமுங் கொண்ட முகத்தினளாய் 'ஐயா, கற்றறிந்தவரும் நற்குடியிற் பிறந்தவருமாகிய உம்போன்ற

ஆடவர்கட்கு இது எற்ற செய்கை யன்று. நான் ஜாதியிற் குறத்தி. துன்பமும், எழ்மையையுமே பூஷணமாகக் கொண்ட ஏழைப் பெண்களை சோதிப்பது அழகன்று. இருட்டும் சமயம் ஆகிவிட்டது. வழி விடுங்கள்' என்று கூறி நடக்க வாரம்பித்தாள். நான் இரண்டு விநாடி அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டேன். உடனே மீண்டும் அவள் முன் போய்நின்று 'பெண்ணே! நீ யெச்சாதியினளாய் இருந்தபோதிலும் சரி, எனக்கு ஒருவித தடையுமில்லை. என்னிடமுள்ள செல்வம் நம் ஜீவிய காலம் வரையில் நமக்குப் போதுமானது. என்னை நீ மணம் செய்து கொண்டாலாயிற்று. மறுப்பாயாகில் இதோ உன் எதிரிலேயே உயிரை மாய்த்துக்கொள்ளுகிறேன்.' என்று சொல்லி சுருள் துப்பாக்கியை வெளியில் எடுத்தேன்.

'ஐயா, அதை உறையில் போடுங்கள். நீங்கள் என்னை உண்மையாக நேசிக்கிறீர்களா? அல்லது கீழ் மக்களைப் போன்று காமத்தீயை தணித்துக் கொள்வதற்காகத்தான் இப்படிப் பேசுகின்றீர்களா? அது இறைவனுக்குத்தான் தெரியவேண்டும்! 'இவ்வுலகம் மிகப் பொல்லாதது. வாழும் மக்கள் காமப்பித்தேறியவர்கள். தேன்போன்று இனிமையான வார்த்தைகள் பல புகன்று காரியத்தை முடித்துக் கொண்டு பின்னர் காலால் எட்டி உதைத்துச் செல்லுமியல்புடைய காமக் கசடர்கள். மதுவினுல் பரவசப்பட்டு அருகில்சென்று வாரிக் குடித்து மயக்கமேற்பட்டு அதிலேயே அறிவிழந்து இறக்கும் ஈக்கள்போல், தேனொழுகப் பேசும் நயவஞ்சகரின் வாக்கியங்களில் சிக்கி அறிவிழந்து தங்களின் அரும் அணிகலமாம் கற்பை இழந்து காரி உமிழப்பட்டு மானம் தாங்காமல் மரிப்பார்கள் ஆடவர் பால் சிக்கிய பெண்களும். ஆகவே குழந்தாய், நீ நன்கு ஆராய்ந்தே புருஷனைக்கொள்' என என் தகப்பனுர் மரணப் படுக்கையில் சொன்ன மொழி எனக்கு நினைவிருக்கிறது' என்றனள்.

மீண்டும் 'சரி, உங்கட்கு மனைவிமக்கள் உண்டா? நீங்கள் எப்பேர்பட்டவர்களோ? அழகற்றவளும் ஜாதியிற் குறத்தியுமாகிய என்னை மணம் புரிந்து கொண்டால் ஆயுள்முழுவதும் என்னை விட்டுப் பிரியாது வாழ்வீர்களா? உலக விஷயங்களை நன்கறியாத பேதைப் பெண்ணுகிய என் மனம் என்றேனும் உடைபட்டால் பிறகு கூடுவது உடைந்த கற்களை மீண்டும் ஒட்டவைப்பது போலத்தான். எந்நாளும் என்னைவிட்டு பிரியாது 'என் காதலுக்கு பதில் அளிப்பதாக' விருந்தால் மணம்செய்து கொள்ளுகிறேன்' என்றனள்.

நான் மணமாகாதவன் என்று பொய் புகன்று அவளை மணம் புரிந்துகொண்டேன். இன்பமாக மூன்று மாதங்கள் சென்றன. ஓர்நாள் அவள் 'நாதா, நம் வாழ்க்கையை நலப்படுத்த ஒரு குழந்தை பிறக்கப் போகிறது' என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்தாள். அவ்வார்த்தைகள் இடிபோல் என்னைத்தாக்கிற்று. என்னை அறியாமலே

மல்லிகாவின்மேல் என்மனம் வெறுப்படைந்தது. இதுவரையில் மறந்து துன்பத்திற்குள்ளாகிய உன்மீது பாசம் உண்டாயிற்று. அவளுக்கு செய்து கொடுத்த வாக்குறுதியை மறந்து மணம்செய்வதற்கு முன்கூறிய வார்த்தைகளையும் உன்னாது உன்பால் வந்தடைந்தேன். நீ கற்பிற்சிறந்த காரிகையானபடியால் மூன்று மாதகாலமாக நான் எங்கு சென்றேன் என்று கேட்கவில்லை. இவ்விதம் மல்லிகாவை மறந்து உன்னுடன் வாழ்க்கை நடத்தி வருகையில் ஒரு தினசரி பத்திரிக்கையில் 'ஒரு பெண்ணின் கதி' என்று தலைப்பிட்டுவந்த சமாசாரத்தைப் படித்தேன். அது என் வாழ்க்கையை குறித்து, என்னைப் பற்றியே எழுதியதாக இருந்தது. உடனே அச்சமாசாரம் மல்லிகாவை நினைப்பூட்டியது. நான் மல்லிகாவுக்கு செய்த துரோகத்தை நினைந்து வருந்தினேன். மானமுள்ளவளாகிய அவள் உயிருடன் வாழ்கின்றாளா அல்லது உயிரிழந்து விட்டனளா? உயிருடன்மட்டும் இருந்தால் அவள் பாதங்களில் பணிந்து மன்னிப்புப் பெற்று அவளை சத்தியமாக கைவிடுவதில்லை என்று உறுதி செய்துகொண்டு புறப்பட்டேன்.

* * *

திடீரென்று என் மண்டையில் அடிவிழுந்தது. உதிரம் பெருக மயக்கமேற்பட்டு கண்கள் சுழல மூர்ச்சித்தேன்.

* * *

கண்விழித்து பார்த்தபொழுது ஓர் கட்டிலில் கிடத்தப்பட்டு இருந்தேன். என்முன் மல்லிகாவும் நின்றுகொண்டு இருந்தாள், ஆறு கருத்த தடித்த மனிதர்கள் கையில் தடிபிடித்தவண்ணம் நின்று இருந்தனர். அப்பொழுது மல்லிகா 'திருடர்களே! உங்கள்முன் கிடத்தப்பட்டிருக்கும் இம்மனிதர் பலமிழந்து இருக்கிறார். நீங்கள் ஏவுகின்ற வேலையை செய்ய இவரால் முடியாது. நானே திடசரீரத்துடன் இருக்கிறேன். இவரை விடுவித்து என்னை அடிமைப் படுத்திக் கொள்ளுங்கள்' என்று கூறினாள். அவள் மொழிகள் என்னை கூறிய அம்புகளால் குத்தியது போன்று இருந்தது எனலாம். என்னே! அவள் என் மாட்டுக் கொண்டிருந்த அன்பு! 'அன்பிற்குமுண்டோ அடைக்கும் தாழ்! என்னே அவள் வாழ்க்கையில் கொண்டுள்ள வெறுப்பு. ஹே ஈசா என்னை மன்னிப்பாய். ஓர் பெண்ணிற்குள்ள அறிவைக்கூட பெற்றிராத நான் இவ்வுலகில் இருந்து யாது பயன்! 'திருடர்களே! அப்பெண்மணி கூறும் வார்த்தைகளை கேட்காதீர்கள். நானே திடகாத்திரமான புருஷன். அம்மங்கையோ குழந்தைக்காரி, கவலையினாலும் துன்பத்தினாலும் துவண்டு கிடக்கும் பெண்மணி. ஆதலால் நான் உங்களிடத்து அடிமைப்பட தகுதியுள்ளவன்' எனக்கூறி எழுந்தேன். இக்கூற்றினைக் கண்ணுற்ற திருடர் தலைவன் எங்கள் முறையீட்டினைக் கேட்டு ஆச்சரியமெய்தி எங்கள் இருவரையும் விடுவித்தனன்.

ஒரு மரத்தினடியில் மல்லிகா வீற்று இருக்கின்றனள். அவளது பிரகாசமான கண்கள் சோகத்தால் மங்கலடைந்து நீரை முத்து முத்தாக வடித்துக்கொண்டிருந்தன. அவளது துயரத்திற்கெல்லாம் காரணபூதனாகிய நான் அவள் பக்கல் எய்தி அவள்காங்களைப் பற்றி என்னரும் ஜீவமணி, விதிவசத்தால் மதியிழந்து அன்பிற்குரிய 'அருங்கலமணியாகிய உத்தனுக்கு இழைத்ததீங்குகளை யெல்லாம் மன்னிப்பாய். மகவு தாங்கி நிற்கும் நீ மனத்துன்பத்திற்கு இடம் கொடுத்து தேகத்தை வருத்திக்கொள்ளுதல் உனக்கு அழகல்ல. நான் கற்புடை தாயின் வயிற்றின் பிறந்தவனாதலால் என் ஜீவிய காலம்வரை உன்னை கைவிடமாட்டேன்' என்று அவள் கண்ணீரைத் துடைத்தேன்.

'நாதா, நாம் இருவரும் இனிமேல் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு பிராப்தமில்லை. எனது மனமுடைந்து ஹிருதய பலஹீனத்தால் இரத்தம் பெருக்குற்று உயிர்போய்க்கொண்டு இருக்கிறது. என்னிடம் தாங்கள் மணமாகாதவர் என பொய்புகன்று என்னை மணம்செய்து கொண்டீர்கள். ஈசன் உங்களை மன்னிப்பானாக. தாங்கள் என்னை நேசிப்பது உண்மையானால் உங்கள் முதல் மனைவியின்மேல் பூரண அன்புசெலுத்தி வாழுங்கள். அதுவே எனது ஆன்மாவைச் சாந்தப்படுத்தும். நான் சென்று வருகிறேன்.' எனக்கூறி உயிர் நீத்தாள்.

* * *

அவ்வித ஜீவமணியை பறிகொடுத்த நான் உன்னிடம் எவ்விதம் சந்தோஷமாய் நடந்துகொள்ள முடியும்?

இப்படிக்கு,

உனது அருமைக் காதலன்,

ராமமூர்த்தி.

நீதிபதி:—(வாதியை நோக்கி) குற்றவாளி உன்னை எந்த இடத்தில் வைத்து அடித்தான்.

வாதி:—சாமி, நாம் பாட்டுக்கு போனேன். (அங்கிருந்த வக்கீலைச் சுட்டிக்காட்டி) இந்த வக்கில் ஐயாதான் குட்டிச்சுவருன்னு வச்சுக்குங்கோ, நீங்கதான் அங்கே ரோட்டுமேலே நின்டுக்கிட்டிருந்த கழுதைன்னு வச்சுக்குங்கோ, (வக்கீல், நீதிபதி இரண்டு பேருக்கும் மத்தியில் நடந்துகாட்டி) இப்படி நான் ரெண்டுக்கும் மத்தியிலே போனேன். அப்பதானுங்க இவன் வந்து என்னைக் கழுத்திலே அடித்தான்.

—எஸ். சௌந்தரராஜன்.

இராஜேந்திரன் அல்லது
அதிசய முகமூடி

[K. R. வேணுகோபாலன்]

மாந்தர் மனதை ஈர்க்கும் சிங்காரப்பூவனம். அவ்வனத்திடையே ஓர் தனிபங்களா. அதைச் சுற்றிலும் எல்லாவித க்ரோடன்ஸ்கள்; மல்லிகை, முல்லை, இருவாட்சி, ரோஜா, பாரிஜாதம் இன்னும் பலவிதமான பூஞ்செடிகள். இவ்விதம் அலங்கரிக்கப் பட்டிருந்த அவ்வனம் பார்ப்போர் மனதைக் கவர்ந்தது. அப்பங்களாவின் வெளிப்புறம் ஓர் சோபாவில் சுமார் 50 வயதென மதிக்கக்கூடிய ஒருவர் அன்று வந்த 'தமிழரசு' மலரில் விகடத்துணுக்கைப் பிரித்து படித்தவண்ணமிருந்தார். அவர் அம்மணி புரத்திலுள்ள (அவ்வூரின் பெயர்) மற்றைய குடும்பத்தினர்களைவிட கொஞ்சம் பணக்காரராகவே விளங்கினர். ஆனால் ஏழைகளும், பிச்சைக்காரர்களும் அவர் கையினால் காலணா வாங்கியிருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம்.

அம்மணிபுரத்தில் இவர் மணியம் வேலை பார்த்துவருகிறார். இவர் 4, 5 குமாஸ்தாக்களை வைத்துக்கொண்டு அவ்வேலையை நடத்தி வருகிறார். இவர்களில் சுமார் 24 வயதென மதிக்கக்கூடிய ஓர் வாலிபனும் கலந்துள்ளான். அவ்வாலிபனின் இல்லம் இப்பங்களாவிற்கு வடக்கேயுள்ளது. அவன் பெயர் 'இராஜேந்திரன்'. அவன் எல்லா குமஸ்தாக்களையும்விட யோக்கியன். நம் பிரபு சீனிவாசப் பிள்ளைக்கு அநேக நாட்களாய் குழந்தையில்லாமல் ஓர் பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குச் சுகுணம்பாள் என்னும் பெயர்வைத்து வளர்த்து வந்தார்.

தற்போது கதாநாயகி 15 வயதென மதிக்கக்கூடிய மங்கையாகத் தோன்றுகிறாள். 'சுகுணம்பாள்' குமஸ்தா இராஜேந்திரனை மிகவும் அன்புடன் நேசிக்கிறாள். இராஜேந்திரன் சுகுணம்பாளைக் காதலித்து வருகிறான். இவ்விருவருக்கும் காதல் முதிர்ந்து வருகின்றது.' சீனுவாசப் பிள்ளைக்கு ஆண்சந்ததி யில்லாததால் தன் அண்ணன் மகன் நாகநாதன் என்பவனை வளர்த்து வந்தார்.

அவனுக்கு வயது 20. அவன் நாள்தோறும் மாலை 3 மணியானதும் சிற்றுண்டிசாலைக்கு செல்வதும் கண்ட மங்கையர்கள்மேல் அசட்டைக் காதல் கொள்ளுவதுமே தொழிலாய் செய்தவர்தான். அவன் இவ்வாறிருத்தல் நம் இராஜேந்திரனுக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஓர்நாள் சீனிவாசப் பிரபு தன் அறையில் உட்கார்ந்துகொண்டு குடும்ப விஷயமாக ஏதோ யோசித்துக்கொண்டிருந்தார். அப்போது அறையின் கதவு மெதுவாய் திறக்கப்பட்டது. 20 வயதுடைய இருவர் உள் நுழைந்தார். உடனே நம்பிள்ளையின் கையில் ஒரு கவர் வந்து விழுந்தது. அவ்வளவுதான் கண்களில் பொரிபறக்க பிள்ளை வந்தவர்களை நோக்கி 'ஏனெப்பா உங்களுக்கு வேறு ஏதும் வேலை கிடையாதா? எங்கேயோ கோவில் இடிந்துவிட்டால் உங்கள் தலையில் என்ன கரைந்து கொட்டியிருக்கிறது? 100 ரூபாய் வேண்டும் 200 ரூபாய் வேண்டும் என்று அச்சிட்டுகொண்டு வந்து விடுகிறீர்களே' என்று கடிந்து கொண்டார். வந்தவர்கள் ஒன்றும் பதில் பேசாது எழுந்து சென்றுவிட்டனர். உடனே வேலைக்காரன் சிற்றுண்டி அருந்த சீனிவாச பிள்ளையை அழைத்து சென்றான். அவரிடம் அமர்ந்திருக்கும் குமஸ்தாக்களில் இராஜேந்திரன் ஒருவனே உள்ளூரில் வசிப்பவன். மற்றைய நான்குபேரும் அயலூரிலிருந்து வருபவர்களாதலால் மாலை 5 மணியானதும் போய் விடுவார்கள். பிள்ளைவாள் இராஜேந்திரனைமட்டும் 6மணி வரையில் வேலை பார்க்கும்படிச்சொல்லி தன் இல்லத்திலே இராப்போஜனம் முடித்து படுத்துக்கொள்ளச் சொல்லுவது வழக்கம். ஆதலால் அவனுக்குத் தனியாய் ஓர் ரூம்விட்டிருக்கிறார். அவ்விருவரும் வந்துபோன மறுநாள் விடியற்காலையில் 5 மணிக்கெல்லாம் சீனிவாச பிள்ளையின் மனைவி சாரதாம்பாள் ஏதோ விஷயமாய் சுகுணம்பாளின் அறையின் பக்கமாகச் சென்றாள். அறையின் கதவு திறக்கப்பட்டிருந்தது. உள்ளே சுகுணம்பாளைக் காணோம். தோட்டத்தின்புறம் சென்று பார்த்தாள், காணோம். வீடெல்லாம் தேடினாள், காணப்படவில்லை. உடனே பிள்ளைக்குத் தெரிவித்தாள். அவரும் தேடிவிட்டு அயர்ந்து தெருத்திண்ணையில் உட்கார்ந்தார். தபால்காரன் ஓர் கவரை அவர் வசம் அளித்துச் சென்றான். அதைப் பிரித்துப்பார்க்க அதில் பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

ஐயா பிள்ளைவாளே, நீர் இன்னும் கோவில் கட்டுவதற்கு பணம் அனுப்பியதாகத் தெரியவில்லை. நீர் அனுப்பவேண்டியதை மறக்காமல் இருப்பதற்குத்தான் உங்கள் மகளைக்கொண்டுபோய் வைத்திருக்கிறோம். வியாழக்கிழமைக்குள் பணம் அனுப்பாவிடில் வெள்ளிக்கிழமையன்று இரவு 12 மணிக்கு உங்கள் வீட்டில் கொள்ளையிடுவோம். இது நிச்சயம். பணம் அனுப்பியதும் மகள் வந்து சேருவாள்.

இப்படிக்கு,

......................சங்கத்தார்.

அன்றிருந்து பிள்ளைவாளுக்கு திகில் உண்டாயிற்று. உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு தந்தியடித்தார். அங்கிருந்து (இன்ஸ்பெக்டர்) தங்கவேலு பிள்ளை வந்தார். உடனே கைலாகு கொடுத்து மேஜைக்கருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

சீ:—சார், இந்த கவரைப் பாருங்கள். இம்மாதிரியே ஐந்தாறு கவர்களை யனுப்பி பயத்தை உண்டுபண்ணுகிறார்கள். அவர்கள் இன்னாரெனத் தெரியவில்லை.

இன்:—(அக்கவரைப் பார்த்துவிட்டு) என்ன பிள்ளைவாள், இதற்காக இப்படி பயப்படுகிறீர்கள்.' என்று ஏதோ சில வார்த்தைகளைப் பிள்ளைவாளுக்கு இரகசியமாய் சொல்லிச் சென்றார். உடனே செக்கெண்டுகள் நிமிஷங்களாகி, நிமிஷங்கள் மணிகளாகி, மணிகள் நாட்களாகி வெள்ளிக்கிழமையும் வந்துவிட்டது. அன்றுமாலை 6 மணிக்கெல்லாம் சுமார் 60 கான்ஸ்டேபிள்கள் வந்து சேர்ந்தனர். அவர்களுக்கு நடுவில் விநாயகர் வேஷம்போல் தொப்பையுடன் ஒருவர் வந்தார். (அவர் யாரென நீங்கள் கேட்பது எனக்கு தெரிகிறது.) அவர்தான் இன்ஸ்பெக்டர் தங்கவேலு பிள்ளை. பங்களாவை சுற்றிலும் கனிமாங்கள், பூஞ்செடிகள் நிற்பதைப்போல் கான்ஸ்டேபிள்களும் நின்றுகொண்டனர். அப்பங்களாவில் என்ன நடக்கப் போவதென்பதை பார்க்கவோ அல்லது அவ்வளவு தைரியத்துடன்வரும். ஜெகஜாலக் கள்ளன் யாரென்று அறியவோ என்னமோ சந்திரனும் தன் ஒளியுடன் கிழக்கு திசையில் பிரகாசிக்கலானான். எல்லோரும் மிகவும் கடி காவல்புரிகின்றனர். மணி $11\frac{1}{2}$ அடித்ததும் பிள்ளைவாளுக்கு மனம் திடுக்கிடச்செய்தது. இருந்தாலும் சிறிது நேரஞ்சென்று சற்று கண்ணயர்ந்தார். அவர் அறையின் கதவு சத்தமில்லாமல் திறக்கப்பட்டது. பயங்கா முகமூடியணிந்த ஒருவன் மெதுவாய் 'ஐயா பிள்ளைவாள், எடும் 200 ரூபாய்' என்றான். பிள்ளைவாள் கூச்சலிடலாமாவென்று வாயெடுத்தார். ஆனால் அவ்வாய் அம் முகமூடி காட்டிய ஒரு சாண் நீள கருமையான ஓர் கருவியைக் கண்டதும் தானாகவே மூடிக்கொண்டது. அது என்ன? துப்பாக்கி. பிள்ளைவாள் சமாதானமாய் தன்னிடத்தில் பணம் தற்சமயம் இல்லை என்று சொன்னார். உடனே அம்முகமூடி 'நேற்று பக்தவத்சல செட்டியாரிடத்தில் நீர் கொடுத்த கடன் 1000த்தை வாங்கி வரவில்லையா! எடும் சீக்கிரம்' என்று சொன்னான். உடனே பிள்ளைவாளுக்கு எழுந்திருக்க முடியாத போதிலும் அவருடைய கால்கள் தானாகவே எழுந்தருளி இரும்பு பெட்டியினருகில் சென்றது. உடனே கைகள் ரூ. 200 ஐ எடுத்தததும் அவர் கீழே வீழ்ந்துவிட்டார் மணி 12 ம் ஆகி, 1 ம் ஆகிவிட்டது. பிறகு இன்ஸ்பெக்டர் தங்கவேலு பிள்ளை தன்னை மிகவும் மெச்சிக்கொண்டு கம்பீரத்துடன் உள்

நுழைந்தார். ஆனால் அவர் கம்பீரம் சீனுவாசப் பிள்ளையின் அறை வரையில்தான் நீடித்திருந்தது. உள் நுழைந்ததும் திகிலடைந்து விழுந்து கிடந்த பிரபுவின் மூர்ச்சையைத் தெளிவித்து அவரிடமிருந்து நடந்தவற்றை அறிந்துகொண்டு பக்கத்தறையிலிருந்த இராஜேந்திரனை கண்டார். எல்லோருக்கும் ஓர் திகைப்பு உண்டாயிற்று. எல்லோரும் போய்விட்டனர். மறுநாள் நடக்கப்போவதைப் பார்க்க ஆதித்தன் தன் அழகிய கிரணங்களை விரித்து வெளிக்கிளம்பினான். சீனுவாசப் பிள்ளை முந்தியநாள்பட்ட கஷ்டங்களெல்லாம் மறுநாள் காலை 5 மணிக்கு தபால்காரன் கொடுத்த இருகவர்களால் சந்தோஷமாக மாறின. அதில் ஒன்றில் 200 ரூபாய் இன்சியூர். மற்றொன்றில் பின் வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது:—

கனம் பொருந்திய பிள்ளையவர்களுக்கு, நீங்கள் ஓர் பிச்சைக்காரனுக்கும் காலணா கொடுத்தறியாதவர்கள். ஆகையால் அதை கற்பிக்கும் பொருட்டு நான் இவ்வாறு செய்தேன். நான் அனுப்பியிருக்கும் ரூபாய் உங்களுடையதே. உங்கள் மகளை என் வீட்டில் வைத்திருந்தேன். நீங்கள் ஒன்றும் சந்தேகப்பட வேண்டாம். நான் செய்தவற்றையெல்லாம் மன்னிக்கவும்

இப்படிக்கு,

தங்கள் அன்புள்ள குமஸ்தா,

இராஜேந்திரன்.

உடனே பிள்ளைவாள் தனக்குச் சிறியவன் இவ்வாறு அறிவூட்டினதைப்பற்றி எண்ணி வியப்படைந்தார். பிறகு தன் மகளை அவனுக்கே விவாகம்செய்து வைத்தார். வெகு தினங்களாக ஒருவொருக்கொருவர் நேசித்து வந்த நேசம் இப்போது உண்மையாயிற்று. இவ்வாறு சிலநாட்கள் சென்றன. நாகநாதனின் துர்குணங்கள் வரவர அதிகமாயிற்றே தவிர குறையவில்லை. ஓர்நாள் நாகநாதன் சிற்றுண்டிச்சாலைக்கு சென்றான். அங்கு அவன் உட்கார்ந்திருந்த மேஜைக்கருகில் ஓர் மாது உட்கார்ந்தாள். உடனே இருவருக்கும் பேச்சுகள் முதிர்ந்து நேசமாய் மாறின. ஆனால் அம்மாது கீச்சுக் குரலாய்த்தான் பேசுவாள் போலிருந்தது. பிறகு என்னமோ சொல்லுவார்களே பக்ஷணங்கள் (எனக்கு தெரியாது மன்னிக்கவும்) அதெல்லாம் வந்து, சேர்ந்தன. சிறிது நேரத்திற்குள் அவை இக்காதலர்களினிடையே மறைந்தன. இருவருடைய பட்டியலும் நாகநாதன் வசம் அளிக்கப்பட்டன. மணிப்பார்சில் இருந்து 2-12-0 ஹோட்டல் மானேஜர் கையில் போய் விழுந்தது. பிறகு காதலர்கள் ஓர் ரிக்ஷா வைத்துக்கொண்டு கடற்கரைக்குச் சென்று அங்கே சாமாரியாய் முத்தங்கள் மாற்றிக்கொண்டனர். உடனே அப்பெண் நாகநாதனிடத்தில் 'நாளைக்கு இந்நேரம் நான் பீச்சுக்கு வருவேன். நீர்

நீதி வாக்கியங்கள்

[R. G. சுப்பிரமணியன்.]

1. அவசர சமயத்தில் உபயோகப்படாத பந்துவும், கும்பிடும்பொழுது வரங்கொடுக்காத தெய்வமும், யுத்தகளத்தில்தான் ஏறியபொழுது ஓடாத குதிரையும் விட்டுவிட வேண்டியவைகள்.

2. கடன்வாங்கி கலியாண முதலிய காரியங்கள் செய்வதும், கிழப்பருவத்தில் குமரியை மணந்து கொள்ளுதலும், தப்பிதமறியாத ராஜபரிபாலனமும் அப்போது கஷ்டத்தைக் கொடுக்காது, பின்னால் தீமையையே விளைவிக்கும்.

வரவேண்டும்' என்று சொல்லிச் சென்றாள். நாகநாதனும் வீட்டுக்கு வந்தான். மறுநாள் நாகநாதனுக்குப் பின்வருமாறு ஓர் கடிதம் வந்தது.

என் நண்பா!

நீ இவ்வாறு பெண்கள் மூலம் செலவிடுவாயாகில் உன் குடும்பம் அழிந்துவிடும். ஆதலால் நிதானித்து செலவுசெய். நேற்று சிற்றுண்டிச் சாலையில் நான்தான் பெண் வேடத்தில் உன்னைச் சந்தித்தேன். நீ அங்கு செலவுசெய்த பணத்தையும் நேற்று இரவு உங்கள் வீட்டிற்கு அனுப்பியிருக்கிறேன். உன் தந்தை (அறஞ்செய விரும்பு) என்னும் முதல் வாக்கியத்தையே மறந்ததால் அவருக்கு அவ்வாறு செய்ய வேண்டியதாயிற்று. 'வளவனாயினும் அளவறிந்தழிந்துண்' என்னும் முதுமொழியை மறந்ததால் உனக்கு இவ்வாறு செய்தேன். இப்போது நான் உனக்கு சொந்தக்காரனாகிவிட்டதால் தெரிவிக்கிறேன்.

இப்படிக்கு,

உன் மணிப்பர்சைக் கவர்ந்த

இராஜேந்திரன்

இதைப் படித்ததும் நாகநாதனுக்கு வெட்கம் உண்டாய்விட்டது. பிறகு நன்னடத்தையைக் கைக்கொண்டான்.

3. இனிமையாகப் படிக்காதவாயும், அம்மாவென்று அழைத்து அன்னம் கேளாதவாயும், தம்பியென்று கூவாதவாயும் குடவன் தோண்டிய மண் குழிக்கு ஒப்பாகும்.

4. உபகாரம் செய்தவனுக்கு உபகாரம் செய்வது பெரிதல்ல. கேடு செய்தவனிடம் விரோதம் கொள்ளாமல் உபகாரம் செய்வதே மேன்மையாகும்.

5. ஒரு வாலிபப் புருஷன் தன் ஆசைமுழுவதுந்தீர அனுபவித்துவிட்ட ஓர் ஸ்திரீயை வேறு ஒருவன் இச்சிக்கக்கூடும். அது கரும்பின் இரசமில்லாத சக்கைகயை எறிந்தால் எறும்புகள் அச்சாரமற்ற சக்கையை மொய்த்துக் கொண்டிருப்பது போலாகும்.

6. பதிவிரதா தர்மத்தோடுகூடிய மனைவியுடன் நீ எப்போதும் சண்டை போடாதே. ஏனென்றால் அந்த ஸ்திரீயின் கண்ணீர் பூமியில் விழுந்தால் சம்பத்துக்கள் அனைத்தும் வீட்டைவிட்டுப் போகும்.

7. பின்னால் லாபம் கிடைக்குமென்ற ஆசையினால் சேவிக்கிறதும், கோவில் பணியம் செய்கிறதும், துன்மார்க்கர்களுடன் இடைவிடாமல் சகவாசம் செய்கிறதும், வனத்தில் தனியாகப் போகிறதும் கூடாது.

8. தலையளவுதனம் குவித்தாலும் தாசிகள் நிஜம் பேசமாட்டார்கள். தலைதட்டிப் பிரமாணம் செய்தால்கூட அவளை நம்பக் கூடாது.

9. சபைகளிலும், பெற்றதாய் தகப்பனாரிடத்திலும், குருவினிடத்திலும், பெரியோர்களிடத்திலும், இதரப் பெண்களிடத்திலும், பரிகசிக்காதே.

10. தடாகத்தில் ஜலம் நிறைந்தபோது அநேகத் தவளைகள்வந்து சேர்வதுபோல சம்பத்துண்டாகும்போது அநேகர் வீடு வந்து நிறைந்திருப்பார்கள்.

கணக்கு ஆசிரியர்:—'ஏண்டா! உன் விடைக்கும் கணக்கு புத்தகத்தில் இருக்கிற விடைக்கும் நீ ஒரு ரூபாய் அதிகமாய் இருக்கிறதே!'

பையன்:—'அது சரிதான் ஸார்! ஒரு ரூபாய் அதிகமாகப் போட்டு இருக்கிறேன் அல்லவா! அதை இப்பொழுது நீங்கள் என்னிடம் கொடுத்துவிட்டால் கணக்கு சரியாய்ப் போய்விடும் ஸார்!'

—கே. ஆர். ராஜகோபால்.

விஜயராம் அல்லது போலிச் சாமியார்

[M. S. ஜெய்லானி]

14-ம் அத்தியாயம்.

உழைப்பிற்கேற்ற ஊதியம்

மறுநாள் காலை 10 மணிக்கு நியாயஸ்தலம் முழுவதும் ஒரே கூட்டமாக இருந்தது. நியாயாதிபதியும் சரியாக 11 மணிக்கு நியாயஸ்தலத்திற்குள் வந்து தன் ஆசனத்தில் அமர்ந்தார். விஜயாளின் கேசைப்பற்றிய முடிவான தீர்மானத்தைக் கீழ்கண்டவாறு வாசித்தார்.

'முன்பு இக்கேசில் ஜெயராமன்தான் குற்றவாளி என நான் அளித்த தீர்ப்பை, இந்த முடிவான தீர்ப்பின்மூலம் ரத்துச்செய்கின்றேன். துப்புத்துலக்கிய சாமியாரின் வீரச்செயலால், உண்மைக் குற்றவாளியாகிய சுப்பிரமணியனைக் கையும் களவுமாய்ப் பிடிக்க நேர்ந்தது. தப்பனின் சாக்ஷியத்திலிருந்தும், இறந்து போனாள் என்று கருதப்பட்ட விஜயாளின் சாக்ஷியத்திலிருந்தும், சுப்ரமணியனுக்கு உதவிசெய்த கருப்பன் சுப்பன் என்ற மூடர்களின் சாக்ஷியத்திலிருந்தும் சுப்ரமணியனே குற்றவாளி என்பது தெளிவாக விளங்குகிறது.

குற்றவாளியாகிய சுப்ரமணியன் ஜெயராமன் எழுதியதுபோல் ஓர் கடிதம் எழுதி, அதில் ஜெயராமன் கையொப்பம் போன்ற திருட்டுக் கையொப்பம் செய்தகுற்றமும் அவனைச் சார்கின்றது. 2-வது அன்னியரின் பெண்ணை சூதாக வரவழைத்து அவளைச் சிறைசெய்திருக்கின்றான். ஆகையால் ஒரு பெண்ணை பலாத்காரமாகத் தூக்கிக்கொண்டுபோய் சிறைசெய்த குற்றமும் அவனைச் சார்கின்றது. 3-வது சிறைசெய்யப்பட்ட அந்த அறையில் விஜயாளை, தன் வேண்டுகோளுக்கு இணங்கும்படி கூற, அவள் அதை மறுக்கவும் கூர்மையான ஆயுதத்தைக் காட்டி கொலைசெய்து விடுவதாக பயமுறுத்தியிருக்கின்றான் என்பது சாமியார் சாக்ஷியத்தினின்றும், சப்இன்ஸ்பெக்டர் சாக்ஷியத்திலிருந்தும் தெள்ளென விளங்குகிறது. ஆகலான் 1 அடி நீளமுள்ள கூர்மையான ஆயுதத்தைக் காட்டி கொலைசெய்து விடுவதாக்கூறி, ஒரு பெண்ணைப் பயமுறுத்திய குற்றமும் அவனைச் சார்கின்றது. சத்திரத்தில் இறந்து கிடந்த

அப்பிரேதத்தின்மேல் அக்னி திராவகத்தை ஊற்றிய குற்றமும் அவனைச் சார்கின்றது.

ஆகலான் மேலேகூறிய குற்றங்களைச் செய்தவன் சுப்ரமணியன் தான் என்று சாக்ஷியங்களிலிருந்து தெளிவாகத் தெரிவதால் சுப்ரமணியன்தான் குற்றவாளி என்று நான் தீர்மானிக்கின்றேன். மேலே புகன்ற எல்லாக் குற்றங்களுக்கும் காரணகர்த்தனாயிருந்தவன் சுப்ரமணியனாதலால் அவனுக்கு 10 வருடங்கள் கடின காவல் தண்டனை விதிக்கின்றேன்.

விஜயாளை சிறை செய்வதற்கு உதவிசெய்த கருப்பன், சுப்பன், என்ற மூடர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு வருட கடினகாவல் தண்டனை அளிக்கின்றேன்.

சிறைசெய்த பெண்ணைத் திருட்டுத்தனமாய் வண்டியில் ஏற்றிக் கொண்டு போனதற்கும், சத்திரத்தில் கிடந்த பிணத்தை வண்டியில் ஏற்றிக்கொண்டுவந்து இப்ராஹீம் பார்க்கில் சேர்த்ததற்கும் குதிரை வண்டி குலாம்காதருக்கு ரூபாய் 50. அபராதம் அல்லது 3 மாதம் சிறைவாசம் செய்யவேண்டும் எனத் தீர்ப்பளிக்கின்றேன்.

சமய சந்தர்ப்ப சாக்ஷிகளின் வாக்குமூலத்தினால் ஜெயராமன் குற்றவாளி என்று தீர்ப்பளித்ததற்காக நான் வருந்துவதுடன், அவரிடமிருந்து மன்னிப்பு கேட்டுக்கொள்கின்றேன். அவர் நிரபராதியாகவும், இந்த கேசிற்கும் அவருக்கும் ஒருவிதத்திலும் சம்பந்தமில்லாமலும் இருப்பதாலும் அவரை நான் விடுதலை செய்கின்றேன்' என வாசித்து முடித்தார்.

நியாயாதிபதியின் தீர்ப்பின்படி ஜெயராமன் விடுதலையடைந்தான். குற்றவாளியின் கூண்டிலிருந்து வெளிப்பட்ட ஜெயராமன், கொலைக் குற்றத்தினின்றும் தன்னைக் காப்பாற்ற பலவகையான இன்னல்களை அனுபவித்து, உண்மையான குற்றவாளியைக்கண்டு பிடித்த உத்தமருக்குத் தன் மனமார்ந்த நன்றியைச் செலுத்தும் பொருட்டு ஓடோடியும்சென்று சாமியாரை ஆலிங்கனம் செய்த வண்ணம் முகத்துடன் முகம்வைத்து தன் நன்றியைத் தெரியப் படுத்தினான். அப்பொழுது சாமியார் முகத்திலிருந்து ஏதோ கீழே விழுவதை அறிந்த ஜெயராமன் அவரைவிட்டு விலகி அவர் முகத்தை உற்றுநோக்கினான்.

பிறகு, காமவெறிகொண்ட காதகனிடமிருந்து தன்னைக் காப்பாற்றிய கன்னியவானுக்குத் தன் நன்றியைச் செலுத்தும்பொருட்டு காதலியும் காம்கூப்பியவண்ணம் சாமியாரின் பாதங்களில் சாஷ்டாங்கமாய் விழ்ந்து நமஸ்கரித்தாள். அப்பொழுது அவள்மேல் ஏதோ விழுவதாக உணர்ந்த விஜயாள் தலையை உயர்த்தி விழுந்தது என்ன என்று அறிய தரையை நோக்கினாள். பொய் மீசையும், பொய்த்

தாடியும் அவள் அருகில் கிடப்பதைக் கண்டு தலையை நிமிர்த்தி சாமியாரின் முகத்தை நோக்கினாள். காதலனும் காதலியும் மின்சார சக்தியால் தூண்டப்பட்டவர்கள்போன்று துள்ளிக் குதித்து, 'ஆ! கபீர்! நீயோ இத்தகைய வேடம்பூண்டு எங்களைக் காப்பாற்றினாய். நீ செய்த இந்த உதவிக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்! 'உயிர்காப்பான் தோழன்' என்ற நீதியை நிலை நாட்டவே உலகத்தில் நீ ஜனித்தாய் போன்றும்! உன்னை நண்பனாக அடைய நான் முன்ஜென்மத்தில் எத்தகைய தவம் செய்தேனோ! அத்தவத்தின் பலனாகத்தான் உன்னை நான் நண்பனாக அடைந்தேன் போலும்!' எனக் கூறியவண்ணம் ஜெயராமன் மறுபடியும் கபீரை ஆலிங்கனம் செய்துகொண்டு சந்தோஷ சாகரத்தில் மூழ்கினான். விஜயாள் புன்முறுவலுடன் காதலனின் அருகில் நின்றனள்.

நியாயாதிபதி சாமியார் வேடத்துடன் துப்புத்துலக்கிய கபீரை நோக்கி, 'உன் நண்பனின் பொருட்டு உன் உயிரையும் தியாகம் செய்ய முற்பட்ட உன் சிநேக வாஞ்சையைப் பாராட்டுகின்றேன். உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடிக்க நீ செய்த முயற்சிகள் யாவும் போற்றத்தக்கதே! நீ உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிக்க முயற்சிசெய்யாமல் இருந்தால் நிரபராதியாகிய ஜெயராமன் தண்டனை அடைய நேரிடும். அந்தப் பாவம் என்னைத்தான் தொடரும். என்னை அப்பாவச்செய்கையினின்றும் விலக்கி உன் நண்பனை ஆபத்திலிருந்து காப்பாற்றிய உன் சிறந்த சாமர்த்தியத்திற்காக இந்தத் தங்கப் பதகத்தை நீ ஒரு துப்பறியும் சிங்கம் என்பதை விளக்கும் பொருட்டு உனக்கு வெகுமதியாக அளிக்கின்றேன்' எனப் பகன்று கபீரின் அருகில்வந்து அவர் கரத்தாலேயே ஓர் தங்கப் பதக்கத்தைப் பரிசாக அளித்தார்.

தண்டனை அடைந்தவர்கள் தவிர மற்ற எல்லோரும் தங்கள் தங்கள் இல்லங்களுக்கேகினர். நாகரத்தினமும், சுப்பிரமணியனின் வஞ்சகச் செயல்களை அறிந்து வெட்கம் அடைந்தான். தன் தமக்கை ஜெயராமன் மேல்கொண்ட உயரிய காதலைக்கண்டு மகிழ்ந்து, ஜெயராமனையும், கபீரையும், தான் செய்தகுற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினான். இருவரும் அவனுடைய குற்றத்தை மனமார மன்னித்து, கைலாகு கொடுத்துக் கொண்டார்கள். ஜெயராமனும், கபீரும், இரண்டுநாள் விஜயாள் இல்லத்திலேயே இருந்தார்கள். பின்னர் ஜெயராமனின் தகப்பனார் கல்யாண ராமசாமி நாயுடு ஜெயராமனிடம் தாராபுரம் போகவேண்டுமென்று கூறினமையால், ஜெயராமனும் கபீரும், விஜயாள், விஸ்வநாத ஐயர், நாகரத்தினம் முதலியவர்களிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு தாராபுரத்தை அடைந்தார்கள்.

ஜெயராமனின் தாயாரும், தமக்கையும், ஜெயராமன் விடுதலை அடைந்ததைக்கேட்டு மகிழ்ந்தனர். ஜெயராமன் விடுதலை அடைந்ததற்குக் காரணமாய் விளங்கிய கபீரை மனமார துதித்து வாயார வாழ்த்தினார்கள். கபீரும் ஜெயராமன் விட்டில் 15 நாட்கள் இருக்க நேரிட்டது.

ஜெயராமன், கபீரின் குணங்களைப்பற்றி அடிக்கடி கூறி அவனைப் புகழ்வதையும், அவன் தன்னிடத்தில் மிகவும் வாஞ்சையாக நடந்து கொள்ளுவதைப்பற்றி கூறுவதையும் அடிக்கடி சரோஜினிகேட்டிருந்ததாலும், ஜெயராமன் அறையில் கபீரின் புகைப்படங்கள் பல இருப்பதால் அவைகளைப் பார்த்த அவனது அழகிலும் கம்பீரத்தோற்றத்திலும் ஈடுபட்டிருந்ததாலும், கபீரை நேரில் கண்டதும் சரோஜினி தன்னை அறியாது அவன்மேல்கொண்ட அன்பினால் அவனை மிகவும் அன்புடன் உபசரிக்கத் தொடங்கினாள். 15 நாட்களில் கபீரை அடிக்கடி சந்திக்க நேரிட்டமையாலும், அவனது வீரச்செயல்களைக் கேட்டிருப்பதாலும், சரோஜினி கபீரின் மேல்கொண்ட அன்பு முடிவில் காதலாக மாறியது வியப்பன்று.

கபீரும், சரோஜினியை முதல்முதல் சந்தித்ததும், அவளது வசீகரமான தோற்றத்தைக் கண்டு, அமிர்தம்போன்று சுவைமிகுந்த அவளது குரலைக்கேட்டு, அடக்கம், ஒடுக்கம், மரியாதை இத்தகைய குணங்களைப் பார்த்து மனம்விண்டு, தன் அறிவை அவள் பால்விட்டு, பித்தனாகி, தனக்குள்ளாகவே, 'பிரமாவின் கைத்திறம்தான் என்னே! ஓவியத்தில் தீட்டிய சித்திரம் போலன்றோ இவள் விளங்குகின்றாள்! ஆன்றோர்களும், சான்றோர்களும், புகழ்ந்துகூறும் சிறப்புற்ற நற்குணங்களை இவளிடமிருந்துதான் பிறமாந்தர்கள் கற்றுக்கொள்ளவேண்டும் போலும்' எனப் பிதற்றியவண்ணம், தன்னை அறியாது அவள்மீது செல்லும் வாஞ்சையைத் தடுக்க சக்தியற்றவனாய் இருந்தான். 2, 3, நாட்களில் அவள் தன்னைக் காதலிக்கின்றாள் என நடிப்பில் அறிந்த கபீர் அகமகிழ்ந்து, அவனும் அவளைக் காதலித்தான். இவ்விருவருடைய இளங்காதல் வளர்பிறை சந்திரன்போன்று வளர்ந்துகொண்டே வந்தது. கபீர், தன் சொந்த ஊராகிய தஞ்சாவூர் செல்லப் புறப்படுகையில் எல்லோரிடமும் உத்தரவு பெற்றுக்கொண்டு, தன் காதலி சரோஜினியிடம் உத்தரவு பெறும்பொழுது இருகாதலர்கள் விழிகளிலும் நீர்த்துளிகள் விழுவதைப் பார்த்த கல்யாணராமசாமி நாயுடும், ஜெயராமனும், உண்மையைத் தெள்ளென அறிந்து கொண்டார்கள். ஜெயராமன் தன் நண்பன் கபீருடன், கரூர்வரையில்சென்று வழியனுப்பிவிட்டு, தாராபுரத்தில் நிம்மதியாகக் காலம்கழித்து வந்தான்.

ஜெயராமனும், விஜயாளும், ஒருவரையொருவர் உள்ளன்புடன் நேசிப்பதைக்கண்ட இருவருடைய பெற்றோர்களும், சென்னைக்

குப் படிக்க ஜூலை மாதத்தில் சென்றிருந்த ஜெயராமன், செப்டம்பர் மாதத்திய விடுமுறை காலத்தில் வர்வந்ததும், இருகாதலர்களுக்கும், நல்ல சுபதினத்தில், விவாகம் முடிப்பதாக நிச்சயித்திருந்தார்கள். அச்சுபதினத்தில் ஜெயராமனுக்கும் விஜயாளுக்கும், வெகு விமரிசையாக 7 நாட்கள் கல்யாணம் நடந்தது.

இருவருக்கும் விவாகம் நடந்த மூன்றும் மாதத்தில், ஜெயராமனின் உயிர்த்தோழன் கபீருக்கும், ஜெயராமனின் தங்கை சரோஜினிக்கும், நல்ல சுபதினத்தில் விவாகம் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

இரண்டு விவாகங்களும் நடந்து 5 ஆண்டுகளுக்குப் பின்னர் தாரை நகரில், மெயின் பஜார் வீதியில், முனிசிபல் ஆபீஸ் கட்டிடத்திற்கு அருகில் பாதையின் இரண்டு புறங்களிலும், எதிரெதிராக 2 மாடி வீடுகள் அமைந்திருந்தன. அதில் ஒரு மாடி வீட்டின் முன் வாயலில் இரண்டு விளம்பரப் பலகைகள் தொங்கின. அவற்றில் ஒன்றில்,

D. K. ஜெயராமன் M. B. B. S.

முதல் வகுப்பு சர்ஜன், தாராபுரம்.

என்றும், மற்றோர் பலகையில்,

V. விஜயலக்ஷ்மி L. M. P.

லேடி டாக்டர், தாராபுரம்.

என்றும் பித்தளைத் தகட்டில் கத்தரித்த எழுத்துக்கள் பிரகாசித்தன. மாலை 5 மணிக்கு மேல்மாடியில் ஊஞ்சலில் ஜெயராமனும் விஜயலக்ஷ்மியும் வீற்று உல்லாசமாக ஊஞ்சலாடிக்கொண்டிருப்பதை நாம் இன்றும் பார்க்கலாம்.

மற்றொரு மாடிவீட்டின் முன்,

M. A. கபீர் M. A. B L.

அட்வகேட், தாராபுரம்.

என்ற பித்தளை எழுத்துக்கள் பிரகாசித்தன. மாலை வேளைகளில் மேல் மாடியில் கபீரும், சரோஜினியும் இரண்டு சாய்மான நாற்காலிகளில் சாய்ந்து கொலம்பியா கிராமபோன் பெட்டியில், தேவுடு ஐயர், சுந்தராம்பாள், சிவபாக்கியம், முதலியவர்களின் பாட்டுகளை வைத்து செவிக்கு இன்பம் கொடுத்துக்கொண்டு உல்லாசமாய் வீற்றிருப்பதை இன்றும் நாம் அவ்வழியாகப் போக நேரிடின் கண்களால் கண்டு களிப்படையலாம்.

முற்றிற்று.

நிரபராதி

[மேட்டுப்பாளையம் P. கணேசன்]

ஜோதிபுரியில் குப்புசாமி ஒரு சந்தை வியாபாரி. வாரத்தில் ஏழு நாட்களும் ஜோதிபுரியை அடுத்த ஊர்களில் சந்தைகளிருப்பினும் குப்புசாமி சில குறிப்பிட்ட சந்தைகளுக்குமட்டுமே போய்வருவான். அதில் கிடைக்கும் வருவாயைக்கொண்டு அவனும், அவன் மனைவியும் இரு குழந்தைகளும் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினார்கள். கஷ்டமென்பது இன்னதென்றே அக்காலத்தில் அவர்களுக்குத் தெரிந்திராது. குப்புசாமியின் இருமைந்தர்களும் அதற்கு உதவியாக இருந்தார்கள். அவர்களுக்கு முறையே ஏழுவயதும், ஐந்து வயதுமாகி யிருந்தது. குழந்தைகள் பேசும் அம்மழலைச் சொற்களிலே ஒரு இனிமை ததும்பும். குப்புசாமி அச்சொற்களிலே இன்புற்றுப் போவான்.

ஜோதிபுரியிலிருந்து சூளூர் சுமார் 80 மைல்தூரம். அவ்வூரிலே வருடந்தோறும் பெரிய திருவிழா ஒன்று நடக்கும். அநேக ஊர்களிலிருந்து திரள்திரளாக அளவற்ற ஜனங்கள் அவ்வுற்சவத்தைக் கொண்டாட வருவார்கள். அளவற்ற வர்த்தகர்களும் பல சாமான்களை விற்பதற்கு பல ஊர்களிலிருந்தும் அங்கு வருவார்கள். அப்படிவரும் வர்த்தகர்களிலே நம் குப்புசாமியும் ஒருவன். வருடந்தோறும் சரக்குகள் கொண்டுபோய் விற்பனை செய்துவிட்டு அதிக இலாபத்துடனே வீடு வந்து சேர்வான்.

வழக்கம்போலவே அவ்வருடமும் குப்புசாமி சரக்குகள் யாவும் வாங்கி தயார்செய்து கொண்டான். மறுநாட்காலை சூரியன் உதித்தவுடன் புறப்படுவதாக ஏற்பாடு.

மறுநாட்காலை எழுந்து தினகரன் கீழ்த்திசையில் கிளம்பிய சற்று நேரத்திற்கெல்லாம் குப்புசாமி புறப்படலானான். அவன் சூளூருக்குப் போனால் திரும்பி வரக் குறைந்தது பத்துநாட்களாவது ஆகும். ஆகவே தன் குழந்தைகளுடன் சற்று அளவளாவி மகிழ்ந்தான். அப்போது பெரிய குழந்தை மூத்து கேட்டான் 'அப்பா! எனக்கு தேருலேருந்து மிட்டாயி, சீக்கி ரொம்ப வாங்கிண்டு வரயா!' என்று.

'உனக்கு வேண்டியதெல்லாம் வாங்கிண்டு வரேண்டா கண்ணு!' என்று சொல்லியவாறே அவனைத் தூக்கி முத்தமிட்டான். முடிவில் தன் மனைவியிடமும் விடைபெற்றுக்கொண்டு குப்புசாமி தன் வண்டியைப் பூட்டி ஓட்டினான். மாட்டின் கழுத்திலிருந்த சதங்கைமாலையின் சப்தம் கணீர் கணீரென்று ஒலிக்க வண்டியும் ஓடிற்று.

குப்புசாமி தன் சாமான்களுடனும், வண்டியுடனும் தான் புறப்பட்ட மூன்ருவதுநாள் சூரியன் அஸ்தமிக்கும்போது அட்டப்பாடி என்ற ஊருக்கு வந்து சேர்ந்தான். அவ்வூர் வண்டிப்பேட்டையில் தன் வண்டியை அவிழ்த்து விட்டு வண்டியிலிருந்த வைக்கோலை மாட்டின் முன்னுல் எடுத்து உதறினுன்.

அட்டப்பாடியிலிருந்து சூளூருக்கு இன்னும் 25 மைல் தூரம் போக வேண்டும். அன்று இரவு பேட்டைக்குள்ளேயே யிருந்த சாப்பாட்டு விடுதி ஒன்றில் சாப்பிட்டுவிட்டுத் தங்கினுன். வண்டியும் மாடும் தனியாக இருந்த போதிலும் பேட்டைக்குள் இருக்கிறபடியால் பயமில்லை யென்று நினைத்து அந்த சாப்பாடு விடுதி முதலாளியிடம் 'நான் இங்கு படுத்துக்கொள்ளலாமா?' என்று கேட்டான்.

அவ்விடுதியின் முதலாளி 'ஆஹா! தாராளமாகப் படுத்துக்கொள்ளுங்கள். அதோ நான் படுத்துக்கொள்ளும் அறை. தங்களுக்கும் அந்த அறையிலேயே படுக்கை போடச் சொல்லுகிறேன்' என்ருர்.

சிறிது நேரத்திற்குள் அவர் ஒரு வேலையாளுக்கு உத்திரவிடவே அவ் வறையில் மற்ருெரு கட்டில் போட்டு குப்புசாமியின் வண்டியிலிருந்த படுக் கையைக் கொண்டுவந்து படுக்கை விரிக்கப்பட்டது. அந்த அறையிலே அன்றிரவு குப்புசாமியும் சாப்பாட்டு விடுதியின் முதலாளியாகிய பெரியசாமியும் படுத்துக்கொண்டு ஏதேதோ சம்பாஷித்தனர். முடிவில் குப்புசாமி 'நாளைக்கு நான் 25 மைல் போகவேண்டி யிருக்கிறது. சற்று அதிகாலை யிலேயே புறப்பட்டால்தான் மாட்டுக்கும் வெயிலின் கடுமையால் களைப்புத் தட்டாது, நானும் நாளைக்கே சூளூர்போய்ச் சேர்ந்துவிட முடியு'மென்று சொன்னுன்.

'சரி அப்படியே செய்யுங்கள்' என்று சொன்னுர் பெரியசாமி.

* * *

மறுநாட்காலை குப்புசாமி 5-மணிக்கெல்லாம் விழித்துக்கொண்டான். தன் படுக்கையை யெல்லாம் கட்டி வண்டியில் கொண்டுபோய் போட்டான். மாட்டை எழுப்பி வண்டியையும் பூட்டினுன். பெரியசாமியிடம் விடை பெற்றுக்கொண்டு போகலாமென்று நினைத்தான். ஆனுல் அவர்களெல்லோரும் அயர்ந்து நித்திரைசெய்து கொண்டிருந்தனர். அப்போது அவர்களை விழிக்கச் செய்து வீண் சிரமம் கொடுக்க அவன் மனது ஒப்பவில்லை. ஆகவே தன் வண்டியை ஓட்டினுன்.

பகல் சுமார் பன்னிரண்டுமணிக்கு வண்டி ஒரு காட்டுப்பாதையில் தள்ளாடித் தள்ளாடி வந்துகொண்டிருந்தது. நான்கு நாட்களாக தன் மாடு நடந்து நடந்து சோர்ந்து விட்டபடியால் குப்புசாமியும் அதை உபத்திரவிக்க வில்லை. கண்ணுக்கெட்டிய தூரத்திலெல்லாம் அங்குமிங்குமாக ஓரோர் மரங்கள் பச்சைப் பசேரென்று நின்றுகொண்டிருந்தன. பறவை இனங்கள் எல்லாம் வெயிலுக்கு வெளியே வர அஞ்சுவனபோல் மரத்தின்மீதுட் கார்ந்து கொண்டே அதனதன் கீதங்களை அழகாகப் பாடிக்கொண்டிருந்தன. அந்த பாரவண்டியின் சக்கரம் இருசுக்கிடையில் மோதுண்டு சுழலும்போது 'கடக்கடக்'கென்று சப்தமிட்டது. பளுவை யிழுக்க மாடு திணறிக்கொண்டு நடக்கும்போது அதன் தலையசைப்பானது 'வாவா' என்று கூப்பிடுவது

போலிருந்தது. அப்படி அம்மாடு தலையையாட்டிக்கொண்டே நடக்கும்போது பாலைவனம்போல் வேறொரு அரவமுமற்ற அக்காட்டுப் பாதையில் சதங்கையின் ஒலி பலமாக கேட்டது.

வண்டி போய்க்கொண்டிருக்கையில் அப்படியே மூட்டையின் பேரில் சாய்ந்துட்கார்ந்தவாறே சிறிது கண்ணயர்ந்தான். அவன் கண்ணயர்ந்து சில நிமிஷங்களே ஆகியிருக்கும். போய்க்கொண்டிருந்த வண்டி சட்டென்று நின்றது. வண்டி ஏன் நிற்கிறது என்று குப்புசாமி விழித்துப் பார்க்கும்போது வண்டியின் முன்னால் இரு போலீஸ் சேவகர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

வண்டியை ஏன் நிறுத்தினீர்கள் என்று கேட்க அவன் வாயைத் திறந்தான். அதற்குள் அவ்விருவரில் ஒரு ஜவானே 'நீ எந்த ஊர், எங்கு போகிறாய்' என்று கேட்டான். குப்புசாமிக்கு சற்று கோபம் வந்தது என்றாலும் அவன் 'நான் ஜோதிபுரி, வியாபார நிமித்தமாய் சூளூருக்குப் போகிறேன்' என்று கூறினான்.

'நேற்றையதினம் இரவு அட்டப்பாடி ஓட்டலில் தங்கியிருந்தாயல்லவா நீ' என்று கேட்டனர் ஜவான்கள்.

'ஆம்! அதற்கு என்ன?'

'உன் சாமான்களை பரிசோதிக்கும்படியும், ஏதேனும் அதில் எங்களுக்கு சந்தேகம் ஏற்பட்டால் உன்னைக் கைது செய்யும்படியும் எங்கள் அதிகாரியின் உத்திரவு'

'அதற்குக் காரணம்?'

'காரணமா? ஒருவனைக் கொலை செய்துவிட்டு ஓடிவந்ததுமல்லாமல் காரணம் எங்களையா கேட்கிறாய்? காரணத்தை இப்போது காண்பிக்கிறோம் பார்' என்று சொல்லிக்கொண்டே குப்புசாமியின் வண்டியிலிருந்த சாமான்களை மூலைக்கொன்றாக எடுத்து எறிந்து பரிசோதித்தனர் சேவகர்கள்.

குப்புசாமி ஒரு பெரிய மலையுச்சியிலிருந்து கீழே பாதாளம் போலுள்ள ஒருவரண்ட மடுவில் தூக்கிப்போட்ட உணர்ச்சியை யடைந்தான்.

அதற்குள் ஒரு ஜவான் குப்புசாமியின் படுக்கையை எடுத்து உதறினான். அதிலிருந்து இரத்தக்கறை தோய்ந்த கத்தியொன்று கீழே விழுந்தது. குப்புசாமி தன் சுயநினைவு வந்தபோது தன் கையில் விலங்குகளிருப்பதையும், தன்னை அட்டப்பாடி தாணுவுக்கு கொண்டு போகிறார்களென்றும் தெரிந்தான்.

* * *

பலநாட்கள் கேஸ் விசாரணை நடந்துகொண்டிருந்தது. இந்த விஷயம் குப்புசாமியின் மனைவிக்குத் தெரிந்ததும் அவள் அலறிப்புடைத்துக்கொண்டு அட்டப்பாடிக்கு ஓடிவந்தாள். தன் கணவனைச் சிறையில் கண்டதும் அழுதாள்; தலையிலடித்துக்கொண்டாள்; கதறினாள் என்ன பயன்?

மெதுவாகக் கேட்டாள் தன் கணவனை 'என்னிடம் சொல்லு; நீ ஏன் அவனைக் கொலை செய்தாய்?' என்று.

குப்புசாமிக்கு அவ்வார்த்தைகள் காதினுள் புகுந்ததும் ஒரு கொடிய நாகசர்ப்பம் தன் நெஞ்சைத் துளைத்து அதனுள் புகுந்த மாதிரி யிருந்தது.

விசாரணை நடக்கும்போதெல்லாம் அவன் வாய்விட்டுத் தனியாகச் சொல்லிக் கொள்ளுவான். 'கடவுளே! நான் நிரபராதி. ஒன்றுமே அறியாதவன். என்னை ஏன் இக்கதிக்கு ஆளாக்கினாய்? என்மீது கிருபை கூர்ந்து என்னை எப்படியும் தப்பித்துவிடு' என்றெல்லாம் சொல்லி கிழக்குத் திக்கை நோக்கி தன் கைகளைக் கூப்பி நமஸ்கரிப்பான். அவன் மனத்தினுள்ளே நாம் எப்படியும் விடுதலை யடைந்து விடுவோம் என்ற திடநம்பிக்கை குடிகொண்டிருந்தது. உலகிலுள்ள மாயைகளை பாவம் அவன் ஒன்றும் அறியான்!

இன்று தன் மனைவியே தன்னை இவ்விதம் கேட்கும்போது அந்த நம்பிக்கையை முற்றிலும் இழந்தான். இவ்வளவு மோசமான இவ்வுலகில் வாழ்வதைக் காட்டிலும் தூக்குமரத்திலே உயிர் விடுவதே நல்லது என்று தீர்மானித்தான். முன்பெல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்தவன் இப்போது 'கடவுளே! சீக்கிரம் நான் உனக்கு பலியாகிறேன். விரைவிலே என்னை ஏற்றுக்கொள்' என்று பிரார்த்திக்க ஆரம்பித்தான்.

மனிதர்கள் நினைத்தபடி எந்தக் காரியம்தான் முடிகிறது?

* * *

நீதி பரிபாலிக்கும் நியாயஸ்தலத்தார் சிலநாட்களிலே எள்ளுமுனை கூட நியாயம் தவறுமல் குப்புசாமிக்கு அடியிற்கண்ட தீர்ப்பை வாசித்தார்கள்:—

'இவன் பெரியசாமியைக் கொலை செய்துவிட்டு ஓடிவிட்டதனால் தூக்கு தண்டனை விதிக்க சட்டம் இடங்கொடுத்த போதிலும், அதற்கு சாதகமில்லாத சில காரணங்களைக்கொண்டு இவனுக்கு 26 வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.' அப்போது குப்புசாமி சொன்னான் 'நான் ஒரு பைத்தியக்காரன்! கடவுள் கடவுள் என்று அடித்துக் கொண்டேன். அந்தக் கடவுள் எனக்குப் பெரிய வெகுமதி கொடுத்திருக்கிறார். இப்போது சர்வேஸ்வரா! உனக்குக் கண்கள் இருக்கிறதா? கண்கள் இருந்தால் நிரபராதியாகிய என்னை இப்படிச் செய்து என் மனைவி மக்களை அநாதைகளாகும்படி செய்வாயா? நீ என்னைக் கைவிட்ட போதிலும் நான் உன்னை என்றும் மறக்கமாட்டேன்! நீ கொடுத்த இவ்வெகுமதியை நான் அன்புடன் பெற்றுக்கொள்ளுகிறேன். ஆனால் இனியேனும் கருணைகூர்ந்து என் அநாதை மனைவி மக்களைக் காப்பாற்று. நான் உன்னிடம் கேட்பது இவ்வளவுதான்' என்று சொல்லி தன் கண்களில் நீர்வீழ்ச்சி போல் கண்ணீரை வரவழைத்தான். அவனது உள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த கொந்தளிப்பை கண்ணீரானது சற்று மாற்றிக்கொண்டிருக்கும்போது சேவகர்கள் அவன் கைக்கு விலங்கிட்டு உள்ளே யழைத்துச் சென்றார்கள்.

* * *

சிறையிலிருக்கும்போது 'நான் இங்கிருக்கிறேன். என் மனைவியும் குழந்தைகளும் எங்கிருக்கிறார்களோ? என்ன செய்கிறார்களோ? அப்போதே மூத்து 'அப்பா தேருலேருந்து எனக்கு மிட்டாயி சீக்கியெல்லாம் ரொம்ப வாங்கிண்டு வாயா!' என்று கேட்டானே. நான் சொன்னேனே

'உனக்கு வேண்டியதெல்லாம் வாங்கிண்டு வரேண்டா கண்ணு' என்று. பாவி நான் எப்போது குழந்தைகளுக்கு அதெல்லாம் வாங்கிக்கொண்டுபோய்க் கொடுத்து அவர்கள் முகத்தைப் பார்க்கப் போகிறேன்?' என்று நினைக்கும் போது அவனது துக்கம் கண்டத்தை யடைக்கும். ஒரோர் சமயம் மயக்கம் போட்டு கீழேகூட விழுந்து விடுவான்.

அப்போது கூட 'கடவுளே நீதான் அவர்களைக் காப்பாற்ற வேண்டும்' என்று சொல்வான்.

காலையில் எழுந்ததும் ஒரு கும்பிடு போடுவான். இரவில் படுக்கப் போகும்போது ஒரு கும்பிடு போடுவான். யாரை நமஸ்கரிக்கிறான் என்பது அவனுக்குத்தான் தெரியும்.

இம்மாதிரி யெல்லாம் சிலவருடங்கள் செய்துகொண்டிருந்தான். இதையெல்லாம் மறந்துவிட வேண்டுமென்று அவன் உறுதி செய்தபோது அதுவெல்லாம் தானாகவே மறைய ஆரம்பித்தன. ஏறக்குறைய அம்முயற்சியில் அவன் வெற்றிபெறப்போகும் சமயம் அவனிருந்த சிறைக்கு ஒருநாள் இருபது பேர்களடங்கிய கைதிக்கும்பல் ஒன்றுவந்து சேர்ந்தது. அந்தக் கும்பலிலேயிருந்த ஒரு கைதிக்கு நமது குப்புசாமியின் அறைக்குப் பக்கத்திலிருந்த அறை தரப்பட்டது.

சாதாரணமாக சிறைச்சாலைகளில் கைதிகளுக்குள்ளே ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கை வரலாறுகளை சவிஸ்தாரமாகச் சொல்லிக்கொள்ளுவது வழக்கம். அதேபோல் ஒருநாள் நமது குப்புசாமியும் புதிய கைதி வடிவேலுவிடம் தன் துயரம் நிறைந்த வாழ்க்கையைப்பற்றிச் சொன்னான். அவன் ஜோதிபுரியிலிருக்கும்போது அவன் நினைத்திருந்த மனக்கோட்டைகளையும், அதுவெல்லாம் இப்போது நிராசையாகப் போனதையும் விண்டுவிண்டு சொல்லுவான். தன் குழந்தைகளையும், மனைவிகளையும்பற்றியே அடிக்கடி பேசுவான். துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனனான கடவுள் தன் விஷயத்தில் இவ்வளவு கலப்பற்ற கொடூரத்துடன் நடந்து கொண்டதைப்பற்றிக் கூட சொல்லுவான்.

அப்போதெல்லாம் வடிவேலு இவன் சொல்லுவதை நம்பாதது போலேயே காட்டிக் கொண்டான். ஒருநாள் இரவு இது விஷயமாகப் பேசும்போது வடிவேலு 'நீயும் பெரியசாமியும் ஒரே அறையில் படுத்திருக்கிறீர்கள். கதவை உட்பக்கம் சாத்திவிட்டுத்தானே படுத்திருப்பீர்கள்? வேறொருவன் எவ்விதம் உள்ளே நுழைய முடியும்? அப்படியே பின்பக்கம் வழியிருந்து உள்ளே வந்திருந்தாலும் பெரியசாமியைக் கொலை செய்துவிட்டு அந்த இரத்தக் கறையுள்ள கத்தியை உன் தலையணைக்கடியில் வைக்குமளவும் நீ தூங்கிக்கொண்டா இருந்திருப்பாய்?' என்று கேட்டான்.

அப்போது குப்புசாமி ஏதோ ஞாபக மூட்டிக்கொள்பவன் போல் தன் விழிகளை மேலுயர்த்திக்கொண்டான். அக்கணமே குப்புசாமிக்கு ஒரு சிந்தனை மின்னல்போல் அவன் மனத்துள் மின்னிச் சென்றது. அவன் இதுவரையிலும் தன் தலையணைக்கடியில் கத்தி யிருந்ததாக யாரிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. போலீஸ் சேவகர்கள் தன் படுக்கையை மிருகத்தனமாக கீழே உதறி எறியும்போது அதனுள்ளிருந்து கத்தி கீழே விழுந்தது. குப்புசாமி அந்த தலையணையை அப்போது பார்த்ததாக ஞாபகம்.

ஞாபகம் நிச்சயமானது என்று மனத்தினுள் ஏற்பட்டவுடனே, மெழுக்குப் போல் அழுக்கேறியிருந்த தலையணையிலும் இரத்தக் கறைபட்டிருந்தது என்ற ஞாபகம் ஸ்திரமாயிற்று.

குப்புசாமிக்கு நடுவில் இதை யெல்லாம் நினைத்துக் கொள்ளவோ, ஞாபகம் வைக்கவோ தனக்கேற்பட்ட கொடூர் துயரத்தால் முடியாது போயிற்று. ஆனால் அதைப்பற்றிய சம்பாஷணை இப்போது உண்டான போது திடீரென ஞாபகத்திற்கு வந்தது.

தன் உண்மைச் சரிதையை அவனிடம் கூற அவன் நம்பாததால் அவன்மீது குப்புசாமிக்கு முன்பெல்லாம் வெறுப்புத்தான் ஏற்பட்டது. 'தலையணையின் கீழ் கத்தியை வைக்குமளவும் நீ தூங்கிக்கொண்டா இருந்திருப்பாய்' என்ற சொற்கள் அவன் மீது வேறுவிதமான எண்ணத்தை இப்போது உண்டாக்கியது. 'ஒருக்கால் வடிவேலுதான் பெரியசாமியைக் கொலை செய்திருப்பானோ? கடவுளே!' என்றும் நினைத்தான்.

குப்புசாமிக்கு இந்த எண்ணம் ஏற்பட்டாலும் இதையெல்லாம் அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லை. வழக்கம்போலவே காலையும் மாலையும் கடவுளை நமஸ்கரித்துவிட்டு தன் வேலையைக் கவனிப்பான்.

* * *

ஏறக்குறைய குப்புசாமியின் சிறையனுபவம் 20 வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. இப்போது அவன் மனைவியே அவனைப் பார்த்தால்கூட 'இது யாரோ பெரிய கிழம்' என்று நினைப்பாளே தவிர 'இது என் கணவன்' என்ற வார்த்தை கூறுவதற்கு இடமில்லாதவனா யிருந்தான் குப்புசாமி. அவனது தாடியும், மீசையும், நீண்டு வளர்ந்திருந்த கேசமும் அம்மாதிரி சொல்லுவதற்கு காரணமாயிருந்தது.

இருபது வருடங்கள் என்றால் இலேசா என்ன ?

* * *

வடிவேலு வந்த சிலநாட்களுக்கெல்லாம் வடிவேலுவின் அறையில் இரவு நேரங்களில் ஏதோ சிறு சப்தம் கேட்பதுபோல் குப்புசாமிக்குத் தோன்றிற்று.

இரண்டொரு நாட்கள் சென்றபின்பு 'உன்னுடைய அறையிலே என்ன வடிவேலு சப்தம்' என்று கேட்டான்.

அதற்கு வடிவேலு 'இரவில் என் அறையிலே எலிகளின் உபத்திரவம் அதிகம்' என்று கூறினான்.

குப்புசாமி அதைக்கேட்டு பேசாமலிருந்துவிட்டான். ஓரோர் தினத்தில் கேட்கும் சப்தத்திலிருந்து இது எலிகளின் சப்தமாக இருக்க முடியாது. ஒரு ஆளாவது குழி தோண்டினால்தான் இவ்வளவு சப்தம் வரும் என்று ஊகித்தான். ஆனால் அதைப்பற்றி அவன் மீண்டும் வடிவேலுவைக் கேட்கவில்லை.

சிலநாட்கள் சென்றபின் வடிவேலு ஒரு சிறு துணி மூட்டையில் கல் மண் முதலியவைகளைக் கொண்டுவந்து முள்ளங்கிச் செடிக்கருகில் போட்டதை ஒரு சிறைக்காவலாளி கண்டதாயும், மறுநாள் பெரியதுரை எல்லாக் கைதிகளையும் அதைப்பற்றி விசாரிக்கப் போவதாயும் குப்புசாமிக்குத் தெரிந்தது.

அன்று இரவு குப்புசாமியிடம் வடிவேலு 'நண்பா! என் அறையிலிருந்து தப்பித்துக்கொண்டு ஓடி விடுவதற்காக சுரங்கம் செய்கிறேன். அதில் தோண்டிய மண்களை இத்தனை நாள் யாருக்கும் தெரியாமல் வெளியே கொட்டிவிட்டு வந்துகொண்டிருந்தேன். இன்றைக்கு அந்தக் கருமூஞ்சி வார்டர் அதைப் பார்த்து பெரிய துரையிடம்போய் சொல்லிவிட்டான் 'நண்பா! நாளைக்கு உங்கள் எல்லோரையும் பெரியதுரை விசாரிப்பான். எல்லாரையும் போலவே நீயும் எனக்கொன்றும் தெரியாது' என்று கூறிவிடு. நானும், நீயும் இன்னும் இரண்டு தினத்தில் இங்கிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிடலாம்' என்று கூறினான்.

அதற்கு குப்புசாமி 'நண்பா! நான் என்னமோ நிரபராதி. அப்படியிருந்தும் கடவுள் எனக்கு இக்கொடிய தண்டனையை விதித்திருக்கிறார். அவர் எனக் கிட்ட தண்டனையை மீறி, வெளியில் ஓடிவிட என் மனம் சம்மதியாது. இன்னும் எவ்வளவு கடினமானதாயிருந்தாலும் அவர் இட்ட கட்டளையை நான் நிறைவேற்றும் பாக்கியம் பெற்றேன் என்று கருதி அனுபவிக்கப் போகிறேன். நண்பா! இம்மாதிரி வார்த்தைகளையெல்லாம் இனிமேல் என் காதில் போடாதே' என்று சொன்னான்.

அன்றிரவு அவ்விருவரும் மறுபடி ஒன்றுமே பேசிக்கொள்ளவில்லை. வடிவேலு மனதிற்குள் என்ன நினைத்தானோ யாருக்குத் தெரியும்?

மறுதினம் சிறைக்காவலாளிகள் கைதிகள் எல்லோரையும் வரிசையாக நிற்க வைத்தார்கள். பெரியதுரை கையிலே ஒரு பிரம்பை வைத்து வளைத்து, வளைத்து ஆட்டிக்கொண்டே கைதிகளை விசாரணை செய்தார். சொல்லி வைத்ததுபோல் எல்லோரும் 'எனக்கொன்றும் தெரியாது' என்றே கூறி வந்தனர். குப்புசாமியின் முறை வரும்போது வடிவேலுவின் ஹிருதயம் சட்டென்று நின்றது. வழக்கமான கேள்வியை பெரிய துரை குப்புசாமிக்குப் போட்டார்.

'வடிவேலு மண் கொண்டுவந்து கொட்டின விஷயமாக உனக்கு என்ன தெரியும்?'

'எனக்கொன்றும் தெரியாது' என்று குப்புசாமி சொல்லியபோது வடிவேலுவின் நின்றுபோயிருந்த ஹிருதயம் கணத்துக்கு நூறுமுறை 'பட்டுப் பட்டென்று' அடித்துக்கொண்டது. குப்புசாமிதானா இப்படிச் சொல்லியது என்று அவன் நினைக்கும்போது இது கனவா நினைவா என்று அவனுக்குத் தோன்றவில்லை. வெளியிலே தெரியும் சிறைச்சாலைத் தோட்டம், எதிர்ப்புறமிருக்கும் சிறைக்கூடத்தின் பின்புறம், கையில் ஆடும் பெரியதுரையின் பிரம்பு முதலியவைகளால் இது கனவல்ல என்று நிச்சயித்தான்.

அன்றுமாலை வழக்கம்போல் கைதிகளுக்கு மாலைச் சாப்பாட்டிற்காக அறைகளைத் திறந்துவிட்டான் காவலாளி. வடிவேலு ஓடிப்போய் குப்புசாமியின் பாதங்களைக் கட்டிக்கொண்டான். அவன் பாதங்களை தன் முகத்தோடு வைத்துக்கொண்டு அழுதான்; கதறினான். அவனது கண்ணீர்த் துளிகள் உண்மையாகவே குப்புசாமியின் பாதங்களை நனைத்தன. 'நண்பா! நீதான் சத்தியவந்தன். நீதான் என்னைக் காக்கவந்த கடவுள். நான் துரோகி,

பாதகன், சண்டாளன். நீ இவ்வளவு கொடுமைக்கும் ஆளாகவேண்டி வந்தது என்னாலேதான் நண்ப! நான்தான் பெரியசாமியைக் கொலை செய்தவன். நாங்கள் எல்லாம் ஒரு கொள்ளைக் கூட்டத்தார்கள். பணத்தின் பொருட்டு பெரியசாமியைக் கொலை செய்துவிட்டு பழியை உன்மீது சுமத்தினேன். ஆனால் கடவுள் வேறு குற்றத்துக்காக எங்களுக்கும் தண்டனை விதித்து விட்டார். என்னை வாழ்விக்க வந்த தெய்வம் நீதான். நான் அதிகாரிகளிடம் உண்மையைக் கூறி என் பாவத்துக்குரிய தண்டனையை நான் ஏற்று உன்னை எப்படியும் விடுதலை செய்ய வைக்கிறேன். நண்ப! உன்னைப் போன்ற பல சத்தியவந்தர்களால்தான் உலகிற்கு இதுவரை பிரளயம் வராமலிருக்கிறது' என்றெல்லாம் பலவாறு கூறி கதறினான்.

குப்புசாமி சொல்வான் 'நண்பா, நடந்ததெல்லாம் நடந்துவிட்டது. நானும் அப்படி யிப்படி 20 வருடம் இப்பாழும் சிறையில் போக்கிவிட்டேன். இனியும் சிலகாலம் இங்கேயே யிருந்து என் வாழ்நாட்களை முடித்துக் கொள்ளுகிறேன். நண்ப! நான் இந்நிலைமையில் விடுதலையடைந்துபோய் என்ன செய்யப் போகிறேன். என் மனைவி மக்கள் உயிருடன் இருக்கிறார்களோ என்னவோ? அப்படி எங்கேயாவது இருந்தாலும் என்னை எங்கே அடையாளம் கண்டுபிடிக்கப் போகிறார்கள். என் குழந்தைகளெல்லாம் இப்போது பெரிய ஆளாகி யிருப்பார்கள். அவர்களை யெல்லாம் நானும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. நீ அதுவெல்லாம் ஒன்றும் செய்ய வேண்டாம்' என்று தன் கண்களில் கண்ணீரை வருவித்துக்கொண்டே கூறினான்.

• • •

குப்புசாமியும் 'எனக்கொன்றும் தெரியாது' என்று கூறியபோது வடிவேலுவினுடைய பாவகிருத்தியங்கள் எல்லாம் அவன் மனக்கண்முன்பு சினிமாப் படம்போல் தோன்றி மறைந்தது. அப்போதுதான் தான் புரிந்த பாவச் செய்கைகளுக்கு கடவுள் கட்டாயம் தண்டனை விதிப்பார் என்றுணர்ந்தான். கடவுள் ஒருவர் உண்மையாகவே இருக்கிறார் என்று அவன் உணர்ந்தது குப்புசாமியின் அச்சொற்களால்தான்.

வடிவேலு எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் பயனாக நீண்டமாத காலம் வரையிலும் புனர்விசாரணை நடந்தது. நியாயாதிபதிகள் பழைய தஸ்தாவேஜுக்கட்டுகளையும், வடிவேலு சொன்னவைகளையும் வைத்துக் கொண்டு புரட்டினதில் இப்போது 'குப்புசாமி குற்றவாளி யல்ல' என்று தீர்ப்பளித்தார்கள்.

மறுதினம் குப்புசாமியை விடுதலை செய்யப்போகிறார்கள். அன்றைய தினம் வடிவேலுவின் மனத்திலுள்ள மகிழ்ச்சி எல்லையற்றிருந்தது. என் நண்பனை—என்னை வாழ்விக்கவந்த தெய்வத்தை சொந்த முயற்சியால் விடுதலை செய்யப்போகிறோமே என்ற அவனது மட்டற்ற சந்தோஷம் ஆகாயமெல்லாம் பரவி பாதாளத்திலுள்ளும் புகுவதுபோலிருந்தது. அதனால் அவன் சற்று பெருமைகூடக் கொண்டான்.

மறுநாட்காலை இரண்டு காவலாளிகளுடனும், ஒரு சிறை அதிகாரியுடனும் குப்புசாமியின் அறைக்கு வந்தான் வடிவேலு. அந்த அறை திறக்கப் பட்டது. குப்புசாமி படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். வடிவேலு ஓடிப் போய் இச்சந்தோஷச் செய்தியை அவனிடம் தெரிவிக்க அவனைக் கூப்பிட்

சாஸ்திரப்படி நடப்பினும் சண்டாளனே யாவனோ!

[காரமடை S. குழந்தைசாமி]

ஆடி மாதம். அமாவாசைக்கு முந்தியதினம். காலை சுமார் 10 மணியிருக்கும். நான் எனது வீட்டில் சோபாவிலமர்ந்தவண்ணம் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தேன். அப்போது எங்களூர் புரோகிதர் சுப்பா சாஸ்திரிகள் 'பிரமபத்திரத்தின் தூளை' நாசித் துவாரங்களில் செலுத்திக்கொண்டே உள்ளே பிரவேசித்தார். உடனே ஆசனத்தை விட்டெழுந்து இரண்டு கைகளையும் கூப்பியவண்ணம் 'நமஸ்காரம் ஸ்வாமிகளே!' என்று முகமன்கூறி அவரை வரவேற்றேன். சாஸ்திரிகள் தனது இடது கையை தன் வயிறுவரை உயர்த்தியவண்ணம் 'என்ன குழந்தே! நாளை உன் தாயாருக்குத் தலைத்திதியாயிற்றே! ஒன்றும் கவனிக்காமலிருக்கிறாயே!' என்றார்.

'ஆமாம் ஸ்வாமி. நான் மறந்துவிட்டேன். நீங்கள் வந்து ஞாபகமூட்டியதற்காகக் கோடி நமஸ்காரம்.'

'ஹூம்...சூத்திரர்கள் மோக்ஷம் பெறுவதற்காக நாங்கள் இவ்வளவு பாடுபடுகிறோம். அந்த சு. ம. கும்பல் எங்களையே திட்டுகிறார்கள். அவர்களுக்கு கொஞ்சமாவது நன்றியிருக்கிறதா பார்!'

டான். அவன் ஆழ்ந்து உறங்கிக்கொண்டிருப்பதால் சப்தம் கேட்கவில்லையென்று நினைத்து அவன் கையைப் பிடித்து ஆட்டினான். அப்போது குப்புசாமியின் கைகன் மிகவும் சில்லிட்டிருந்தன. அங்கிருந்த நால்வரும் குப்புசாமியைக் கூர்ந்து கவனிக்கும்போது அவன் விழிப்பில்லாத மோஹன நித்திரையில் ஆழ்ந்துவிட்டான் என்று அவர்களுக்குத் தெரிந்தது.

* * *

துஷ்கிருத்தியங்களில் ஈடுபட்டவர்களுக்கு கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற நினைப்பே யுண்டாகாது. அப்படியிருந்த வடிவேலுக்கு குப்புசாமியின் வாழ்க்கைச் சரிதையில் கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உணர்ச்சி எற்பட்டது. ஆனால் இப்போது அக்கடவுளைத்தான் நேரில் பார்த்துவிட்டதாகவே கருதினான். அவனை அப்படி நினைக்க வைத்த கடவுள் குப்புசாமியைத் தவிர வேறு யார்!

'அவங்க கிடக்கிறாங்க சாமி. திதிக்கு என்ன செய்யவேண்டும்? அதைச் சொல்லுங்கள்.'

'என்னப்பா! நீ படிச்ச பிள்ளேயாச்சே. இதுகூடவா தெரியாது!'

'இல்லேங்கோ. சாஸ்திரப்படி தானே எல்லாம் செய்யவேண்டும்'

'ஆமாம். அதற்குச் சந்தேகமென்ன? சாஸ்திரம் தெய்வ வாக்கல்லவா!'

'சரி போங்க. எல்லாம் ஏற்பாடு செய்துவைக்கிறேன். ஆனல் தலேத்திதியாதலால் உங்களோடு இன்னும் இரண்டுபேரைக் கூட்டி வாங்கோ' என்று சொல்லி அனுப்பினேன். சாஸ்திரியும் ரொம்ப சந்தோஷத்துடன் தன் வீட்டுக்குத் திரும்பினர்.

சாஸ்திரத்திற்குக் கொஞ்சங்கூட முரண்பாடின்றி நான் எல்லா ஏற்பாடுகளும் செய்துவைத்திருந்தேன்.

மறுநாள் காலே சாஸ்திரிகள் வேறு இரண்டு பேர்வழிகளுடன் சரியாகக் குறிப்பிட்ட நேரத்திற்குக் கொஞ்சங்கூட மாற்றமின்றி எட்டுமணிக்கு என் வீட்டுக்கு வந்துசேர்ந்தார். மூன்று பேருக்கும் கூடத்தில் மூன்று ஆசனங்கள் போட்டு உட்காரும்படி செய்தேன். சாஸ்திரிகளின் பின்னல்வந்து வாசலில் நின்றுகொண்டிருந்த நான் காம் பேர்வழியைப் பார்த்து 'நீ யாரப்பா? பூணூல் இல்லாமல் வந்திருக்கிருயே. போ வெளியே!' என்று ஒருவித அதிகார தோரணை யில் சொன்னேன்.

அதற்குள் சாஸ்திரிகள், 'அப்பா! அவன் என்னுடைய ஆள். மூட்டை முடிச்சுகளேத் தூக்கிச் செல்வதற்காகக் கூட்டிவந்தேன். அவனே விரட்டாதே' என்ருர்.

'சுவாமிகளே! சிரார்த்தம் செய்யுங்காலத்தில் சிரார்த்தம் செய்து வைப்பவரின் வேலேக்காரணுகிய சூத்திரன் சமீபத்திலிருக்கலாகாது என்று சாஸ்திரம் சொல்கிறதே!'

'அதெல்லாம் கவனித்தால் முடியுமாப்பா?' என்ருர் சாஸ்திரிகள்.

'சரி' என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் சென்று தூபக்காலே எடுத்துக்கொண்டுவந்து புரோகிதர் பக்கத்தில் கிழக்குப் பார்த்து வைத்துவிட்டு மூன்று வாழைஇலேகளே அவர்களுக்கு முன்னல் விரித் தேன். பிறகு ஒவ்வொரு இலேயிலும் (முன்னமேயே சேகரித்து வைத்திருந்த) காட்டில் விளேந்த செந்நெல் அரிசி ஒவ்வொரு படி கொட்டினேன். புரோகிதர் சற்று திகைத்தார். பச்சரிசியாயில்லேயே என்ற எண்ணம் போலும். ஆனல் நான் அதைத் தெரிந்து கொள் ளாதவன்போல் பாவனே செய்துகொண்டு வெள்ளாட்டின் மாமிசம் 3 சேர், எருமைக்கடாவின் இறைச்சி மூன்றுசேர் பன்றியின் இறைச்சி 3 சேர் முதலியன கொண்டுவந்து பரிமாறினேன். அவர்கள்

மிகவும் திகைப்புற்று, 'சிவ! சிவ! இதென்னப்பா!' என்று கேட்டார்கள். எனக்கு 'இதானப்பா!' என்று கேட்டதுபோலிருந்தது. ஆதலால் நான் 'இல்லேங்கோ. இன்னும் இருக்கு' என்று சொல்லிக்கொண்டே வீட்டுக்குள்ளிருந்த வாளைமீன், நண்டு, ஆமை, காக்கை ஆகியவற்றில் ஒவ்வொரு வகையிலும் மும்மூன்றும், ஒரு புட்டி சோமலதையின்சாறும் (சாராயம்) கொண்டுவந்து வைத்துவிட்டு, 'அடியேன் கொடுத்தது கொஞ்சமேனும் அவற்றைச் சந்தோஷத்துடன் அங்கீகரித்துக்கொண்டு என் அன்னை மோக்ஷ சாம்ராஜ்யத்தையடையத் தாங்கள் அனுக்கிரகிக்க வேண்டும். திடீரெனத் தாங்கள் நேற்றுவந்து சொன்னதால் இன்னும் மற்ற பொருட்கள் சேகரிக்க முடியவில்லை. அடுத்த திதியில் பூரணமாகச் சேகரித்து வைக்கின்றேன்' என்று ஒரு சிறுபிரசங்கத்தின் மூலம் பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டேன்.

புரோகிதர்கள் இன்னது செய்வதென்று தோன்றாது மிளமிள விளித்துக்கொண்டு என்னைக் கோபத்துடன் பார்த்தனர். கொடுத்தது போதாதெனக் கோபித்துக் கொள்ளுகிறார்கள் என்று நினைத்து 'அதிகம் கொடுக்க முடியவில்லையே' என்று நினைத்து நானும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன்.

அப்போது சாஸ்திரிகள் என்னைப் பார்த்து, 'உன் தாயாருக்கு முதல் திதியாயிற்றே. நீ என்ன இப்படி அசிங்கமான பதார்த்தங்களைச் சேகரித்து வைத்திருக்கிறாயே!' என்று கடுகடுத்துக் கூறினார்.

'சுவாமி! சாஸ்திரப்படி எல்லா ஏற்பாடுகளும் செய்யவேண்டுமென்று நீங்கள்தானே சொன்னீர்கள். நமது சாஸ்திரங்களில் தலைசிறந்து விளங்குவதெனப் போற்றப்படும் மனுநீதி தருமசாஸ்திரத்தின் மூன்றும் அத்தியாயத்தில் 257 முதல் 271 வரையிலுள்ள சுலோகங்களின் விதிப்படிதானே நான் செய்திருக்கிறேன். இதில் குற்றமென்ன?' என்று மிகவும் ஆச்சரியத்துடன் கேட்டேன்.

சாஸ்திரிகள் மறுத்துப்பேச நாவின்றி மனம் பதார்த்தங்களில் லயிக்க கண்கள் வேலைக்காரனையும் மற்ற இருசாஸ்திரிகளையும் நோக்க நாக்கில் நீருவி பெருக 'சண்டாளா! சண்டாளா!' என்று கூறிக்கொண்டே நகரவாரம்பித்தனர். அப்போது நான் அவர்களை வழி மறித்து 'சுவாமி! மேலும் அந்த சாஸ்திரத்தின் 5-ம் அத்தியாயத்தில் 35-ம் சுலோகத்தில் நீங்கள் இதை மறுப்பீர்களானால் இருபத்தோரு ஜனனம் பசுவாகப் பிறப்பீர்களென்று சொல்லியிருக்கிறது. ஆதலால் இவற்றை எடுத்துக்கொண்டு போங்கள்' என்று வேண்டினேன். 'சீ! சண்டாளா!' என்று மீண்டும் கூறிக்கொண்டே புரோகிதர்கள் சென்றுவிட்டனர். சாஸ்திரப்படி நடப்பினும் சண்டாளனாவதெங்ஙனம்? வாசகர்களே! நீங்களே சொல்லுங்கள்.

காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களேயும், கட்டிகளேயும் ஆற்றும். மதுமேக நோயால் பிடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலேயில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளே ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பதாவது: உங்கள் ஆஸ்பத்திரி களிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜ கட்டிகள் (சைனஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேச பிழைக்காது என்று நினைக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தாராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்பரேஷன் செய்யாமல் இரணங்களே ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக் கொள்ளும் வரையில் உங்களால் முடியாத என்றபோது என்னிடமாவது அனுப்புங்கள். உங்கள் பார்வையும் வைத்துக் கொள்ளுங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும் டாக்டர் குருசாமி முதலியாருக்கும், கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்களுக்கும், பாண்டலே அவர்களுக்கும் ராம ஐயங்கார் அவர்களுக்கும் இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறு முறையும் கேட்டுக் கொளவ தாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலே; அறையாப்புக் கட்டி இவைகளேயும் எத்தகைய ராஜ கட்டிகளேயும், புரைப் புண்களேயும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேத்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளே நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்குமேல் பூசினுல் இரணம் ஆறிவிடும்.

விலே புட்டி 1-க்கு ரூபா 1.

குறிப்பு:—கணக்கற்ற இரணங்களும், இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இங்கு குறிப்பிடவில்லே.

எமது விலாசம்:—

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,

31, வைத்தியநாத முதலி தெரு, சென்னே.